# கோ’மதி.




தரங்கிணி ராஜாராம்
&
முத்துக்குமார் ராமலிங்கம்

கோபி ‘கோமதி’ என்று சொன்ன
அந்தத் தருணம், காரில் இருந்த
மற்ற நால்வரின் கற்மனைத் குதிரைகளும்
வெவ்வேறு திசைகளில் பறக்கத் தொடங்கின.

திடீர்னு ‘கோமதி’னு ஒரு பேரைச் சொல்லி
ட்விஸ்ட் வைக்கிற? யாருடா அது?

மாவரம்ல உன்னோட ‘ஸ்கூல் மேட்’டா?
இல்ல, காலேஜ் டைம்ல அங்க நீ பார்த்த
அழகான கிராமத்துப் பொண்ணா?”

நண்பர்கள் ஒருவரை ஒருவர் இடித்துக் கொண்டு,
கோபியைச் சுற்றி வளைத்து சிபிஜ போல
விசாரிக்கத் தொடங்கினர்.

நண்பர்கள் அனைவரும்
ஒரு சேரக் கத்தினார்கள்,

**“யார் அந்த கோமதி?!”**

பசுமை
பதிப்பகம்

ISBN 978-81-987654-0-1

*Tamil Short Story : கோமதி*

*Status – To be published, soon to be published*

*V020 / 29-May-2026*
*Words 13450 | Lines 2875*

**செ**ன்னை மாநகரத்தின் பரபரப்பான ஓஎம்ஆர் சாலை. காலை ஒன்பது மணிக்கே சூரியன் தன் வேலையைக் காட்டத் தொடங்கியிருந்தது. அந்தப் பெரிய கண்ணாடி கட்டிடத்தின் பத்தாவது மாடியில், 'லீட் சாஃப்ட்வேர் டெவலப்பர் & புராஜெக்ட் மேனேஜர்' என்ற பெயர்ப்பலகை தாங்கிய அறையில் கோபி அலுவலக வேலைகளில் மும்மரமாக மூழ்கியிருந்தான். அவனது விரல்கள் லேப்டாப் கீபோர்டில் அதிவேகமாக நடனமாடிக்கொண்டிருந்தன.

முப்பதுகளின் தொடக்கத்தில் இருக்கும் கோபிக்கு, இப்போது நீண்ட நேர வேலைப்பளுவின் அடையாளமாக முதுகில் ஒரு மெல்லிய வலி அவ்வப்போது எட்டிப்பார்க்கத் தொடங்கியிருந்தது. அவனுடைய மேசை முழுவதும் கணினிகளும், வயர்களும் நிறைந்திருந்தன. ஒரு காலத்தில் கிராமத்தில் ஓடி விளையாடிய கால்கள், இன்று குளிரூட்டப்பட்ட அறையில், சுழலும் நாற்காலியில் பிணைக்கப்பட்டிருந்தன. அவ்வப்போது தன் கழுத்தை நீவிவிட்டபடி, மேசையிலிருந்த வாட்டர் பாட்டிலிலிருந்து அடிக்கடித் தண்ணீர் குடித்துக்கொண்டிருந்தான்.

ஐடி நிறுவன வேலை என்பது ஒரு விசித்திரமான உலகம். காலையில் 'ஸ்டாண்ட்-அப்' மீட்டிங்கில் தொடங்கி, மாலையில் 'ஸ்டேட்டஸ் கால்' வரை எல்லாமே ஒரு ஓட்டப்பந்தயம் தான்.

இதோடு இந்த ஓட்டப்பந்தயம் முடிந்துவிடுவதில்லை. இப்போது ஐடி வாழ்க்கையின் புதிய 'கலை நிகழ்ச்சியே' இந்த ஜூம் மீட்டிங்குகள் தான். காலையில் கணினியைத் திறந்ததுமே 'டிங்' என்று வரும் அந்த அழைப்பு மணி, நம்மை ஒரு டிஜிட்டல் உலகிற்குள் இழுத்துச் செல்லும்.

தனது அலுவலக அறையில் லேப்டாப்பில் மூழ்கியிருந்த கோபியின் திரையில், இப்போது அவனது சக ஊழியர்களின் முகங்கள் ஆங்காங்கே கட்டம் கட்டித் தெரிந்தன.

கோபி அலுவலகத்திற்கு வந்து 'ஃபார்மல்' சட்டையில் மிடுக்காக அமர்ந்திருக்க, திரையில் தெரிந்த மற்ற நண்பர்களோ அவரவர் வீட்டின் படுக்கையறையிலோ அல்லது டைனிங் டேபிளிலோ தவம் இருந்து கொண்டிருந்தனர். வீடியோவை ஆன் செய்யச் சொல்லும் போதுதான் பலருக்குப் பதற்றமே வரும்.

கேமராவிற்குள் தெரியும் அந்தச் சிறிய கட்டத்திற்குள் மட்டும் ஒரு அலுவலகப் புலியாகத் தெரிவதற்காக, அவசரம் அவசரமாகத் தலையை வாரிக்கொண்டு, சட்டையைச் சரி செய்து அமர்வார்கள். ஆனால், அந்தக் கேமராப் பார்வைக்குக் கீழே, அவர்களுக்கு மட்டுமே தெரிந்த ரகசியமாக

ஒரு வசதியான பழைய ஷார்ட்ஸோ அல்லது பர்முடாஸோதான் இருக்கும் என்பது கோபிக்கும் தெரியும்!

ஒரு பக்கம் மீட்டிங் சீரியஸாகப் போய்க்கொண்டிருக்க, யாரோ ஒரு நண்பரின் பின்னணியில் குக்கர் விசில் சத்தம் சரியாக 'டெக்னிக்கல் டிஸ்கஷன்' நேரத்தில் ஓங்கி ஒலிக்கும். இன்னொருவர் வீட்டில் காய்கறி விற்பவர் 'தக்காளி... வெங்காயம்...' என்று கத்த, அதைச் சமாளிக்க முடியாமல் அவர் 'ஆம் ஐ ஆடிபிள்? நான் பேசுவது கேட்கிறதா?' என்று அப்பாவித்தனமாகக் கேட்டு மைக்கை மியூட் செய்வார்.

ஒரே நேரத்தில் மூன்று வெவ்வேறு மீட்டிங்குகளில் 'மல்டி-டாஸ்கிங்' செய்வதாக நினைத்துக் கொண்டு, ஒரு மீட்டிங்கில் கேட்கும் கேள்விக்குச் சம்பந்தமே இல்லாமல் இன்னொரு மீட்டிங்கில் பதில் சொல்லிவிட்டு, 'ஸாரி ஸாரி... நெட்வொர்க் இஷ்யூ' என்று மழுப்பும் வித்தையில் கோபியின் சில நண்பர்கள் இப்போது கைதேர்ந்தவர்கள்.

திரையில் இருக்கும் பல வண்ணக் கட்டங்களைப் பார்த்துப் பார்த்து, கண்கள் கலங்கிப்போய், இறுதியில் ஒரு நீண்ட பெருமூச்சுடன் அந்த மீட்டிங்கை முடிக்கும்போது, ஏதோ ஒரு பெரிய போர்க்களத்தை வென்று வந்தது போன்ற உணர்வு ஏற்படும். இந்த ஜூம் மீட்டிங்குகள் ஐடி வாழ்க்கையின் ஒரு தவிர்க்க முடியாத அங்கமாகிவிட்டன!"

"கோபி, அந்த புரோகிராம் சேஞ்ச், கோடு ரெடி ஆகிடுச்சா?", "கிளையன்ட் டெமோவுக்கு இன்னும் ரெண்டு மணிநேரம் தான் இருக்கு!" - இப்படிப்பட்ட அலறல்களுக்கு நடுவேதான் கோபியின் வாழ்க்கை நகர்ந்து கொண்டிருந்தது.

சமீபகாலமாக, ஐடி உலகத்தையே தூக்கமில்லாமல் ஆக்கிக் கொண்டிருக்கும் அந்த இரண்டு எழுத்துக்கள்: 'AI' என்கின்ற செயற்கை நுண்ணறிவு - கோபியின் வாழ்விலும் மற்றும் வேலையிலும் நுழைந்துகொண்டிருந்தது.

சாட் ஜிபிடி, ஜெமினி, கிளாட் என புதுப்புது அவதாரங்கள் எடுத்து வரும் இந்த ஏஐ தொழில்நுட்பம், மென்பொருள் பொறியாளர்களின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கிக் கொண்டிருந்தது. "நாளைக்கு நாம கோடிங் பண்ண தேவையில்லை, இந்த மெஷினே எல்லாத்தையும் எழுதிடும் போலிருக்கே!" என்று கோபியின் ஜூனியர்கள் பயந்து போயிருந்தனர். கோபிக்கும் அந்த பயம் இல்லாமலில்லை. ஏஐ கொடுக்கும் 'சஜஷன்ஸ்' சில நேரங்களில் அவன் பல வருடங்களாகக் கற்ற வித்தையையே தூக்கிச் சாப்பிடும் போலிருக்கும்.

* * * * *

"டேய் கோபி! இந்த ஏஜ, கோடிங், டெஸ்டிங், டிப்ளாய்மென்ட், ஜூம் மீட்டிங் எல்லாத்தையும் இரண்டு நாளைக்கு ஓரங்கட்டி வைப்போம்டா," என்றான் அவன் நண்பன் ரமேஷ். அந்த வார இறுதியில் நீண்ட விடுமுறை வந்ததால், கோபியும் அவனது நண்பர்கள் - ரமேஷ், அலெக்ஸ், தீபன் மற்றும் கார்த்திக் - ஒரு மாறுதலுக்காக எங்காவது வெளியூர் செல்லத் திட்டமிட்டனர்

"நாம ஏன் ஊட்டிக்கு போகக்கூடாது?" என்று ரமேஷ் கேட்க, தீபனோ அதை மறுத்தான். "ஊட்டி ரொம்ப கமர்ஷியலைஸ்டு ஆகிடுச்சுடா, அங்க கூட்டம் அள்ளும். நிம்மதியே இருக்காது," என்றவன், "ஏற்காடு போலாமா?" என்று ஒரு ஐடியாவைத் தூவினான்.

அலெக்ஸ் உடனே குறுக்கிட்டு, "ஏற்காடு நான் இப்பதான் ரீசண்டா போயிட்டு வந்தேன். நாம ஏன் கொடைக்கானல் போகக்கூடாது?" என்றான்.

கொடைக்கானல் என்ற பெயரைச் சொன்னவுடனேயே எல்லோருக்கும் ஒரு தனி உற்சாகம் வந்துவிட்டது. "சூப்பர்! கொடைக்கானலே போகலாம்," என்று அனைவரும் ஒருமனதாகச் சம்மதித்தனர். அங்கிருக்கும் அருவிகள், கண்ணுக்கு இதமான மேகக் கூட்டங்கள் மற்றும் ஏரி என இயற்கையோடு ஒன்றி இருப்பது, தங்களுக்குத் தேவையான ஒரு உற்சாகம் மற்றும் ஒரு ரீஜுவனேஷனை கொடுக்கும் என்று அவர்கள் நம்பினார்கள்.

“சரிடா, ஆனா போற வழியில ஒரு சின்ன ஸ்டாப். என்னோட சின்ன வயசு ஊரான மாவரம் கிட்டத்தட்ட அந்த ஏரியால தான் இருக்கு. அங்க ஒரு விசிட் அடிச்சுட்டுப் போலாம்," என்றான் கோபி. நண்பர்களும் உற்சாகமாகச் சம்மதித்தனர்.

பயணம் தொடங்கியது. கோபியின் பெரிய காரில் நண்பர்கள் ஐவரும் கிளம்பினர். கோபிதான் டிரைவிங் சீட்டில் இருந்தான். திண்டுக்கல் தாண்டியதும் ஒரு நெடுஞ்சாலை உணவகத்தில் காபி குடிக்க வண்டியை நிறுத்தினர்.

"மாஸ்டர், ஐந்து பேருக்கு ஸ்ட்ராங் பில்டர் காபி," என்று வேகமாக ஆர்டர் செய்தான் ரமேஷ்.

"எனக்கு மட்டும் ஒரு பிளாக் காபி, சர்க்கரை இல்லாமல்," என்றான் கோபி.

மதிய உணவின் போதும் இதே நிலைதான். நண்பர்கள் நெய் மணக்க மணக்கச் சாப்பிட்டுக் கொண்டிருக்க, கோபி மட்டும் தயிர், நெய், பன்னீர்

என எந்த ஒரு பொருளையும் தொடாமல் காய்கறி உணவை மட்டும் சாப்பிட்டான்.

"என்னடா கோபி, காலையிலயிருந்து பார்க்கிறேன்... ஒரு சொட்டுப் பால் கூட சேர்த்துக்க மாட்டேங்கிற? நீ சின்ன வயசுல மாட்டுப்பண்ணை வச்சிருந்த குடும்பம்னு ஒரு வாட்டி கூட சொன்னியே, அப்புறம் ஏன் இப்படி?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் நண்பன் அலெக்ஸ்.

வண்டி மீண்டும் மாவரம் நோக்கி விரைந்து கொண்டிருந்தது. நண்பர்களின் மீண்டும் மீண்டும் கேட்டு வற்புறுத்தல் அதிகமாகவே, கோபி மெல்லப் பேசத் தொடங்கினான்.

"நான் ஏன் பால் குடிக்கிறதில்லைன்னு நான் விளக்குறதை விட, என் 'கோமதி'யே சொன்னா இன்னும் நல்லா இருக்கும்," என்றான் கோபி அமைதியாக.

நண்பர்கள் அனைவரும் ஒரு சேரக் கத்தினார்கள், "யார் அந்த கோமதி?!!"

கோபி 'கோமதி' என்று சொன்ன அந்தத் தருணம், காரில் இருந்த மற்ற நால்வரின் கற்பனைத் குதிரைகளும் வெவ்வேறு திசைகளில் பறக்கத் தொடங்கின.

ரமேஷ் தனது கண்களைச் சுருக்கி, ஏதோ ஒரு பழைய காதல் திரைப்படத்தின் காட்சியை மனக்கண்ணில் ஓட்டியபடி கேட்டான், "டேய் கோபி, என்னடா ஒரு நிமிஷத்துல கதையையே மாத்திட்ட? இவ்வளவு நேரமா உன்னோட சின்ன வயசு நினைவுகள்னு ஏதோ சீரியஸா சொல்லுவேன்னு பார்த்தா, திடீர்னு 'கோமதி'னு ஒரு பேரைச் சொல்லி ட்விஸ்ட் வைக்கிற? யாருடா அது? மாவரம்ல உன்னோட 'ஸ்கூல் மேட்'டா? இல்ல, காலேஜ் டைம்ல அங்க நீ பார்த்த அழகான கிராமத்துப் பொண்ணா?"

தீபன் தன் பங்குக்கு, "கண்டிப்பா அப்படித் தான் இருக்கும்டா! அந்தப் பேரே எவ்வளவு அழகா, ஒரு தமிழ் சினிமா ஹீரோயின் பேர் மாதிரி இருக்குல்ல! ஒருவேளை, நீ ஐடி-க்கு வர்றதுக்கு முன்னாடி அவகிட்ட உன் காதலைச் சொல்லாம விட்டுட்டியா? இப்போ அங்க அவளைத் தான் பார்க்கப் போறோமா?" என்று ஆர்வமாகக் கேட்டான்.

மற்றொரு நண்பன் கார்த்திக் சிரித்துக்கொண்டே, "ஆமாடா, கோபி... அந்த 'கோமதி'க்கு இப்போ கல்யாணம் ஆகி குழந்தை குட்டின்னு இருப்பாங்களா? இல்ல இவன் இன்னும் அவங்க நினைப்புல தான் ‘பால்’ குடிக்காம விரதம் இருக்கானா?" என்று கிண்டல் செய்தான்.

அவர்கள் கற்பனையில் கோமதி, தாவணி அணிந்த ஒரு அழகான கிராமத்துப் பெண்ணாகவோ அல்லது ஒரு பழைய தோழியாகவோ உருவெடுத்துக் கொண்டிருந்தாள்.

நண்பர்கள் ஒருவரை ஒருவர் இடித்துக் கொண்டு, கோபியைச் சுற்றி வளைத்து சிபிஐ போல விசாரிக்கத் தொடங்கினர். மீண்டும், நண்பர்கள் அனைவரும் ஒரு சேரக் கத்தினார்கள், "யார் அந்த கோமதி?!

கோபி புன்னகைத்தான். "அதை இப்பவே நான் சொல்லிட்டா சுவாரசியம் போயிடும். இதோ மாவரம் வந்தாச்சு. இங்கதான் நான் வளர்ந்தேன். இந்த மண்ணுக்கும், எனக்கும், கோமதிக்கும் இடையில ஒரு பெரிய கதையே இருக்கு. அவளோட குரலை நீங்க சீக்கிரம் கேட்பீங்க...

நாம மாவரத்துக்குள்ள நுழையப்போறோம். இதோ... அந்தப் பழைய ஆலமரம் தெரியுது பாருங்க, அங்கிருந்துதான் என்னுடைய கோமதியோட உலகம் தொடங்கியது!

நண்பர்களின் ஆவல் இப்போது இன்னும் அதிகமானது..... யார் அந்த கோமதி?!!

* * * * *

'ம்மா' 'ம்மா' என்று கத்திக்கொண்டே அம்மா லட்சுமியை தேடிக் கொண்டு சென்றேன்.

இது காலை ஆறு மணியாக இருக்கும் என்று நினைக்கிறேன். மார்கழி சூரியன் மெதுவாக மந்தமாக தலை காட்டிக் கொண்டு இருந்தது. இந்த காலைப் பொழிதின் மெல்லிய குளிர்ச்சியும், இனிய காற்றும் என்னை உற்சாகப் படுத்தியது.

மார்கழி மாத காலை பூஜைகள் பக்கத்திலிருக்கும் சிவன் கோவிலில் முடிந்து கொண்டிருந்தது. கோவிலின் மணி ஓசைதான் எனக்கு கடிகாரம்.

கோபி ஓடி வந்து என்னைக் கட்டிப் பிடித்து செல்லம் கொஞ்சி விட்டு நெற்றியில் முத்தமிட்டு விட்டு, அவசர அவசரமாக, சிவன் கோவிலில் மார்கழி பிரசாதம் முடிந்துவிடுமோ என்ற அச்சத்தில் ஓடினான். கோபி அடிக்கடி வந்து இப்படி என்னை தடவிக் கொடுத்து செல்லம் கொஞ்சி விட்டுச் செல்வான்.

கோபி பக்கத்திலிருக்கும் பள்ளியில் ஐந்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறான். அவன் அப்பா கதிர்வேலு மற்றும் அம்மா காமாட்சி, என்னையும், என் அம்மாவையும் சேர்த்து சுமார் நாற்பது பசுமாடுகளை வைத்து பசுமை மாட்டுப் பண்ணையை வீட்டிற்கு அருகில் நடத்தி வருகின்றனர். எனக்கு ஆசையாய் கோமதி என்று பெயர் வைத்ததே இந்த கோபி தான்.

பசுமை மாட்டுப் பண்ணை இருப்பது மதுரை அருகிலுள்ள மாவரம் என்ற சிறிய கிராமத்தில். மாவரம் வைகை ஆற்றின் கரையில் உள்ள சிறிய ஊர். அறுபது அல்லது எழுபது வருடங்களுக்கு முன்னால் கிராமங்கள் மிகவும் பசுமையாக இருந்தன. ஆனால், வைகை ஆற்றின் நீர் வரத்து குறைந்ததாலும், மனிதர்களின் வாழ்க்கை முறை மாறியதாலும், முன்னேற்றம் என்ற பெயரில் இயற்கை வளங்கள் குறைந்ததாலும் இப்பொழுது, அவ்வளவு பசுமையாக இல்லாமல் இருக்கிறது என்பதை என் அம்மா லட்சுமியிடம் பேசும் போது தெரிந்து கொண்டேன்.

* * * * *

விடியற்காலை ஐந்து மணிக்கே பண்ணை விழித்துக்கொள்ளும். ஆனால், பண்ணையின் உண்மையான 'அலாரம்' சேவல் அல்ல, கதிர்வேலுவின் உதவியாளர் குமரன்தான்.

குமரன் ஒரு விசித்திரமான மனிதர். மாடுகளிடம் பேசுவதுதான் அவருக்கு உலகத்திலேயே பிடித்தமான வேலை. "ஏய் லட்சுமி! என்ன இன்னைக்கு மூஞ்சிய ஒரு மாதிரியா வச்சிருக்க? நேத்து ராத்திரி கனவுல புண்ணாக்கு மூட்டை வராம, வெறும் வைக்கோல் கட்டு வந்துச்சா?" என்று அவர் மாடுகளிடம் கேட்கும் கேள்விகள் பண்ணை முழுவதும் எதிரொலிக்கும்.

பண்ணையின் ஒரு பகுதியில் காமாட்சி பெரிய அண்டாவில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருக்க, கோபி தன் பள்ளிப் பையைத் தூக்கிக்கொண்டு ஓடி வருவான். அவனுக்குப் பள்ளிக்குப் போவதை விட, என்னோடும் என் அம்மா லட்சுமியோடும் விளையாடுவதே பிடிக்கும்.

அன்று காலை, கதிர்வேலு மாடுகளுக்குத் தீவனம் போட்டுக் கொண்டிருந்தார். குமரன் ஒரு வாளியுடன் வந்து, "ஐயா, இந்தச் செவலை மாடு இன்னைக்கு ரொம்ப தெம்பா இருக்கு. ஆனா, அந்தப் புதுசா வந்த மாடு மட்டும் நம்ம ஊர் பாஷை புரியாம முழிக்குது" என்றார் சீரியஸான முகத்துடன்.

கதிர்வேலு சிரித்துக்கொண்டே, "ஏன் குமரா, அதுக்கு என்ன இங்கிலீஷ்லயா பாடம் நடத்தச் சொல்ற? தீவனத்தை வச்சியா இல்லையா?" என்றார்.

"தீவனத்தை வச்சிட்டேன் ஐயா. ஆனா அது என்கிட்ட 'ஏன் தம்பி, இன்னைக்குப் பருத்திக்கொட்டை கொஞ்சம் கம்மியா இருக்கு?'ன்னு கேக்குற மாதிரி ஒரு பார்வை பாக்குது" என்று குமரன் சொல்ல, அருகே இருந்த கோபி விழுந்து விழுந்து சிரித்தான்.

"அப்பா, குமரன் அண்ணன் சொல்றது நிஜமா? மாடு நிஜமாவே பேசுமா?" என்று கோவிலில் கொடுத்த பொங்கலை ருசித்துக்கொண்டே கேட்டான் கோபி.

"பின்ன இல்லையா தம்பி? இந்த லட்சுமி இருக்காளே... இவ ஒரு பெரிய வம்புக்காரி. பக்கத்துத் தொழுவத்துல இருக்குற மாடு அதிகமாப் புல்லு சாப்பிட்டா போதும், உடனே 'ம்மா'ன்னு கத்தி என்கிட்ட புகார் குடுப்பா" என்று குமரன் அடித்து விட, காமாட்சி அடுக்களையிலிருந்து எட்டிப்பார்த்தார்.

"ஏம்பா குமரா! நீ மாடுகூட பேசுறது போதும். முதல்ல பால் வாளிகளை எடுத்துட்டு வா.

கோபி என் அருகில் வந்து, கோவிலில் கொடுத்த பொங்கல் பிரசாதத்தை அவன் சாப்பிட்டது போக மீதியை ஆசையாக என் வாயிலும் சிறிது ஊட்டி விட்டான். நான் அதை ருசித்துச் சாப்பிடுவதைப் பார்த்து, "அம்மா! கோமதிக்குக் கூடப் பொங்கல் பிடிச்சிருக்கு பாரு!" என்று கத்தினான்.

குமரன் விடவில்லை, "தம்பி, அதுக்கு சர்க்கரைப் பொங்கலை விட வெண்பொங்கல் தான் ரொம்பப் பிடிக்கும். அதுவும் மிளகு தட்டுப்பட்டா, தும்மல் போட்டு என்னை ஒரு வழி பண்ணிடும். நீ வேணா அடுத்த மாசம் வரப்போற பொங்கல் பண்டிகை அப்ப பாரு" என்று அவர் சொல்ல, பண்ணையே சிரிப்பால் நிறைந்திருந்தது.

சிறிது நேரத்தில் பால் கறக்கும் சத்தம் 'சுருக் சுருக்' என்று இசையாய் ஒலிக்கத் தொடங்கியது.

பண்ணையின் ஒரு பக்கம் மாடுகளின் சாண வாசனையும், மறுபக்கம் காமாட்சி காய்ச்சும் பாலின் நறுமணமும் கலந்து ஒரு கிராமத்து வாசனையைத் தந்தது. அந்த நேரத்தின் லேசான குளிரும், சூரியனின்

மெல்லிய வெயிலும் பண்ணையை ஒரு அழகான ஓவியம் போலக் காட்டியது.

குமரன் அந்தச் சமயம் பார்த்து, "ஐயா, நம்ம கோமதிக்கு இப்போதெல்லாம் அறிவு ரொம்ப அதிகமாயிடுச்சு. எண்ணிக்கை கூட தெரியுது. அதுக்குக் காரணம் இப்பதான் புரியுது. நம்ம கோபி தம்பி தான் அதோட காதுல ஏதோ ரகசியம் பேசிட்டு, எதையாவது சொல்லிக் கொடுத்துட்டே இருக்கான். ஒருவேளை அதுக்குக் கணக்கு பாடம் சொல்லிக் குடுக்குறானோ?" என்று சந்தேகமாகக் கேட்க, காமாட்சி சிரித்துக்கொண்டே "அவனுக்குத் தெரிஞ்சதே அஞ்சாவது வாய்ப்பாடு தான். அதுல இவன் கோமதிக்கு என்னத்தச் சொல்லிக் குடுக்கப் போறான்?" என்றார்.

என்னை மீண்டும் தடவிக் கொடுத்து நெற்றியில் முத்தமிட்டு கொஞ்சிக் கொண்டிருந்த போது, "ஏய், கோபி! என்ன பண்ணிட்டிருக்க? ஸ்கூலுக்கு லேட்டாகப் போகுது. குளிச்சிட்டு கிளம்பணும். கோமதியை கொஞ்சியது போதும். சீக்கிரம் வா என்ற அவன் அம்மா காமாட்சியின் குரல் அவனை வேறு உலகத்திற்கு கூட்டிச் சென்று வீட்டிற்குள் ஓட வைத்தது.

கோபி தன் பள்ளிச் சீருடையை அணிந்து கொண்டு, ஒரு பெரிய டம்ளர் நிறையப் பாலைக் குடித்துவிட்டு, "வரேன்ப்பா... வரேன் குமரன் அண்ணே!" என்று கத்திக் கொண்டே பள்ளிக்கு ஓடினான். அவன் ஓடும் திசையைப் பார்த்து லட்சுமி ஒருமுறை மென்மையாக 'ம்மா' என்று குரல் கொடுத்தது, அது ஒரு வாழ்த்தைப் போல அந்தப் பண்ணை முழுவதும் எதிரொலித்தது. எனக்கும் கோபியுடன் பள்ளிக்கு போக ஆசையாய் இருந்தது.

* * * * *

கோபியும் நானும் நல்ல நண்பர்கள். நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவன் என்னிடம் வந்து கொஞ்சி விளையாடி விட்டுச் செல்வான். நிறைய விஷயங்களை என்னிடம் பகிர்ந்து கொள்வான். அவன் சொல்வது எனக்குப் புரியும். ஆனால் எனக்குப் புரியும் என்று அவனுக்கு தெரியுமா என்று தெரியவில்லை.

பசி எனக்கு தலை தூக்கியது. மீண்டும் 'ம்மா ம்மா' என்று கத்திக்கொண்டு அம்மாவை தேடிக் கொண்டு ஓடினேன். எப்பொழுதும் இருக்கும் இடத்தில் அம்மாவைக் காணவில்லை. அப்பொழுது என் குரலுக்கு பதில் குரலாக மா, மா என்ற குரல் கேட்டு அந்த திசையில் ஓடினேன்.

பசுமைப் பண்ணையின் வலதுபுற கோடியில் மாடுகளை எப்பொழுதும் குளிப்பாட்டும் இடத்தில் இன்று லட்சுமி அம்மாவை குமரன் குளிப்பாட்டிக் கொண்டு இருந்தான். நான் ஓடிப் போய் அம்மா மடியில் ஒரு முட்டு முட்டி எனக்காக பிரத்யேகமாக என் அம்மாவால் தயாரிக்கப்பட்ட என் தாய்ப்பாலை குடிக்க ஆரம்பித்தேன். என்ன மகிழ்ச்சி?! என்ன ஆனந்தம்?! தாய் மடியை முட்டி முட்டி பால் குடிப்பது எனக்கு மட்டுமல்ல எல்லா கன்றுக்குட்டிகளுக்கும் பேரானந்தம் தான்.

எல்லா மகிழ்ச்சியான தருணங்களுக்கும் ஒரு முடிவு உண்டு என்பதை உணர்த்தும் வகையில் இரண்டு மூன்று நிமிடங்களுக்குள் அங்கிருந்த குமரன் என்னை வலுக்கட்டாயமாக என் அம்மாவிடமிருந்து பிரித்து கன்றுக் குட்டிகளுக்கென்று தனியாக இருக்கும் மாட்டுக் கொட்டகைக்குக் கூட்டிச்சென்றான். அங்கு தாய்பாலுக்கு பதிலாக வைக்கோல், புண்ணாக்கு போன்ற வேறு சில உணவுகளை குமரன் எனக்கு வற்புறுத்திக் கொடுத்தான். அவை எனக்கு சுத்தமாக பிடிக்கவில்லை. அம்மாவின் பாலுக்கு எந்த உணவு தான் ஈடாகும்?

அன்றைய நாள் மற்ற கன்றுக்குட்டிகளோடு குதித்து விளையாடுவதிலும், மாலை வேளையில் கோபியுடன் விளையாடுவதிலும் சென்றது.

மறுநாள் காலை அம்மாவின்பாலை குடிக்கும் ஆவலில் சீக்கிரமாகவே எழுந்துவிட்டேன். மணி நாலரை இருக்கலாம் கதிர்வேலு, குமரன் மற்ற எல்லோரும் இன்னும் தூங்கிக் கொண்டு இருக்கிறார்கள்

நான் சிறு கன்றுக் குட்டியாக இருப்பதால் நல்ல வேளையாக என்னை இன்னும் கட்டிப் போடவில்லை. இன்றும் ம்மா, ம்மா என்று கத்திக் கொண்டு அம்மா இருக்கும் இடத்துக்கு ஓடினேன். இன்றும் மடியை ஒரு முட்டு முட்டி பால் குடிக்கத் தொடங்கினேன். நான் பால் குடிப்பது எனக்கு மகிழ்ச்சி என்றால், அதைவிட ஆயிரம் மடங்கு மகிழ்ச்சி என் அம்மாவிற்கு பால் கொடுப்பதில். இன்று நான் சீக்கிரம் சென்று விட்டதாலும், யாரும் அருகில் இல்லாததாலும் வேண்டிய மட்டும் வயிறு நிரம்ப ஆனந்தமாய் பாலைக் குடித்தேன். என் அம்மாவின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் தெரிந்தது.

குடித்து முடித்ததும் அம்மாவிடம் நேற்று ஏன் என்னை முழுவதும் பால் குடிக்க விடாமல் கொட்டகைக்கு இழுத்துச் சென்று வேறு உணவுகள் கொடுத்தார்கள் என்று ஆச்சர்யத்துடன் கேட்டேன்.

"உன் கேள்வி மிகவும் நியாயமான கேள்வி தான். ஆனால் அதற்கு பதில் சொல்ல இப்பொழுது அவகாசம் இருப்பதாகத் தெரியவில்லை. மாலை

சரியாக ஆறு மணிக்கு இதே இடத்திற்கு வா. விரிவாக பதில் சொல்கிறேன்" என்றாள் லட்சுமி அம்மா.

இது என் ஆர்வத்தைத் தூண்டி விடவே, மிகச் சரியாக மாலை ஆறு மணிக்கு அம்மாவிடம் சென்றேன். அம்மா சொல்ல ஆரம்பித்தாள்.

"எல்லா மிருகங்களும் அவைகளுடைய தாயின் பாலை மட்டுமே அதுவும் முதல் ஒரு சில வருடங்கள் மட்டும் குடிக்கும். எந்த ஒரு மிருகமும் இனம் மாறி பால் குடிப்பதில்லை. மனித இனம் மட்டுமே, இனம் மாறி, என் போன்ற மாடுகளிடமிருந்து உன் போன்ற கன்றுக் குட்டிகளுக்காகச் சுரக்கும் பாலைக் கறந்து பயன்படுத்துகிறார்கள்.

என் போன்ற மாடுகளிடமிருந்து கறந்த பாலை பாலாகவும், காஃபி, டீயாகவும், தயிர், வெண்ணெய், பனீர், நெய், சீஸ் போன்ற பால் சார்ந்த பொருட்கள் ஆகவும் சாப்பிடுகிறார்கள். நீயே எல்லா பாலையும் குடித்துவிட்டால் அவர்கள் தேவைகளுக்கு பால் இருக்காது. அதனால் தான் குமரன் உன்னை என்னிடமிருந்து முழுமையாக பால் குடிக்கவிடாமல் தடுத்து வேறு உணவுகளை உனக்குக் கொடுத்துள்ளான்.

அம்மா சொன்னதைக் கேட்டதும் எனக்கு ஒரே ஆச்சரியமாகவும், அதிர்ச்சியாகவும் இருந்தது. இதுவரை இதைப் பற்றி எனக்குத் தெரியவே தெரியாது. நான் என் லட்சுமி அம்மாவிடம், "அம்மா... அம்மா... நம்ம பாலை மத்தவங்க குடிக்கிற மாதிரி, மனுஷங்களோட பாலையும் மத்தவங்க குடிப்பாங்களா?" என்று கேட்டேன்.

அதற்கு அம்மா, "இல்லை, மனுஷங்களோட பால் அவங்களுக்கு மட்டும்தான். அதுவும் அவங்க பெத்த குழந்தைகளுக்கு மட்டும்தான் குடுப்பாங்க. சாதாரண சூழ்நிலையில மத்த குழந்தைகளுக்கே அதைக் குடுக்க மாட்டாங்க. அவங்க அவங்க சொந்த குழந்தைகளுக்கு மட்டும்தான் அது," என்று கூறினாள்.

கோபியின் அம்மா காமாட்சியின் பால் கோபிக்கு மட்டுமே. ஆனால் என் அம்மா மற்றும் மற்ற மாடுகளின் பாலை மனிதர்கள் அருந்தலாம். இது எப்படி நியாயமாகும் என்று என் அம்மாவை ஆச்சர்யத்துடன் கேட்டேன். என் அம்மா தொடர்ந்தார்.

"இது நம்மை ஆலோசிக்காமல், நம்முடைய ஒப்புதல் இல்லாமல் மனிதர்களாகவே ஏற்படுத்திக் கொண்ட வழக்கம், கோமதி. ஒரு புறம் மாடுகளை தெய்வமாகவும், லட்சுமியாகவும், காமதேனுவாகவும்

வழிபட்டாலும், நம் போன்ற மாட்டு இனங்கள் படும் கஷ்டங்கள் சொல்லி மாளாதது.

"கஷ்டங்களா?" என்று என் அம்மாவை நான் கேள்விக்குறியுடன் பார்க்க, என் அம்மா தொடர்ந்தார்.

"மாடு மற்றும் பிற மிருகங்கள் தோன்றி பல லட்சக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகே மனிதர்கள் பூமியில் தோன்றினார்கள்.

மனிதர்களும் நம்மைப் போலவே தாவர உணவுகளையே பெரும்பாலும் உண்டு வாழ்ந்தார்கள். பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பு தீவிர வறட்சியால் தாவர உணவுகள் கிடைக்காத போது நம் போன்ற மாட்டின் பாலை உண்டு வறட்சியிலிருந்து உயிர் தப்பினார்கள்.

நெடுங்காலமாக காட்டில் நம்மைப் போன்று அலைந்து திரிந்த மனிதர்கள் விவசாயம் செய்து தங்கள் உணவை தாங்களே தயார் செய்ய கற்றுக் கொண்டனர். விவசாயம் செய்வதற்கு, நிலத்தை உழுவதற்கு நம்மைப் போன்ற மாடுகளின் உழைப்பும், ஒத்துழைப்பும் அவர்களுக்கு தேவைப்பட்டது.

இதற்காக மனிதர்கள் நமக்கு உணவளித்து நம் உழைப்பை விவசாயத்திற்கு பயன்படுத்திக் கொண்டு நம் பாலையும் உணவாக பயன்படுத்தத் தொடங்கினர். இன்னும் கொடுமை என்னவென்றால் பல பகுதிகளில் நம்மையே கொன்று நம் உடலை உணவாகவும், நம் தோலை உடையாகவும் பயன்படுத்தத் தொடங்கினர்.

தீராத வறட்சியில் அவசரகால உணவாக உதவிய பாலை அத்தியாவசியமான உணவாக மாற்றிவிட்டான் மனிதன். இன்று பால், பால் சார்ந்த பொருட்கள் இல்லாத உணவுகளே இல்லை என்ற நிலமை ஏற்பட்டுவிட்டது. இதனால் நம் வாழ்வும் மனிதர்களின் வாழ்வோடு இரண்டற கலந்துவிட்டது. இதனால் மனிதர்கள் வாழ்வு நன்றாக மேம்பட்டாலும் நம் வாழ்வு பல கஷ்டங்களும், வலிகளும் நிறைந்ததாக ஆகிவிட்டது.

அம்மா கூறி முடித்த இந்த விஷயங்கள் என்னை ஆச்சரியத்திலும் அதிர்ச்சியிலும் ஆழ்த்தின.

* * * * *

மார்கழிப் பனி விலகி, தை பிறந்த அந்த அதிகாலைப் பொழுதில் பசுமைப் பண்ணையே புதுப்பொலிவுடன் காட்சியளித்தது. வருடம் முழுதும் உழைக்கும் மாடுகளுக்கு நன்றி சொல்லும் அந்த உன்னத நாள் - மாட்டுப் பொங்கல்.

அன்று அதிகாலையிலேயே குமரனின் சுறுசுறுப்பு தொற்றிக்கொண்டது. வழக்கமாக லுங்கியை மடித்துக் கட்டிக்கொண்டு சாணம் அள்ளும் குமரன், இன்று புத்தாடை அணிந்து, நெற்றியில் பெரிய திருநீற்றுப் பட்டையுடன் காட்சியளித்தான்.

"ஏலே கோபி! சும்மா வேடிக்கை பாக்காம அந்த மஞ்சள் தூளையும், வேப்பிலையையும் எடுத்துட்டு வாடா. இன்னைக்கு நம்ம லட்சுமிக்கும் கோமதிக்கும் 'பியூட்டி பார்லர்' மேக்கப் போடணும்!" என்று கூவினான் குமரன்.

பண்ணையில் இருந்த ஒவ்வொரு பசுவும், கன்றும் இன்று விசேஷமாகக் கவனிக்கப்பட்டன. கோபி ஓடிச் சென்று கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்க, குமரன் ஒவ்வொரு மாட்டையும் தேய்த்துக் குளிப்பாட்டினான். குளித்து முடித்ததும் மாடுகள் பளபளவென மின்னின.

"என்ன குமரன் அண்ணே, லட்சுமி இன்னைக்கு ரொம்பப் பிரகாசமா இருக்கா?" என்று கோபி கேட்க, குமரன் ரகசியமாகச் சொன்னான், "பின்ன இருக்காதா? இன்னைக்குத் தானே அவளுக்குக் கல்யாணக் களை வரும்! இதோ பார், இந்த வர்ணத்தைப் பூசினால் ஊரே அவளைத் தான் பார்க்கும்."

குமரன் சொன்னது போல, மாடுகளின் கொம்புகளுக்கு சிவப்பு, நீலம் என வர்ணங்கள் பூசப்பட்டன. கொம்புகளின் நுனியில் பித்தளைக் குப்பிகள் மாட்டப்பட்டன. கழுத்தில் மணிகள் கட்டப்பட்ட சலங்கை மாலைகள் 'கிணுகிணு'வென ஓசை எழுப்ப, பண்ணையே ஒரு இசைக்கச்சேரி போல மாறியது.

குட்டிப் பெண் கன்றுக்குட்டியான கோமதிக்கு மட்டும் குமரன் ஸ்பெஷலாக ஒரு பெரிய சந்தனப் பொட்டு வைத்து, அதன் நடுவில் குங்குமம் வைத்தான். "பாருடா கோபி, நம்ம கோமதி குட்டி இப்போ அப்படியே ஒரு ஹீரோயின் மாதிரி இருக்கா இல்ல?" என்று குமரன் கிண்டல் செய்ய, கோபி விழுந்து விழுந்து சிரித்தான்.

பண்ணையின் நடுவில் பெரிய கோலமிடப்பட்டு, புதுப்பானையில் பொங்கல் வைக்கப்பட்டது. பானையில் கட்டப்பட்டிருந்த மஞ்சள் குலை காற்றில் ஆடியது. பானையிலிருந்து பொங்கல் பொங்கி வரும்போது  என்று, காமாட்சி அம்மாள் 'பொங்கலோ பொங்கல்' என்று மகிழ்ச்சியாகக் குரல் எழுப்ப, கதிர்வேலு ஐயா பயபக்தியுடன் கைகூப்பித் தொழுதார்.

அடுத்து முக்கியமான சடங்கு தொடங்கியது. 'பட்டிப் பொங்கல்' எனப்படும் மாடுகளுக்குப் பொங்கல் ஊட்டும் நிகழ்வு. அகலமான வாழை இலைகளில் சர்க்கரைப் பொங்கல், கரும்பு, வாழைப்பழம், மற்றும் வேகவைத்த காய்கறிகள் வைக்கப்பட்டன. கோமதிக்கு பிடித்த வெண்பொங்கலும் வைக்கப்பட்டது.

குமரன் ஒரு உருண்டை பொங்கலை எடுத்து கோமதியிடம் நீட்டினான். கோமதி அந்த மணத்தை முகர்ந்து பார்த்துவிட்டு, குமரனின் கையை நாவால் நக்கியது.

"அண்ணே, அது பொங்கலை விட உங்க கையைத் தான் அதிகமா ருசிக்குது!" என்று கோபி நக்கல் அடித்தான்.

அதற்கு குமரன் சளைக்காமல், "அது பாசம்டா கோபி. நாம போடுற மாலைக்கும், பூசுற வர்ணத்துக்கும் மயங்காத இந்த ஜீவன்கள், நாம காட்டுற அன்புக்கும் இந்த ஒரு உருண்டை பொங்கலுக்கும் அப்படியே உருகிடும்," என்று சற்று உணர்ச்சிகரமாகச் சொன்னான்.

மாலை நேரத்தில், ஊர் மந்தையில் மாடுகளை அழைத்துச் செல்லும் 'மாடு விடுதல்' நிகழ்வுக்காக குமரன் தயாரானான். லட்சுமியின் கழுத்தில் புதிய துண்டு ஒன்றைக் கட்டி, அதன் கொம்புகளில் பூச்சரங்களைச் சுற்றினான்.

"கோபி, நீயும் வர்றியா? நம்ம லட்சுமியும் கோமதியும் இன்னைக்கு ஊர்வலத்துல போகும்போது, மத்த பண்ணை மாடெல்லாம் பொறாமையில பார்க்கணும். அந்த அளவுக்கு நான் மேக்கப் பண்ணிருக்கேன்," என்று பெருமையாகச் சொன்னான் குமரன்.

'மாடு விடுதல்' நிகழ்வுகளுக்குப் பிறகு, அன்று இரவு பண்ணையில் அமைதி நிலவியது. வயிறாரப் பொங்கலும் கரும்பும் சாப்பிட்ட மாடுகள், கழுத்து மணிகள் மெல்ல ஒலிக்க அசைபோட்டுக் கொண்டிருந்தன. கோபி மெல்ல கோமதியின் அருகில் சென்று அமர்ந்தான். கோமதி அவன் மடியில் தலை சாய்த்தது.

குமரன் தூரத்திலிருந்து இதைப் பார்த்துவிட்டு, "தம்பி கோபி, சீக்கிரம்கிளம்பு... நாளைக்கு உனக்கு கிளாஸ் இருக்குல்ல? அப்புறம் ஸ்கூல்ல போயி தூங்கிடப்போற!" என்று அதட்ட, சிரித்துக்கொண்டே கோபி வீட்டிற்குள் ஓடினான்.

மகிழ்ச்சியும், நெகிழ்ச்சியும் கலந்த ஒரு மாட்டுப் பொங்கல் இனிதே நிறைவுற்றது.

* * * * *

பொங்கல் விடுமுறை முடிந்து இன்று பள்ளி மீண்டும் திறக்கும் நாள். அதிலும் நீண்ட விடுமுறைக்கு பிந்தைய நாள் என்பதால் எப்போதும் ஒரு சோம்பல் இருக்கவே செய்யும். பொங்கல் பண்டிகையின் கொண்டாட்டங்கள் இன்னும் கண்ணுக்குள்ளேயே நின்றன போதாக்குறைக்கு விடுமுறை நாட்களில் நண்பர்களுடன் ஓடி ஆடி

விளையாடிய களைப்பு வேறு.

பள்ளிக்குத் தயாராவது கோபிக்கு அவ்வளவு எளிதான காரியமாக இருக்கவில்லை. காமாட்சி கொடுத்த ஒரு பெரிய டம்ளர் நிறைய பாலைப் பிடிக்காமல் மடமடவென்று குடித்துவிட்டு, அரக்கப்பரக்கத் பள்ளிக்கு விரைந்தான் கோபி.

பள்ளி வாசலிலேயே அவனது நெருங்கிய நண்பன் அருள் அவனுக்காகக் காத்திருந்தான். அவசர அவசரமாகச் சட்டையைச் செருகிக் கொண்டிருந்த கோபியைப் பார்த்து, "என்னடா கோபி, இவ்வளவு லேட்? உனக்கு கோமதியை விட்டுட்டுப் பள்ளிக்கு வரதுக்கு மனசே வராதே!" என்று கிண்டலாகக் கேட்டான்.

முதல் வகுப்பு கணிதம். ஸ்ரீரங்கன் சார் கையில் பிரம்புடன் வகுப்பிற்குள் நுழைந்தாலே பாதி பேருக்குக் கணக்கு மறந்துவிடும். அவர் எல்லோரையும் வாய்பாடு கேட்கத் தொடங்கினார். சரியாகச் சொல்லாதவர்களை 'தண்டனை' என வகுப்பறைக்கு வெளியில் வெயிலில் நிறுத்தினார். அருள் மெதுவாகக் கோபியின் காதில், "டேய், எட்டாவது வாய்ப்பாடு மட்டும் கேட்டாருன்னா நான் காலி!" என்று முணுமுணுத்தான். நல்ல வேளையாகக் கோபிக்கு ஐந்தாவது வாய்ப்பாடு வர, அவன் தப்பித்தான். ஆனால் பாவம் அருள், ஒன்பதாவது வாய்ப்பாட்டில் தடுமாறி வெளியே போய் நின்றான்.

"மதிய உணவு இடைவேளை வரை நீ வெளியிலேயே நில்!" என்று தண்டனை கொடுத்துவிட்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்தார் ஸ்ரீரங்கன் சார். அருள் பாவமாகத் தன் நண்பன் கோபியைப் பார்த்தபடி வகுப்பறைக்கு வெளியே போய் நின்றான்.

இரண்டாவது வகுப்பிற்கு வந்த ஜானகி டீச்சர், உடல் ஆரோக்கியம் குறித்த தமிழ் பாடத்தை உற்சாகமாக நடத்தினார். "சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும்" என்று ஆரோக்கியத்தின் அவசியத்தை அவர் விளக்கத் தொடங்கினார்.

இந்தப் பாடத்தின் போது, உடல் ஆரோக்கியத்திற்கும், எலும்பு வளர்ச்சிக்கும் பால் எவ்வளவு இன்றியமையாதது என்று டீச்சர் கூறினார். "பாலில் உடலுக்குத் தேவையான புரதச் சத்து, கால்சியம் ஆகியவை அதிக அளவில் உள்ளது. அதனால்தான் தினமும் பால் குடிக்க வேண்டும்" என்று ஜானகி டீச்சர் விளக்கிக் கொண்டிருந்த போது, கோபிக்கு ஒரு விசித்திரமான சந்தேகம் வந்தது.

அவன் கையைத் தூக்கி, "டீச்சர்... ஒரு சந்தேகம்!" என்றான்.

ஜானகி டீச்சர் புன்னகையுடன், "சொல்லு கோபி, என்ன சந்தேகம்?" என்றார்.

"டீச்சர், பசும் பால்ல புரதச் சத்து, கால்சியம் எல்லாம் இருக்குன்னு சொல்றீங்க. அப்போ அந்த சத்துக்கள் எல்லாம் பெரிய மாட்டுக்கு எப்படி கிடைக்குது? மாடு ஆரோக்கியமா இருக்கணும்னா அதுவும் ஒரு நாளைக்கு ஒரு டம்ளர் பால் குடிக்குமா? அது புல்லையும் செடிகளையும் தானே சாப்பிடுது?" என்று கோபி கேட்க, வகுப்பறையே ஒரு நிமிடம் நிசப்தமானது.

அருள் ஜன்னல் வழியாக வெளியே நின்றபடியே, "கரெக்டான கேள்விடா கோபி!" என்று சைகை காட்டினான்.

உண்மையிலேயே இந்த ஆழமான கேள்வியால் ஜானகி டீச்சர் ஆச்சரியப்பட்டுப் போனார். "நல்ல கேள்வி கோபி... மாடு எப்படி அந்த சத்தை உருவாக்குதுன்னா..." என்று அவர் யோசனையுடன் பதில் சொல்லத் தொடங்கிய சமயம், வகுப்பு முடிந்ததைக் குறிக்கும் மணி அடித்தது. 'டங்... டங்... டங்!'

மாலை வீடு திரும்பிய கோபி, தன் சந்தேகங்களை மனதில் சுமந்தபடியே கோமதியைப் பார்க்கச் சென்றான்.

* * * * *

பசுமைப் பண்ணையில், மாலை நேரத்து இதமான காற்று வீசிக்கொண்டிருந்தது.

சில நாட்களுக்கு முன்பு அம்மாவிடம் ஏன் நம் மாட்டின் பாலை மனிதர்கள் எடுக்கிறார்கள் என்று கேட்டு இருந்தேன். கோபி என்னோடு விளையாடிவிட்டுச் சென்ற பிறகு, என் மனதில் தோன்றிய சில கூடுதல் கேள்விகளுக்கு விடை தேடி நான் அம்மாவின் அருகில் சென்றேன்.

'அம்மா, அம்மா!, மனிதர்கள் மாட்டின் பாலை மட்டும் குடிக்கிறார்களா அல்லது மற்ற மிருகங்களான யானை, சிங்கம், புலி, குதிரை போன்ற வற்றின் பாலையும் அவர்கள் குடிக்கிறார்களா? என்று வினவினேன்.

“இல்லை கோமதி. மனிதர்கள் பொதுவாக மாட்டின் பாலை மட்டும் தான் குடிக்கிறார்கள். மற்ற மிருகங்களான யானை, புலி, சிங்கம் போன்ற

மிருகங்களின் பாலை அவர்கள் குடிப்பதில்லை. இதற்கு இரண்டு மூன்று காரணங்கள் உண்டு.

முதல் காரணம், யானை புலி போன்ற பிற விலங்குகளை அவர்களால் வசப்படுத்தவோ வீட்டில் வைத்து வளர்க்கவோ முடியாது. இவை ஆபத்தான மற்றும் அபாயகரமான விலங்குகள. நம்மை போல சாதுவான பிராணிகள் இல்லை. இவற்றை வைத்து பாலைக்கரந்து குடிக்கும் வரை கூட மனிதன் உயிரோடு இருக்க மாட்டான். நம் போன்ற மாடுகள் மிகவும் சாதுவான தயவுள்ள விலங்குகள். நம்முடைய இந்த சாதுவான குணத்தை மனிதன் தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்கிறான்.

அடுத்த காரணம் - சிங்கம், புலி போன்ற மாமிச உண்ணிகளை வளர்க்க வேண்டும் என்றால், அவற்றிற்கு இறைச்சி போட வேண்டும். இது மனிதர்களுக்குப் பொருளாதார ரீதியாகப் பெரும் நஷ்டத்தைத் தரும். யானை போன்ற பெரிய விலங்குகளுக்குத் தேவைப்படும் தீவனத்தின் அளவு மிக அதிகம், ஆனால் அவை தரும் பாலின் அளவு அதற்கேற்ப இருக்காது.

மாடுகள், மனிதர்கள் உண்ணாத தாவரப் பகுதிகளை உண்டு, அவற்றை ஊட்டச்சத்துள்ள பாலாக மாற்றி விடுகின்றன.

ஒரு குதிரையோ அல்லது நாயோ அதன் குட்டிக்குத் தேவையான அளவு மட்டுமே பாலை உற்பத்தி செய்யும். ஆனால், மனிதர்கள் பல தலைமுறைகளாகச் செய்த 'தேர்வுமுறை இனப்பெருக்கம்' காரணமாக, பசுக்கள் தங்களின் கன்றுக்குத் தேவைப்படுவதை விடப் பல மடங்கு அதிகமான பாலைச் சுரக்கும்படி மாற்றப்பட்டுள்ளன.

மனிதர்களைக் கேட்டால் மாட்டின் பால் மனிதனின் பாலைப் போன்றது அல்லது மனிதர்களுக்கு மிகவும் உகந்தது என்று சொல்லி வாதாடுவான். எந்த ஒரு மிருகத்தின் பாலும் மற்ற மிருகங்களுக்கு உகந்தது அல்ல என்பது, எல்லாம் தெரிந்த மனிதனுக்கு தெரியாமல் இருப்பது ஆச்சர்யத்திலும் ஆச்சர்யம். நாம் சாதுவாக இருப்பதால் நம்மை பழக்கப்படுத்தி, வசப்படுத்தி வீட்டினம் ஆக்கிவிட்டான். “

இந்த உண்மை எனக்குக் கசப்பாக இருந்தது. அதே நேரம், என் அம்மாவின் மடியை முட்டி நான் பால் குடித்தபோது, வழக்கமான சுவை இல்லாமல் ஏதோ ஒரு மாற்றம் இருப்பதை என் பிஞ்சு நாவால் உணர முடிந்தது.

"அம்மா, இன்னைக்குப் பால் ஏன் ஒரு மாதிரியாக இருக்கு?" என்று கேட்டேன்.

அம்மா ஒரு நீண்ட பெருமூச்சுடன் என்னைப் பார்த்தாள். "கோமதி, நீ நேற்று மதியம் உறங்கிக் கொண்டிருந்தாய். அப்போது கதிர்வேலு ஒரு டாக்டரைக் கூட்டி வந்தான். அந்த டாக்டர் கையில் ஒரு நீண்ட ஊசியை வைத்திருந்தார். என் இடுப்பில் 'நறுக்' என்று அந்தப் பெரிய ஊசியைச் செலுத்தினார். அப்பா... அந்த வலி இன்னும் என் நரம்புகளில் மின்னலாய் ஓடிக்கொண்டிருக்கிறது."

அம்மா மெல்லத் தன் கால்களை அசைத்துக்கொண்டு தொடர்ந்தாள்:

"அவர்கள் பேசிக்கொண்டதிலிருந்து எனக்கு ஒன்று புரிந்தது கோமதி. அது 'ஆக்ஸிடோசின்' என்கிற ஒரு ஹார்மோன் ஊசியாம். இயற்கையாக என் உடல் உனக்காகச் சுரக்கும் பாலை விட, இன்னும் அதிகமாக, இன்னும் வேகமாகக் கறக்க வேண்டும் என்பதுதான் அவர்களின் நோக்கம். அந்த ஊசியைச் செலுத்திய சில நிமிடங்களிலேயே, என் மடி ஒருவிதமான வீக்கத்தோடு பாரமானது. என் உடலுக்குள் ஏதோ ஒரு சூறாவளி சுழல்வது போல இருந்தது. ரத்த நாளங்கள் எல்லாம் புடைக்கத் தொடங்கின."

"அது அவ்வளவு வலியா அம்மா?" என்று நான் பரிதாபமாகக் கேட்டேன்.

"வலி மட்டுமல்ல கோமதி, அது ஒருவிதமான சித்திரவதை," என்று லட்சுமி விம்மினாள். "அந்த ஹார்மோன் என் கருப்பைக்குள்ளும் ஒருவிதமான சுருக்கத்தை ஏற்படுத்துகிறது. பிரசவத்தின்போது ஏற்படும் அந்தத் துடிப்பும் வலியும், ஒவ்வொரு முறையும் அந்த ஊசி போடும்போதும் எனக்கு ஏற்படுகிறது.

அம்மா என் தலையை வருடினாள். "இந்த மனிதர்களுக்கு நம் உணர்வுகள் புரியாது கோமதி. அவர்களுக்கு வேண்டியது அந்தப் பாத்திரத்தில் நிறையும் பால் மட்டும்தான். அந்தப் பால் வெள்ளை நிறத்தில் இருப்பதாலேயே அது தூய்மையானது என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால், அதற்குள் கலந்திருக்கும் நம் வலி, வேதனை, மற்றும் இந்தச் செயற்கை மருந்துகளின் ரசாயனம் எவருக்கும் தெரிவதில்லை. தன் சுயநலத் தேவைகளுக்காக நம்மை ஒரு இயந்திரமாக மாற்றுவதே இந்த மனிதர்களுக்கு வாடிக்கையாகிவிட்டது," என்று அம்மா சலிப்புடன் கூறினாள். அம்மாவின் கண்களில் ஒரு துளி கண்ணீர் இருப்பதை என்னால் பார்க்க முடிந்தது.

அம்மாவின் கண்கள் கலங்குவதைக் கண்ட எனக்கு நெஞ்சு விம்மியது. நான் குடித்த அந்தப் பாலில் இப்போது அம்மாவின் கண்ணீரும் கலந்திருப்பது போல எனக்குத் தோன்றியது.

* * * * *

ஜானகி டீச்சருக்கு அன்று இரவு முழுவதும் தூக்கம் வரவில்லை. ஐந்தாம் வகுப்பு படிக்கும் ஒரு சிறுவன் கேட்ட கேள்வி, பல வருடங்களாக அவர் சொல்லிக்கொடுத்து வந்த பாடத்தின் அடிப்படையையே அசைத்துவிட்டது. "மாடு புல்லையும் செடியையும் சாப்பிட்டு எப்படித் தன் உடலுக்குத் தேவையான கால்சியம் மற்றும் புரோட்டீனை உருவாக்குகிறது? மனிதனால் இதே போல காய்கறிகளையும், கீரைகளையும், தானியங்களையும் சாப்பிட்டுத் தன் உடலுக்குத் தேவையான சத்துக்களை உருவாக்க முடியாதா?" - இந்தக் கேள்வி அவர் மண்டைக்குள் ஒரு 'அலார்ம்' போல ஒலித்துக்கொண்டே இருந்தது.

மறுநாள் காலை, விடிந்ததும் விடியாததுமாக ஜானகி டீச்சர் தனது தேடலைத் தொடங்கினார். முதலில் தனது வீட்டில் இருந்த ஊட்டச்சத்து தொடர்பான புத்தகங்களை புரட்டினார். அதில் ஒரு பக்கம், "பால் ஒரு முழுமையான உணவு" என்று இருந்தது. ஆனால், இன்னொரு பக்கத்திலோ, "மாடுகள் தாவரங்களில் இருக்கும் தாதுக்களை இயற்கையாகவே பாலாக மாற்றும் திறன் கொண்டவை" என்று மிகச் சாதாரணமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

"அப்போ, அந்த ஊட்டச்சத்துக்கள் செடிகளிலேயே இருக்குன்னா, நாம ஏன் அதைத் சாப்பிடாம, மாட்டை வதைச்சுப் பாலைக் குடிக்கணும்? மனிதர்களுக்குக் காய்கறிகளையும் கீரைகளையும் ஊட்டச்சத்தாக மாற்றும் திறமை இல்லையா?" - ஜானகி டீச்சரின் மனதில் அடுத்த சந்தேகம் முளைத்தது.

இதற்குப் பதில் தேட அவர் ஒரு பெரிய 'லைப்ரரி'க்குச் சென்றார். அங்கே இணையதளத்தில் தேட ஆரம்பித்தபோதுதான் அவருக்குப் பெரிய தலைவலியே வந்தது. ஒரு இணையதளம் "பால் குடிப்பது எலும்புகளுக்கு நல்லது" என்றது; ஆனால் மற்றொரு ஆய்வுக்கட்டுரையோ, "பால் அதிகமாகக் குடிக்கும் நாடுகளில்தான் எலும்பு முறிவு மற்றும் ஆஸ்டியோபோரோசிஸ் அதிகம் நடக்கிறது" என்று தலைகீழான தகவலைத் தந்தது.

நிபுணர்களிடம் கேட்கலாம் என்று அவர் தனக்குத் தெரிந்த ஒரு மருத்துவருக்கு போன் செய்தார். அவர், "டீச்சர், பால் அவசியம். ஆனா இப்போ வர்ற பால்ல நிறைய ஹார்மோன் இன்ஜெக்ஷன் கலந்திருக்கு, அதுதான் பிரச்சனை" என்றார்.

மதிய உணவு இடைவேளையில் தனது சக ஆசிரியர்களிடம் இதைப் பற்றிப் பேசினார்.

"என்ன ஜானகி, திடீர்னு பாலுக்கு எதிராத் திரும்பிட்டீங்களா? நாம சின்ன வயசுல இருந்து குடிச்சிட்டு வர்றதுதானே?" என்று அவர்கள் கிண்டல் செய்தார்கள்.

ஜானகி டீச்சருக்கு எல்லாமே மிகக் குழப்பமாக இருந்தது. ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு விதமான, ஒன்றுக்கொன்று முரணான பதில்களே கிடைத்தன.

அன்று மாலை ஒரு 'ஜூம் மீட்டிங்' வழியாக ஊட்டச்சத்து நிபுணர் ஒருவருடன் பேசும் வாய்ப்பு கிடைத்தது. அந்த நிபுணர் சொன்னது ஜானகி டீச்சரை இன்னும் யோசிக்க வைத்தது.

"டீச்சர், உண்மை என்னன்னா, மாடு மண்ணுல இருக்கிற சத்துக்களைப் புல்லு வழியா எடுத்துக்குது. நாம அந்த மாட்டை ஒரு 'மிஷின்' மாதிரி யூஸ் பண்றோம். ஆனா, அந்தச் சத்துக்களை நேரடியாத் தாவரங்கள்ல இருந்தே நாம எடுக்க முடியும்னு பல பேருக்குத் தெரியறது இல்லை" என்றார் அவர்.

வீட்டிற்குத் திரும்பிய ஜானகி டீச்சருக்கு இப்போது 'மிக்ஸ்டு' உணர்வு. ஒரு பக்கம் இத்தனை காலம் தான் தவறான தகவலைச் சொல்லிக்கொடுத்து விட்டோமோ என்ற குற்ற உணர்ச்சி, இன்னொரு பக்கம் கோபி கேட்ட கேள்வியால் தனக்குக் கிடைத்த ஒரு புதிய தெளிவு.

* * * * *

மாதங்கள் உருண்டு ஓடின. நேற்று சாயங்காலம் மற்ற கன்றுக் குட்டிகளோடு நன்கு விளையாடி களைத்து நன்றாக உறங்கினேன். எப்பொழுதும் போல காலை ஆறு மணிக்கு சற்று பசியுடன் விழித்துக் கொண்டேன். லட்சுமி அம்மாவை தேடிக் கொண்டு ஓடினேன். லட்சுமி அம்மா எப்பொழுதும் இருக்கும் இடத்தில் அப்போது இல்லை.

அங்கிருந்த சக மாடுகளை கேட்டேன். அவர்களும் லட்சுமியை நான் பார்க்கவில்லை என்று சொன்னார்கள். பசுமை பண்ணையின் நான்கு திசைகளிலும் எனக்கே உண்டான குரலில் ம்மா, ம்மா என்று கத்திக் கொண்டு தேடினேன். அப்பொழுதும் என் குரலுக்கு பதில் குரலாக ம்மா என்று என் அம்மாவின் குரல் கேட்டது.

அந்தக் குரல் வந்த திசை நோக்கி ஓடினேன். பசுமை மாட்டுப் பண்ணையின் கடைக் கோடியில் நாங்கள் இதுவரை யாரும் சென்றிடாத ஒரு பகுதியில் என் லட்சுமி அம்மா இருப்பதாக தெரிந்தது. இன்னும்

அருகில் சென்றேன். அம்மாவின் குரலில் மாற்றம் தெரிந்தது. குரலில் ஒருவித வலியையும் வேதனையையும் என்னால் உணர முடிந்தது. இதோ! அம்மா இருக்கிறாள் என்று ஆசையாக, அருகில் சென்றபோது என் அம்மா கட்டப்பட்டிருந்த நிலையைக் கண்டு அதிர்ந்து போனேன்.

அம்மாவை இங்கும் அங்கும் நகர முடியாதபடி இரும்புக் கம்பிகளுக்கு இடையில் கட்டியிருந்தனர். அருகில் கதிர்வேலு, குமரன் மற்றும் வேறு இரு நபர்கள் இருந்தனர். அதில் ஒருவரை டாக்டர். ஜான் என்று அழைத்து கதிர்வேலு ஏதோ பேசிக்கொண்டு இருந்தான் .

அம்மா என்று கத்திக் கொண்டு என் அம்மாவின் அருகில் நான் செல்ல முயற்சிப்பதற்குள் குமரன் என்னை பார்த்து அதிர்ந்தவனாக, 'ஏய், இங்கு எங்க வந்த!' என்று என் அருகில் ஓடி வந்து என்னை இழுத்துக் கொண்டு போய் எப்பொழுதும் கன்றுக் குட்டிகளை கட்டும் இடத்தில் கட்டிவிட்டுச் சென்றான். என் அம்மாவின் நிலையை நினைத்து எனக்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது. அழுது கொண்டே நான் பார்த்த காட்சிகளை நினைத்துக் கொண்டே உறங்கிவிட்டேன்.

மதியம் போல மீண்டும் அம்மாவை தேடிக் கொண்டு போனேன். அம்மா மிகவும் களைப்புற்றவளாக, அயர்ச்சியோடு படுத்துக் கொண்டு இருந்தாள். விரைந்து சென்று அம்மாவை என் நாக்கால் உடல் முழுவதும் மென்மையாக நக்கிக் கொடுத்தேன். அம்மாவின் கண்களில் வலியும், வேதனையும் இருந்ததை உணர முடிந்தது. கண்கள் ஓரத்தில் இருந்து வழிந்து கொண்டிருந்த கண்ணீரைக் கண்டு என் கண்களும் கசிந்தன. இந்த நிலையில் அம்மாவிடம் பேசவோ, எதைப் பற்றியும் கேட்கவோ முடியவில்லை. சற்று நேரம் அம்மாவுடன் இருந்து விட்டு என் உணவைத் தேடிச் சென்றேன்.

மனதில் ஆயிரம் கேள்விகளோடு அன்றைய தினம் முடிந்தது, மறுநாள் பொழுது மலர்ந்த உடன், ஓடி அம்மாவிடம் சேர்ந்தேன். இன்று அம்மா சற்றே தேறி இருந்தாலும் ஒருவித களைப்பும், பயமும் முகத்தில் தெரிந்தது. இது இரும்பு கம்பிகளுக்கு இடையில் கட்டி போட்டதனால் இருக்குமோ என்ற யூகத்தில், 'அம்மா, அம்மா, ஏன் உன்னை நேற்று இரும்புக் கம்பிகளுக்கு இடையில் கட்டிப் போட்டிருந்தனர்? என்று வினவினேன் .

இதற்கு என் அம்மா சொன்ன பதில் நான் இதுவரை அறிந்திராததாகவும், அதிர்ச்சியான தகவலாகவும் இருந்தது. "கோமதி! செயற்கை முறையில் என்னை கரு தரிக்க வைப்பதற்காகவே இரும்புக் கம்பிகளுக்கிடையே நேற்று என்னை கட்டிப் போட்டிருந்தார்கள்.

செயற்கை முறையில் கருத்தரிப்பது என்றால் என்ன, அம்மா? உன்னை ஏன் அப்படிச் செய்தார்கள் ? என்று தொடர்ந்து வினவினேன்.

உன்னைப் பெற்றெடுத்து பத்து மாதங்கள் ஆகப் போகிறது. எனது மடியிலிருந்து சுரக்கும் பாலின் அளவு சிறிது சிறிதாக குறைந்து கொண்டிருக்கிறது.

இந்த விசித்திர மனிதர்கள் மாடு பால் கொடுக்கும் என்று சொல்லி விடுகிறார்கள். ஒரு மாடு பால் கொடுக்க வேண்டுமெனில் அது ஒரு பெண் மாடாக, அதுவும் ஒரு கன்றை ஈன்ற தாயாகவும் இருந்தால் மட்டுமே பால் கொடுக்க முடியும்.

ஆனால் மனிதர்களுக்கு தினமும் பால் மற்றும் பால் சார்ந்த பொருட்களும் தேவைப்பட்டுக் கொண்டே இருக்கிறது. இதற்கு ஒரே வழி என்னைப் போன்ற மாடுகளை மீண்டும் மீண்டும், திரும்பத் திரும்ப கருவுறச் செய்து கன்றுகளைப் பெறச் செய்வதே என்று என் அம்மா குரல் கம்மக் கூறினார்.

இதைக் கேட்டதும் ஒருவேளை பெரிதானதும் நமக்கும் இந்த கதி தானோ என்கிற அச்சமும், பீதியும் என் மனதில் தோன்றி மறைந்தது .

“அம்மா, அம்மா கோபிக்கு அம்மா மற்றும் அப்பா என்று இருவர் இருக்கிறார்களே. ஆனால் எனக்கு உன்னை மட்டும் தானே தெரியும். என் அப்பா எங்கே?” எப்பொழுதோ தோன்றிய கேள்வி திடீரென்று மீண்டும் நினைவிற்கு வந்தது இதைக் கேட்டதும் என் அம்மாவின் கண்களில் கண்ணீர் தளும்ப உனக்கும் மற்ற கன்று குட்டிகளுக்கும் அப்பா என்று சொல்ல இங்கே யாரும் இல்லை. எல்லோரும் செயற்கை முறை கருத்தரிப்பினால் வந்திருக்கிறீர்கள். எனக்கும் அப்பா இல்லை, உனக்கும் அப்பா இல்லை, இந்த செயற்கை முறை கருத்தரிப்பிற்காகத்தான் என்னை கம்பிகளுக்கு இடையில் கட்டி வைத்திருந்தார்கள்.

“அம்மா நேற்று குமரன் மற்றும் கதிர்வேலுடன் டாக்டர். ஜான் என்று யாரோ ஒருவரும் உடன் இருந்தாரே, அவர் யாரென்று உனக்கு தெரியுமா?”

டாக்டர். ஜான் என்பவர் கால்நடை மருத்துவர். அவரை ஆங்கிலத்தில் வெட்டனரியன் என்று அழைப்பார்கள். குமரன் மற்றும் சிலர் உதவியுடன் டாக்டர். ஜான் என் பின்புறம் இருக்கும் என் பிறப்புறுப்பின் வழியே கைகளை செலுத்தி ஒரு இன்ஜக்சன் மூலம் என்னை கருத்தரிக்க செய்தார்.

அம்மா, அது உனக்கு வலியாக இருந்திருக்குமே!?

ஆமாம் எனக்கு மிகவும் வலியாக இருந்தது. துடி துடித்துதான் போனேன். வலியிலும், பயத்திலும் நான் இங்கும் அங்கும் நகர்ந்து விடக் கூடாதே என்று தான் என்னை இரு இரும்புச்சட்டங்களுக்கு இடையில் நகரவிடாமல் கட்டி இருந்தனர்.

ஏம்மா? மனிதர்கள் இப்படிச் செய்வது சரியா?

'இப்படிச் செய்வது மிகவும் தவறு. அமெரிக்கர்கள் கருப்பின மக்களை அடிமைப்படுத்தியது போலவும், ஆங்கிலேயர்கள் இந்திய மக்களை அடிமைப்படுத்தியது போலவும் மனிதர்கள் நம்மை அடிமைப்படுத்தி விட்டனர்.

அதுவும் நம் அனுமதி இல்லாமல் இப்படிப் நம்மை சித்திரவதை செய்வது மிக மிக தவறு. அனுமதி இல்லாமல் இந்த மாதிரி மனிதர்களுக்கு செய்தால் அவர்களுக்கு சிறையில் ஆயுள் தண்டனை விதிக்கப்படும். ஆனால் நம்மைப் போன்ற மாடுகளுக்கு செய்தால் அவர்களுக்கு பட்டமும் பாராட்டும் பணமும் கிடைக்கும்.

* * * * *

பசுமைப் பண்ணை மெதுவாக ஒரு தொழிற்சாலையாக மாறி இருந்தது. கதிர்வேலுவின் கனவு பெரியது; லாபம் ஈட்ட வேண்டும் என்ற முனைப்பில் அவர் பண்ணையில் பல மாற்றங்களை கொண்டு வந்திருந்தார்.”

ஒரு நாள் காலை, பண்ணைக்குள் இரண்டு பெரிய பெட்டிகள் வந்திறங்கின. "அப்பா, இது என்ன?" என்று கோபி ஆர்வத்துடன் கேட்டான். "இதுதான் 'மில்க்கிங் மெஷின்'. இனிமேல் கைகளால பால் கறக்க வேண்டிய அவசியமில்லை. நேரமும் மிச்சம், பாலும் அதிகமா கிடைக்கும்," என்றார் கதிர்வேலு பெருமையாக.

ஆனால், அந்த இயந்திரங்கள் பொருத்தப்பட்டபோது கோபிக்கு ஏனோ ஒருவித பயம் ஏற்பட்டது. மாடுகளின் மென்மையான மடியில் அந்த இரும்புக்குழாய்கள் பொருத்தப்பட்டு, மின்சாரத்தால் பால் உறிஞ்சப்பட்ட போது, மாடுகள் ஒருவித பதற்றத்துடன் நின்றதை அவன் கவனித்தான். இயந்திரத்தின் இரைச்சலில் மாடுகளின் மெல்லிய முனகல் சத்தம் யாருக்கும் கேட்கவில்லை.

அதே சமயம், பண்ணையில் மற்றொரு அதிர்ச்சிகரமான விஷயத்தையும் கோபி பார்த்தான். பக்கத்துத் தொழுவத்தில் இருந்த ஒரு பசு, தன் கன்றுக்குட்டி இறந்த துக்கத்தில் பால் சுரக்காமல் அழுதுகொண்டே இருந்தது. கதிர்வேலுவும் குமரனும் ஒரு விசித்திரமான வேலையைச் செய்தார்கள். அந்தக் கன்றின் தோலை உரித்து, அதற்குள் வைக்கோலைத் திணித்து ஒரு பொம்மை போலச் செய்து அந்தப் பசுவின் முன்னால் வைத்தனர்.

"குமரன் அண்ணே, இது என்ன?" என்று கோபி பதறிக் கேட்டான்.

"தம்பி, இதுக்கு பேரு 'ஸ்டஃப்டு கால்ஃப்'. கன்று செத்துப்போச்சுன்னு தெரிஞ்சா மாடு பால் கொடுக்காது. இப்படி ஒரு பொம்மையை வச்சா, அது தன் கன்னுதான் நிக்குதுன்னு நினைச்சுப் பாசம் சுரக்கும். அப்போ நாம பாலைக் கறந்துக்கலாம்," என்றார் குமரன் சாதாரணமாக.

தன் தாயன்பை ஒரு வைக்கோல் பொம்மையிடம் காட்டிவிட்டு, அந்தப் பசு தன் பாலை மனிதர்களுக்குத் தருவதைக் கண்ட கோபியின் கண்கள் கலங்கின. "அன்பைக்கூட இப்படி ஏமாத்தித் தான் வாங்கணுமா?" என்று அவன் மனம் குமுறியது.

ஒரு நாள் மாலை, பண்ணையின் வாசலில் ஒரு பெரிய லாரி வந்து நின்றது. தொழுவத்தில் பல வருடங்களாக இருந்த, இப்போது பால் வற்றிப்போன இரண்டு வயதான பசுக்களை அந்த லாரியில் ஏற்றிக் கொண்டிருந்தனர்.
"அப்பா, இவங்களை எங்கே கூட்டிட்டுப் போறாங்க?" என்று கோபி கதிர்வேலுவின் கையைப் பிடித்துக் கேட்டான்.

கதிர்வேலு முகத்தைத் திருப்பிக் கொண்டு, "இனிமே இவங்களால பால் கொடுக்க முடியாது கோபி. பண்ணையில வச்சு தீவனம் போட்டுப் பராமரிக்கிறது ரொம்ப நஷ்டம். அதான்... 'வேற இடத்துக்கு' அனுப்பிட்டேன்," என்றார்.

‘வேற இடமா?’ என்று கோபி குழம்பி நின்றான்.

பிறகு வீட்டில் "அம்மா... ஒரு மனித அம்மா வயசாகிப் போயிட்டா, அவங்க வேலை பார்க்க முடியவில்லை, சமைக்க முடியவில்லை என்று நாம அவங்களை வீட்டை விட்டுத் துரத்திடுவோமா? ஏன் மாடுகளை மட்டும் வயதாகிப்போனால் வேற இடத்திற்கு அனுப்பி விடுகிறோம்?" என்று கோபி தன் அம்மாவிடம் கேட்ட கேள்விக்கு அங்கிருந்த யாரிடமும் பதில் இல்லை.

* * * * *

இரவு டிபனுக்காக காமாட்சி தோசை சுட்டுக் கொண்டிருந்தாள். தோசை வீட்டில் எல்லோருக்கும் பிடித்த உணவு. கோபிக்கும் அவன் அப்பா கதிர்வேலுக்கும் தோசையுடன் பிரஷ்ஷாக அரைத்த தேங்காய் சட்னி சேர்த்து சாப்பிடுவதில் ஒரு தனி ஆனந்தம். தோசை சுட சுட என்று இருந்தால் இன்னுமே இரசித்துச் சாப்பிடலாம்.

கதிர்வேலுவுக்கு சிறிது தடிமனாக மெத்-தென்று இருக்கும் கல் தோசை மிகவும் பிடிக்கும். கோபிக்கு மெல்லியதாக மொறு, மொறு வென்று ரோஸ்டாக இருக்க வேண்டும். ருசியான தேங்காய்ச் சட்னி இருந்தாலும் கடைசி ஒன்றிரண்டு தோசைகளுக்கு எள்ளு மிளகாய் பொடி தொட்டுக் கொண்டு சாப்பிடுவதில் கோபிக்கு ஒரு பேரானந்தம்.

வீட்டுப் பாடம் எழுதிக் கொண்டிருந்தான் கோபி. அப்பொழுது ‘ஏய் கோபி, தோசை ரெடியாகி விட்டது. வேகமாகச் சென்று அப்பாவைக் கூட்டிக் கொண்டு சாப்பிட வா. ஆறிப் போனால் சுவையாக இருக்காது'' என்று அடுக்களையிலிருந்து உரக்கக் கூறினாள் காமாட்சி.

கோபி புத்தகங்களை மூடி வைத்து விட்டு வீட்டிற்குப் பின்புறம் இருந்த பண்ணைக்கு ஓடிச் சென்றான். முன்பகுதியில் கதிர்வேலுவைக் காணவில்லை. அப்பா என்று கூப்பிட்டுக் கொண்டே பின் பகுதிக்கு ஓடிச் சென்றான் .

அங்கு கதிர்வேலு இருந்த நிலைமையைக் கண்டு அதிர்ந்து போனான் கோபி. படிக்கட்டில் உட்கார்ந்த நிலையிலும் இல்லாமல் படுத்த நிலையிலும் இல்லாமல் கையால் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு மூச்சு விடவே திணறிக் கொண்டிருந்தான் கதிர்வேலு. “அப்பா, அப்பா” என்று இரு தோள்களையும் பிடித்து உலுக்கினான் கோபி.

'ஐயோ என்று முனகியபடி தன் சட்டை பட்டிகளை பிடித்து இழுத்தான் கதிர்வேலு. நுரையீரலுக்கு காற்று போக மறுத்து, ஒரு இரும்புப் பெட்டியை நெஞ்சின் மேல் வைத்ததைப் போல உணர்ந்தான். ஒவ்வொரு மூச்சும் ஒரு போராட்டம். ஒவ்வொரு இழுப்பும் ஒரு வலி 'கோபி, கோபி என்று அவன் உதடுகள் முணு முணுத்தன . ஆனால் குரல் வெளியே வரவில்லை. முகம் பதறிச் சிவந்தது. உள்ளே மூச்சுக் காற்று கிடைக்காமல் ஒவ்வொரு அணுவும் அலறுவது போல் இருந்தது. கண்களில் நீர் திரள, உதவியற்ற ஒரு குழந்தையின் ஏக்கம் தெரிந்தது. கைக்கெட்டிய தூரத்திலிருந்த

இன்ஹேலர் மருந்து இப்போது ஏதோ வேறு உலகத்தில் இருப்பது போல் தெரிந்தது.

அப்பாவிற்கு இந்த மாதிரி மூச்சுத் திணறல், வீசிங் வருவது முதல் தடவை அல்ல. கடந்த ஏழு எட்டு ஆண்டுகளாக இந்த மூச்சுத் திணறல் இருந்து கொண்டு தான் இருக்கிறது. ஆனால் அதன் தாக்கம் கடந்த ஒன்றரை வருடங்களாக சற்றே அதிகரித்துள்ளது.

கோபியும் இந்த மாதிரி சமயங்களைப் பார்த்திருக்கிறான் .

கோபிக்கு அந்த இன்ஹேலர் எங்கு இருக்கும் என்று தெரியும். அந்த இன்ஹேலரைப் பயன்படுத்தினால் மூச்சுத் திணறல் குறையும் என்பதும் கோபிக்குத் தெரியும்.

கோபி ஓடிச் சென்று அப்பாவின் அருகிலிருந்த மேஜையிலிருந்து இன்ஹேலரை எடுத்து வந்து கதிர்வேலுவிடம் கொடுத்தான்.

சற்று தூரத்தில் குமரன் இருப்பது தெரிந்தது. கோபி குமரன் அண்ணனை, அண்ணா அண்ணா, என்று சத்தமாக அழைத்தான். குமரன் வந்ததும் அவனிடம் “அப்பாவிற்கு வீசிங் தீவிரமாக இருக்கிறது, அண்ணே நீங்கள் இங்கேயே அப்பாவிற்கு துணையாக நில்லுங்கள் நான் ஓடிச்சென்று அம்மாவையும் அழைத்து வருகிறேன்” என்று கூறிவிட்டு விரைந்து வீட்டிற்குள் ஓடினான்.

“அம்மா, அம்மா அப்பாவிற்கு மூச்சுத் திணறல் அதிகமாக உள்ளது" என்று அலறியபடி கூறினான்.

இதைக் கேட்ட காமாட்சி ஓடி வந்து பதட்டத்தில் நடுங்கும் கைகளுடன் கதிர்வேலுவை பிடித்து சட்டையைத் தூக்கி சரியாக உட்கார வைக்க முயற்சித்தாள்.

மூச்சிற்காக திக்கித் திணறிக் கொண்டிருந்த கதிர்வேலுவால் இன்ஹேலரை உறிஞ்சக் கூட முடியவில்லை.

இனி தாமதிக்கக் கூடாது என்று முடிவெடுத்த காமாட்சி குமரனிடம் தெருக் கோடியில் எப்போதும் இருக்கும் சின்னத்தம்பி ஆட்டோ காரரை அவசரமாக அழைத்து வரச் சொன்னாள்.

மூன்று நான்கு நிமிடங்களில் சின்னத்தம்பியின் ஆட்டோ வந்தது. ஆளுக்கு ஒரு புறமாக காமாட்சியும், குமரனும் கதிர்வேலுவைத் தாங்கிக் கொண்டு

ஆட்டோவில் ஏற்றி அமரச் செய்தனர். “சின்னத்தம்பி, கொஞ்சம் வேகமாக எங்களை பவித்ரா மருத்துவமனைக்கு கூட்டிச் செல்லுங்கள்" என்று கேட்டுக்கொண்டாள்.

குமரன் ஆட்டோ டிரைவரின் அருகில் உட்கார மற்ற மூவரும் பின் சீட்டில் அமர்ந்தனர். ஆட்டோ விரைந்து சென்று மருத்துவமனையை அடைந்தது.

பவித்ரா மருத்துவமனை ஒரு சிறிய மருத்துவமனை தான். அங்கு சென்றதும் மருத்துவர் கதிர்வேலுவை பரிசோதித்து நிலமையின் தீவிரத்தை உணர்ந்து கவலையுடன் இது சாதாரண மூச்சுத் திணறல் அல்ல, உடனடியாக நீங்கள் நுரையீரல் சிறப்பு மருத்துவரை தான் பார்க்க வேண்டும். முதலுதவியாக ஒரு இன்ஜெக்ஷனைப் போட்டு விடுகிறேன். உடனடியாக நேரத்தை வீணடிக்காமல் “மதுரை கோரி பாளையத்திலிருக்கும் பல்மோ கேர் மருத்துவமனையில் உள்ள டாக்டர் ஜகதீஷ் என்கிற நிபுணரிடம் அழைத்துச் செல்லுங்கள்," என்று கூறி சீட்டும் எழுதித் தந்தார்.

காமாட்சி கண்களில் கண்ணீரும், மனதில் பீதியுமாக கதிர்வேலுவை, கோபி மற்றும் குமரனின் உதவியுடன் அதே ஆட்டோவில் ஏற்றி அமர்த்தி தாங்கிக் கொள்ள, நாற்பது நிமிடங்களில் பல்மோ கேர் மருத்துவமனையை அடைந்தனர்.

நல்ல வேளையாக டாக்டர் ஜகதீஷ் அப்போது மருத்துவமனையில் இருந்தார். வீல் சேரில் உட்கார வைத்து ஆக்ஸிஜன் உதவியுடன் டாக்டர் ஜகதீஷிடம் கதிர்வேலுவை அழைத்துச் சென்றனர். டாக்டர் ஜகதீஷ் பரிசோதித்துவிட்டு நிலமையை புரிந்து கொண்டு கதிர்வேலுவை உடனடியாக தீவிர சிகிச்சை பிரிவில் வைத்திருந்து மருத்துவம் பார்க்க வேண்டும் என்று கூறினார். காமாட்சிக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. டாக்டரின் பரிந்துரைக்கு ஆமோதித்தாள்.

அடுத்த நான்கு நாட்களும் நான்கு யுகங்களாக கழிந்தன. ஆசை ஆசையாய் தான் சுட்டு வைத்திருந்த தோசை அடுக்களையில் காய்ந்து கொண்டிருப்பது காமாட்சியின் மனத் திரையில் வந்து சென்றது. மருத்துவமனையின் வாசலில் காத்திருந்த காமாட்சியின் கண்களில் நீர் வற்றிவிட்டது.

டாக்டரின் முயற்சியாலும், கடவுளின் ஆசியாலும் நான்காவது நாள் கதிர் வேலு மெல்ல சகஜ நிலைக்குத் திரும்பினான். அவன் முகத்தில் தெளிவும், நிம்மதியும் தெரிந்தது.

மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் ஆனபிறகு ஒரு வாரம் கழித்து மறுபரிசோதனைக்கு கதிர்வேலுவும், காமாட்சியும் டாக்டர்.ஜகதீஷை சந்தித்தனர். இப்போது கதிர்வேலு கொஞ்சம் தேறிய நிலையில் இருந்தான். சற்று இருமல் மட்டும் அவ்வப்போது இருந்துகொண்டிருந்தது.

கதிர்வேலு தயங்கிய குரலில், டாக்டர், இந்த மூச்சுத் திணறல், இந்த வீசிங் இவற்றிற்கு நிரந்தரமாக ஒரு விமோசனம் கிடையாதா? என் வாழ்நாள் முழுவதும் இந்த மருந்து, மாத்திரை, இன்ஹேலர் மற்றும் பயத்துடனேதான் இருக்கணுமா? என்று வருத்தம் தோய்ந்த தொனியில் கேட்டான்.

டாக்டர் ஜகதீஷ் புன்னகையுடன் அவன் கைகளைப் பிடித்து, "கதிர்வேலு, பொதுவாக ஆஸ்துமாவிற்கு நிரந்தரத் தீர்வு இல்லை என்றாலும் சில உணவு ஒவ்வாமைகள், ஃபுட் அலர்ஜி இதைத் தூண்டலாம். இந்த மாதிரியான ஃபுட் அலர்ஜியில் பாலும், பால் சேர்ந்த பொருட்களும் ஒரு முக்கிய காரணமாக இருப்பதாக சில ஆராய்ச்சிகள் சொல்லுகின்றன. பை த வே, நீங்கள் ஒரு பரிசோதனை செய்யத் தயாரா?" என்று கேட்டார்.

கதிர்வேலு ஆவலுடன் தலையசைத்தான்.

"அப்படியானால் நீங்கள் அடுத்த ஒரு வாரத்திற்கு பால் மற்றும் டெய்ரி பிராடக்ட் எதையும் சாப்பிட வேண்டாம். தயிர், மோர், நெய், வெண்ணெய், பன்னீர் எதையுமே தொடாதீர்கள். ஒரு வாரம் பொருத்திருங்கள், உங்கள் மூச்சு விடுவதில் முன்னேற்றம் இருப்பதாகத் தெரிந்தால், அதே போல் அடுத்த நான்கு வாரங்கள் தொடர்ந்து இதைக் கடைபிடிக்க வேண்டும். பிறகு என்னை வந்து பாருங்கள். உங்கள் உணவும் உடலும் உங்களுக்கான சரியான விடையைச் சொல்லும், பார்ப்போம்." என்று கூறி ஒரு சிறிய நம்பிக்கை ஒளியை ஏற்றி வைத்தார்.

பசுமைப் பால் பண்ணை நடத்தி வரும் கதிர்வேலுவுக்கு தனக்கே பால் மற்றும் பால் சார்ந்த பொருட்களை நிறுத்துமாறு டாக்டர் கூறியது ஆச்சர்யமாகவும், சற்றே அதிர்ச்சியாகவும் இருந்தது.

இந்த யோசனை எனக்கு ஒரு மருந்தாக இருக்குமா? பால் பொருட்களை நிறுத்துவதால் என் நோய் நிரந்தரமாகக் குணமாகி எனக்கு நிம்மதி கிடைக்குமா? என்ற எண்ணத்துடன் வீட்டிற்கு ஆட்டோவில் ஏறினான்.

* * * * *

பசுமைப் பண்ணையில் அன்று மதிய நேரம் கொஞ்சம் மந்தமாக இருந்தது. கதிர்வேலுவின் இருமல் சத்தம் அந்தப் பக்கம் கேட்கவில்லை. அவர் சற்று ஓய்வெடுக்க உள்ளே சென்றிருந்தார்.

இதுதான் கோபிக்குச் சரியான நேரம். கோபி தன் கையில் ஒரு பந்துடன் கொட்டகைக்குள் நுழைந்தான். லட்சுமி அம்மா அமைதியாக அசைபோட்டுக் கொண்டிருந்தாள். அவளுக்கு அருகில் கோமதி, தன் காதுகளை 'விசிறி' போல ஆட்டிக்கொண்டிருந்தாள்.

"ஏய் கோமதி! தூக்கமா?" என்று கத்தியபடி வந்த கோபியைப் பார்த்ததும், கோமதிக்கு உற்சாகம் தொற்றிக்கொண்டது.

கோமதி தன் தலையை ஆட்டி, "இவன் வந்துட்டானா? இனி என்னைத் தூங்க விடமாட்டானே!" என்பது போல ஒரு பார்வை பார்த்தாள். லட்சுமி மெதுவாகக் கனைத்து, "சத்தம் போடாதடா கோபி, உங்க அப்பா கண்ணு அசந்து தூங்குறாரு" என்று எச்சரிப்பது போலத் தலையை ஆட்டினாள்.

கோபி பந்தை மெதுவாகக் கோமதியின் காலடியில் உருட்டினான். "இந்தா பிடி!" கோமதிக்கு அந்தப் பந்து ஒரு புதுமையான விஷயமாக இருந்தது. அவள் தன் மூக்கால் அந்தப் பந்தை மெதுவாக முட்டினாள். பந்து உருண்டு லட்சுமியின் கால் அருகே சென்றது. லட்சுமி அசைபோடுவதை நிறுத்திவிட்டு, "என்னடா இது உருண்டையா இருக்கு?" என்பது போலப் பந்தைப் பார்த்தாள்.

கோமதி இப்போது குஷியாகிவிட்டாள். அவள் துள்ளிக் குதித்து பந்தை விரட்டத் தொடங்கினாள். அவளது கால்கள் பின்னிப் பிணைய, ஒரு கட்டத்தில் பந்துக்குப் பதில் கோபியின் காலை முட்டினாள்.

"அம்மா... இவ என்னைத் தள்ளுறாம்மா!" என்று கோபி கீழே விழ, கோமதி வெற்றிக் களிப்பில் அவன் முகத்தைச் சுற்றும் முற்றும் நக்கினாள்.

"சரி சரி... போதும். லட்சுமி, இவளுக்குச் சுத்தமா அறிவே இல்லை. பந்து எது, நான் எதுன்னு கூடத் தெரியலை," என்று கோபி புலம்பினான்.

லட்சுமி மெதுவாகக் கோபியின் சட்டையைப் பற்களால் இழுத்தாள். "என் மகளைச் சொல்லாதே... நீயும் அவளும் ஒண்ணுதான். ரெண்டு பேரும் என் பிள்ளைங்க தான்" என்பது போலத் தெரிந்தது அவளது அசைவு.

அப்போது கோபி மெதுவாகக் கையில் வைத்திருந்த ஒரு சிறிய வெல்லக் கட்டியை எடுத்தான். "லட்சுமி அம்மா, இது உனக்கு. ஆனா இது இருக்கறது கோமதிக்குத் தெரியக் கூடாது, சரியா?" என்று ரகசியமாகச் சொன்னான்.

ஆனால், கோமதியின் மூக்கு எதைக் கண்டுபிடிக்குமோ இல்லையோ, வெல்லத்தின் வாசனையைத் துல்லியமாகப் பிடித்துவிடும். அவள் சட்டென்று கோபியின் சட்டைப் பைக்குள் தலையை நுழைக்க முயன்றாள்.

"ஏய்… ஏய்… சட்டை கிழிஞ்சுடும் கோமதி! விடு… விடு!" என்று கோபி போராட, லட்சுமி வேடிக்கை பார்த்துக்கொண்டே மீண்டும் அசைபோடத் தொடங்கினாள்.

சட்டென்று ஒரு சத்தம் கேட்டது. கதிர்வேலு உள்ளே இருந்து எழுந்து வரும் சத்தம். கோபி உஷாரானான். "அப்பா வர்றாரு, நான் ஓடுறேன். கோமதி, சமத்தா இருக்கணும்!" என்று சொல்லிவிட்டு அவன் ஓட, கோமதி அவன் பின்னாடியே கொட்டகையின் எல்லை வரை துள்ளிக் குதித்துச் சென்றாள்.

* * * * *

டாக்டர். ஜகதீஷ் சொன்ன அந்த எளிய யோசனை ஆரம்பத்தில் கதிர்வேலுக்கு ஒரு சவாலாகத் தான் இருந்தது. அவர் தினசரி குடித்த பாலுக்கும், விருப்பமான தயிர் சாதத்திற்கும், மணமான நெய்க்கும் 'வேண்டாம்' என்று சொல்வது கசப்பாய் இருந்தது. விரும்பி மூன்று வேளை குடிக்கும் காஃபியிலும் பால் இருக்கிறதே என்று சற்று அதிர்ச்சியாய் இருந்தது. ஆனாலும், மரணத்தின் வாயிலிருந்து மீண்டு வந்தவர்க்கு இது ஒரு சிறிய தியாகமாகப் பட்டது. நிரந்திர விடுதலை என்கிற இலக்கிற்காக மனதை திடப்படுத்திக் கொண்டான் கதிர்வேலு.

காஃபியில் பாலில்லாமல் வரக் காப்பியாக கதிர்வேலுவுக்கு கலந்து கொடுத்து சமாளித்தாள் காமாட்சி. அடுத்த தெருவில் வசித்த கலா என்ற தோழியிடமிருந்து கடலைப் பாலிலிருந்தும் தேங்காய் பாலிலிருந்தும் தயிர் செய்யும் விதத்தை தெரிந்து கொண்டு கதிர்வேலுவுக்கு பிடித்தமான தயிர் சாதத்தையும் செய்து கொடுத்தாள் காமாட்சி.

ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், ஆரம்பத்தில் தயங்கிய கோபிக்கும் இந்த 'கடலைப் பாலிலிருந்து தயாரித்த தயிர் சாதத்தின் சுவை மிகவும் பிடித்துப்போனது. "அம்மா, இது நிஜமான தயிர் சாதம் மாதிரியே இல்லை, அதைவிட ரொம்ப பிரமாதமா இருக்கு!" என்று கோபி

உற்சாகமாகச் சொன்னான். தன் மகனும் கணவரும் இந்த மாற்றத்தை ரசித்து ஏற்பதைப் பார்த்து காமாட்சிக்கும் நிம்மதியாக இருந்தது.

சரியாக ஒரு வாரம் கழித்து கதிர்வேலுவே ஆச்சர்யப்பட்டான். இத்தனை நாட்களாக நெஞ்சில் இருந்த இருக்கம் மெல்ல குறைந்தது போல உணர்ந்தான். மூச்சில் எப்பொழுதும் இருக்கும் விசில் சத்தம் முற்றிலுமாக ஓய்ந்து விட்டது. "காமாட்சி, இந்த ஒரு வாரத்திலேயே கொஞ்சம் மாற்றம் இருக்கிற மாதிரி இருக்கே," என்று சிலிர்த்தான் கதிர்வேலு.

இந்த ஆரம்ப வெற்றி அவனுக்கு பெரிய நம்பிக்கையைக் கொடுத்தது.

டாக்டர் சொன்னது போல இன்னும் ஒரு மாதம் பாலில்லா உணவு முறையை கண்ணும் கருத்துமாக கடைபிடிக்கப் போகிறேன் என்று தனக்குத் தானேயும் மற்றும் காமாட்சியிடமும் கூறினான். உணவு விஷயத்தில் அவன் மிகவும் கண்டிப்புடன் இருந்தான் “வாயைக் கட்டி நோயை கட்டு” என்று எப்போதோ எங்கேயோ கேட்டது அவன் நினைவுக்கு வந்தது

கடைகளில் வாங்கும் பிஸ்கட்டுகள் பிரட்டுகள் போன்றவற்றிலும் பால், பால் பவுடர் சேர்க்கப்படுகிறதா என்று பார்த்து பார்த்து வாங்கினான். அப்படி சேர்க்கப்பட்டிருந்தால் அதைத் தவிர்த்து விடுவான்.

வீட்டிற்கு வருபவர்கள் இனிப்பு வகைகள் வாங்கி வந்தால் அதில் பால் அல்லது நெய் இல்லையா என்பதை உறுதி செய்து கொண்டு உண்டான்.

நாட்கள் நகர்ந்தன. இந்த நான்கு வாரங்களில் ஒரு அதிசயம் நடந்தது.

கதிர்வேலுவுக்கு ஒரு முறை கூட மூச்சுத் திணறல் வரவில்லை. அவனது அவசர கால மருந்தான இன்ஹேலரை அவன் தொட்டுக் கூட பார்க்கவில்லை.

அதை எடுக்கும் அவசியம் எழவே இல்லை. மிக முக்கியமாக மாடிப் படியில் ஏறி இறங்கும் போதோ, சற்று வேகமாக நடக்கும் போதோ முன்னர் இரைத்த மூச்சு இப்போது இயல்பாக இருந்தது. இத்தனை ஆண்டு காலமாக அவரை பயமுறுத்திய அந்த மூச்சுத் திணறல் போய் இப்போது எங்கே மறைந்தது என்று தெரியவில்லை.

நான்கு வாரங்கள் நிறைந்தவடைந்த பிறகு டாக்டர் ஜகதீஷை மீண்டும் சந்திக்கச் சென்ற போது, கதிர்வேலுவின் முகத்தில் ஒரு புதிய தெளிவு இருந்தது. பயமோ, பதட்டமோ இல்லை. ஒரு குழந்தையைப் போல

பெருமகிழ்ச்சியுடன் “டாக்டர், டாக்டர் என்ன ஆச்சர்யம் தெரியுமா? நீங்கள் சொன்ன உணவு முறையை நான் அப்படியே பின்பற்றி பால் மற்றும் பால் சார்ந்த பொருட்களை அறவே எடுத்துக் கொள்ளவில்லை.
கடந்த ஒரு மாதமா எனக்கு மூச்சு திணறலே வரல, ஒரு தடவை கூட நான் என் இன்ஹேலரை யூஸ் பண்ணவில்லை” என்று உணர்ச்சி பூர்வமாக தனது முன்னேற்ற நிலையை பற்றி பெருமிதத்துடன் சொன்னான். அவன் குரலில் பழைய நோயாளியின் ஏக்கம் இல்லை. ஒரு புதிய மனிதனின் உற்சாகம் இருந்தது.

கதிர்வேலுவின் இந்த முன்னேற்றத்தைக் கேட்ட டாக்டர் ஜகதீஷ் ஏதோ சொல்ல வந்தபோதுஅவருடைய செல்போன் ஒலித்தது. அதை எடுத்து "சொல்லுங்க மேடம்" என்றார். கதிர்வேலு அந்த போன் கால் முடிவதற்காக ஆவலுடன் காத்திருந்தான். ஆனால் அது நீண்ட நேரமாக நீடித்துக்கொண்டிருந்தது.

* * * * *

இந்த வருடம் கோபியின் பள்ளி இருபத்தைந்து ஆண்டுகளை பூர்த்தி செய்தமைக்காக ‘மாற்றம்’ என்ற அறிவுப் பெருவிழாவை ஏற்பாடு செய்து இருந்தது.

இதில் கலை நிகழ்ச்சிகள், அறிவியல், இலக்கியம், சுற்றுக் சூழல் தொடர்பான கருத்தரங்குகளும், ஆவண திரைப்படங்களும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. கோபியின் வகுப்பாசிரியர் ஜானகி டீச்சர் எல்லா வகுப்பு மாணவர்களையும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு ஊக்குவித்தார். கோபியின் ஆர்வத்தை நன்கு அறிந்ததால் வியாழக்கிழமை மதியம் நடக்கவிருந்த சுற்றுச் சூழல் கருத்தரங்கம் உனக்கு மிகவும் பிடிக்கும், கோபி என்று அவனையும் ஊக்கப்படுத்தினார்.

இந்த சுற்றுச் சூழல் கருத்தரங்கில் “கால் நடை வளர்ப்பும், சுற்றுச் சூழல் மாற்றமும்” என்ற தலைப்பில் பேசவிருக்கும் சிறப்பு விருந்தினர் இந்தியாவின் புகழ் பெற்ற இயற்கை பாதுகாப்பு பல்கலைக்கழகத்தைச் சார்ந்த டாக்டர். செந்தில் நாதன் அவர்கள். தானும் ஒரு பால் பண்ணையின் பின்னணியிலிருந்து வருவதால் இதைக் கேட்க வேண்டும் என்ற ஆர்வம் கோபிக்கு ஏற்பட்டது.

வியாழன் மதியம் வந்தது. அரங்கம் நிரம்பி வழிந்தது. டாக்டர். செந்தில் நாதன் மேடை ஏறினார் அவர் தன் உரையை துவங்கினார். கோபி ஆவலுடன் முன் வரிசையில் அமர்ந்திருந்தான்.

“நண்பர்களே, இன்றைய சூழலியல் மாற்றங்கள் அல்லது கிளைமேட் சேஞ்ச் குறித்துப் பேசும்போதெல்லாம், பலரும் புகை கக்கும் கார்கள், தொழிற்சாலைகளின் புகைபோக்கிகள் அல்லது விமானங்களைத்தான் இயற்கையின் மிகப்பெரிய எதிரிகளாகக் கருதுகிறார்கள். இது உண்மை தான்.

ஆனால், ஐக்கிய நாடுகள் சபையின் FAO எனப்படும் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு வெளியிட்ட அறிக்கைகள் அதிர்ச்சிகரமான ஒரு உண்மையை நமக்குச் சுட்டிக்காட்டுகின்றன.

உலகில் நிலவும் இயற்கைச் சீர்கேடுகளுக்கு, நாம் வழக்கமாக நினைக்கும் போக்குவரத்துத் துறையை விடவும், மிக வேகமான மற்றும் மோசமான அச்சுறுத்தலாக இருப்பது மனிதத் தேவைகளுக்காகப் பெருகிவரும் 'கால்நடைப் பண்ணைகள்' தான் என்று அந்த அறிக்கை கூறுகிறது.

கோபி அதிர்ந்து போனான். மாடுகள் எப்படி இயற்கைக்கு அச்சுறுத்தலாக இருக்க முடியும்?

"நாம் ஒரு கார் அல்லது விமானத்தை இயக்கும் போது அது வெளியிடும் கார்பன் டை ஆக்ஸைடால் நம் சுற்றுச்சூழல் கெடுகிறது என்று நமக்குத் தெரியும். ஆனால் நாம் உண்ணும் பிரியாணி அல்லது பர்கரில் உள்ள இறைச்சியின் பின்னாலும், பால் மற்றும் பால் சார்ந்த பொருட்களுக்குப் பின்னாலும் அதைக் காட்டிலும் கொடிய சுற்றுச் சூழல் பாதிப்பு மறைந்திருக்கிறது. இது தான் உண்மை. பூமிக்கு அதிக தீங்கு விளைவிப்பதில் கார் மற்றும் வாகனங்களை விட இறைச்சியையும், பாலையும் தயாரிக்கின்ற 'அனிமல் அக்ரிகல்சர்’ என்று சொல்லப்படும் விலங்கின விவசாயமே முக்கியமான காரணம். இது ஆச்சர்யமாக இருக்கலாம் ஆனால் இதுவே உண்மை"

எல்லோரும் ஆச்சரியத்திலும் அதிர்ச்சியிலும் உறைந்தனர்.

விஞ்ஞானி டாக்டர் செந்தில் நாதன் தொடர்ந்து பேசினார். "போக்குவரத்துத் துறையால் உலகளாவிய கிரீன் ஹவுஸ் கேஸ் என்ற பசுமை இல்ல வாயு வெளியேற்றம் சுமார் 14 % என்றால் கால்நடைத் துறையால் வெளியேறும் வாயுவின் அளவு 16% ஆகும். இதைவிட முக்கியமான விஷயம் என்னவென்றால் வாகனங்கள் $CO_2$ என்ற கரியமில வாயுவை வெளியேற்றுகின்றன. ஆனால் கால்நடைகள், குறிப்பாக மாடுகள் வெளியேற்றுவது மீத்தேன் என்ற வாயு. இந்த மீத்தேன் வாயு பூமியை வெப்பமயமாக்குவதில் கரியமில வாயுவை விட இருபது மடங்கு

அதிக ஆபத்தானது. நீங்கள் உணவை மாற்றி அமைத்தால், வாகனங்கள் உபயோகிப்பதை குறைப்பதை விட அதிக சுற்றுச் சூழல் மாற்றத்தைக் கொண்டு வர முடியும். உங்களுக்கு சந்தேகம் இருந்தால் கூகுளை கேட்டு ஆராய்ச்சி செய்து தெரிந்து கொள்ளுங்கள். ஆர்வமுள்ளவர்கள் ஐக்கிய நாடுகள் அமைப்பின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு வெளியிட்ட அறிக்கையைப் படிக்கலாம். திரையில் தெரிந்த 'Live Stock Long Shadow by FAO' என்பதைக் கோபி ஆர்வமுடன் குறித்துக்கொண்டான்.

உலகெங்கும் கோடிக்கணக்கான பசுக்கள் மற்றும் கால்நடைகளை வளர்ப்பதற்காக, பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காடுகள் அழிக்கப்படுகின்றன. அந்த நிலங்கள் மேய்ச்சல் நிலங்களாக மாற்றப்படுகின்றன. இந்த காடழிப்பு, பூமியின் கார்பன்-டை-ஆக்சைடை உள்வாங்கும் திறனைப் பெருமளவு குறைத்துவிடுகிறது.

ஆம். பூமியைக் காப்பாற்றும் வேலை நாம் உண்ணும் உணவில் இருந்து தான் ஆரம்பிக்கிறது.

அடுத்து அவர் நிலப் பயன்பாடு குறித்து பேசினார். "ஆக்ஸ் போர்ட் பல்கலைக்கழகத்தின் ஆய்வு ஒன்றின்படி உலக அளவில் மொத்த விவசாய நிலத்தில் சுமார் 75% கால்நடை வளர்ப்பிற்காக பயன்படுத்தப்படுகிறது. கால்நடைகளுக்கான தீவனப் பயிர்கள் வளர்க்கவும், மேலும் மேய்ச்சல் நிலங்களாகவும் உபயோகப்படுத்தப் படுகின்றன. இந்த ஆய்வின்படி உலகில் உள்ள அத்தனை மனிதர்களும் இறைச்சி மற்றும் பால் பொருட்கள் உண்பதை நிறுத்தினால் இன்று கால் நடை வளர்ப்பிற்காகப் பயன்படுத்தப்படும் மொத்த விவசாய நிலப்பரப்பில் 80% த்தைக் குறைக்கலாம் . இது அமெரிக்கா, ஐரோப்பா ஆகியவற்றின் மொத்த பரப்பளவிற்குச் சமம் அல்லது இந்தியாவின் பரப்பளவிலிருந்து 4 அல்லது 5 மடங்கு பெரிதாக இருக்கும். இவ்வளவு பெரிய நிலத்தை நாம் விடுவிக்க முடியும் என்றால், காடுகள் மீண்டும் வளரும். காட்டு விலங்குகள் தன் வாழ்விடங்களை மீண்டும் பெறும். இந்த நிலப் பறிப்பு தான், இந்த நில அபகரிப்பு தான் இன்று எக்ஸ்டிங்ஷன் என்ற உயிரினங்களின் பேரழிவிற்குக் முக்கிய காரணமாக இருக்கிறது.''

அடுத்து தண்ணீர் பற்றாக்குறை குறித்து அவர் பேசினார். அப்பொழுது கோபிக்கு மூன்றாம் உலகப் போரே தண்ணிருக்காகத் தான் வரும் என்று எங்கோ படித்தது மனதில் தோன்றி மறைந்தது.

"அமெரிக்காவின் கலிபோர்னியா முதல் இந்தியாவின் சென்னை வரை தண்ணீர்ப் பஞ்சம் நிலவுகிறது. மாட்டிறைச்சி மற்றும் விலங்குகள் இறைச்சியை உற்பத்தி செய்ய ஒரு கிலோவுக்கு 20,000 லிட்டருக்கு மேல்

தண்ணீர் தேவைப்படுகிறது. ஒரு லிட்டர் மாட்டுப் பால் உற்பத்தி செய்ய 600 லிட்டருக்கும் அதிகமான தண்ணீர் செலவாகிறது. இதில் கால்நடைகளுக்கான தீவனப் பயிர்கள் வளர்க்கத் தேவைப்படும் தண்ணீர், மேய்ச்சலுக்கான தண்ணீர் மற்றும் கால்நடைகளை பராமரிக்கத் தேவைப்படும் தண்ணீர் ஆகிய அனைத்தும் அடங்கும். ஒரு கிலோ கோதுமை உற்பத்தி செய்ய தேவைப்படுவது வெறும் 200 லி மட்டுமே.

"ஒரு மனிதன் அசைவ உணவைத் தவிர்த்து பால், பால் சார்ந்த பொருட்களைத் தவிர்த்து தாவர உணவிற்கு மாறினால் ஒரு நாளைக்கு 4000 லிட்டர் தண்ணீரைச் சேமிக்கலாம். கால்நடை வளர்ப்பு நிலத்திற்கும், தண்ணீருக்கும் ஒரு இமாலய சுமையாக இருப்பது பலருக்கும் தெரிய வாய்ப்பில்லை.

பேச்சு முடிந்ததும், டாக்டர் செந்தில் நாதன், கௌஸ்பிரசி – Cowspiracy - என்கிற ஆவணப் படத்தை திரையிட்டார். அந்தப் படம் கால்நடை வளர்ப்பு எப்படி உலக வெப்பமயமாதல், காடுகளின் அழிப்பு, நீர் தட்டுப்பாடு ஆகியவற்றிற்கு மூல காரணமாக இருக்கிறது என்பதை வெளிச்சம் போட்டு காட்டியது.

சுருக்கமாகச் சொன்னால், நாம் குடிக்கிற ஒவ்வொரு கிளாஸ் பாலுக்குப் பின்னாலும், இவ்வளவு பெரிய சுற்றுச்சூழல் பாதிப்பும் ஒளிந்திருக்கிறது. 'கோமாதா' என்று நாம் வணங்கும் உயிரினத்தை, லாபத்துக்காக ஒரு தொழிற்சாலைப் பொருளாக மாற்றியதன் விளைவுதான், இன்று பூமி சந்திக்கும் இந்த இயற்கை மாற்றங்கள்," என்று தன் உரையை முடித்தார், டாக்டர் செந்தில் நாதன்.

பள்ளி கருத்தரங்கம் முடிந்து வீட்டிற்கு திரும்பிய கோபியின் தலைக்குள் ஆயிரம் கேள்விகள் தோன்றின.

இப்படி மாடுகளையும், விலங்குகளையும் மனித தேவைகளுக்காக அதிகமாக வளர்ப்பது பூமியை அழிப்பதற்குச் சமமாகுமா?

காட்டு விலங்குகளின் பேரழிவு, மாஸ் எக்ஸ்டிங்ஷன் இன்னும் 500 அல்லது 1000 ஆண்டுகளில் மனித இனத்தையும் அழித்து விடுமா? இவ்வளவு பெரிய பேரழிவிற்கு எங்களுடைய பசுமைப் பண்ணையும் ஒரு காரணமா? நாங்கள் விற்கும் பாலும், மற்றவர்கள் விற்கும் அதே மாட்டின் இறைச்சியும் இந்த பூமிக்கு இவ்வளவு சுமை ஆகிறதா?

கோபி தூக்கம் வராமல் இந்த கேள்விகளுடன் புரண்டு புரண்டு படுத்தான்.

* * * * *

லட்சுமிக்கு செயற்கை கருவூட்டல் செய்யப்பட்டு ஒன்பது மாதங்கள் உருண்டு ஓடின. கோமதியும் சற்று வளர்ந்திருந்தாள். அந்த ஒன்பது மாத காத்திருப்பு ஒரு அதிகாலைப் பொழுதில் முடிவுக்கு வந்தது. அந்த காலை பசுமைப் பண்ணையில் திடீரென எழுந்த இரைச்சல் மற்றும் சத்தம், லட்சுமி ஒரு கன்றை ஈன்றிருக்கிறாள் என்று தெரிவித்தது.

பண்ணையாளர்கள் ஒரு கன்று பிறக்கும் பொழுது அது ஒரு 'கடேரியாக இருக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்வார்கள்.

'கடேரி' என்பது ஒரு பெண் கன்றைக் குறிக்கும் சொல். குறிப்பாக, சினை படாத அல்லது முதன் முறையாக சினைப் படுத்துவதற்குத் தயாராக இருக்கும் வளர்ந்த இளம் பெண் கன்றை 'கிடேரி ' அல்லது 'கிதாரி' என்று அழைப்பார்கள்.

பெண் கன்றுகள் வருங்காலத்தில் பால் கொடுக்கும், வருமானத்தைப் பெருக்கும் என்பதால் பெண் கன்று பிறக்கும் போது மாட்டுப் பண்ணையாளர்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பார்கள்.

ஒரு பெண் கன்றுக்கு பதிலாக ஒரு ஆண் கன்று பிறக்கும் போது அந்த பண்ணையே மௌனமாகிவிடும். அங்கு மகிழ்ச்சிக்கு பதிலாக ஒரு வித ஏமாற்றமே மிஞ்சும்.

பசுமைப் பண்ணை போன்ற மாட்டுப் பண்ணைகளுக்கு பால் தான் வருமானம். ஆனால் ஆண் கன்றுகளோ வளர்ந்த பின் பால் கொடுக்காது. அதை பெரிய காளையாக வளர்க்க அதிக தீவனமும், இடமும் தேவைப்படும் ஆனால் அதற்குரிய உழைப்பு, ஏர் உழுதல் போன்றவை, இப்போழுது டிராக்டர்களால் செய்யப்படுவதால் அதற்கு வேலை இல்லை.

ஒரு பெண் கன்றை வளர்த்தால் அது எதிர்காலத்தில் ஒரு கறவை மாடாக மாறும். ஆனால் ஒரு ஆண் கன்றை வளர்ப்பது பண்ணையாளர்களுக்கு 'வெறும் செலவு' மட்டுமே. ஆண் கன்று பிறந்த சில நாட்களிலேயே அதை யாரிடம் விற்கலாம், அல்லது எப்படி அப்புறப்படுத்தலாம் என்ற பேச்சு தொடங்கி விடும். அதன் தாயிடம் கூட அதை முழுமையாக பால் குடிக்க விட மாட்டார்கள். ஏனெனில், அந்தப் பால் இலாபம் தரும் பொருளாகும்.

சத்தத்தோடு பசுமைப் பண்ணையில் லட்சுமி ஒரு கன்றை ஈன்றருக்கிறாள் என்று அறிந்தவுடன் கதிர்வேலு, குமரன் மற்றும்

பண்ணையில் இருக்கும் மற்ற உதவியாளர்கள் அது பெண் கன்றாக இருக்கவேண்டும் என்று ஆவலாக இருந்தனர்.

ஆனால் அங்கு சென்று பார்த்த போது லட்சுமியின் வயிற்றிலிருந்து வந்ததோ ஒரு துள்ளலான ஆண் கன்று.

கழுத்தில் ஒரு தழும்புடனும், நெற்றியில் வெண்மையான சுருள் முடியோடும் துரு துருவென்று, பார்க்கவே மிகவும் அழகாக இருந்தது.

பிறந்த அந்த கன்று தாய்மையின் எல்லையற்ற அன்பை தாங்கிக் கொண்டிருந்த லட்சுமியின் மடியை முட்டி முதல் பால் அருந்தி, சத்தம் போட ஆரம்பித்தது. சற்று தூரத்திலிருந்து இதைப் பார்த்த கோமதியின் மனதில் அத்தனை மகிழ்ச்சி. ஒரு அக்காவான உணர்வு கோமதியினுள் பெருக்கெடுத்தது.

இந்தத் தகவலை அறிந்த கோபி "ஆண் கன்று பிறந்திருக்கு! கோமதிக்கு தம்பிப் பாப்பா கிடைச்சுட்டான்" என்று கத்திக் கொண்டே ஓடி வந்தான். லட்சுமியின் அருகில் அமர்ந்து அங்கு சற்று முன் பிறந்த குட்டிக் கன்றின் தலையையும் கழுத்தையும் தடவி, உனக்கு இனி "ராஜா-ன்னு பேரு", என்று பிரியத்துடன் பெயர் சூட்டினான்.

கோமதிக்குப் பிடித்தமான விளையாட்டெல்லாம் இப்பொழுது ராஜாவுடன் தான். ராஜாவுக்கு இன்னும் முழுமையாக நடக்கத் தெரியாது. தடுமாறிதான் நடப்பான்.

ஒரு நாள் கோமதியும், ராஜாவும் விளையாடிக் கொண்டிருந்தனர். கோமதி மண் தரையில் அமர்ந்து தன் பெரிய தலையை ஆட்டி, "வா, ராஜா, என்னைப் பிடி என்று அழைப்பது போல் சத்தம் கொடுத்து விட்டு எழுந்து நின்றாள். ராஜா தடுமாறி எழுந்து வந்து, அக்கா கோமதியின் கால்களுக்கு இடையே நுழைந்து ஒளிந்து கொள்ள முயன்றான். கோமதி தன் கால்களை மெல்ல நகர்த்தி அவனை அரவணைத்துக் கொண்டாள். பிறகு, ராஜாவின் நெற்றியை தன் நாவினால் வருடி, தன் வாலை அசைத்து அவனை உற்சாகப்படுத்தினாள். அதன் பின் இரண்டு அடி முன் சென்று துள்ளிக் குதித்து ஓடிக் காட்டினாள்.

இதெல்லாம் வெறும் விளையாட்டல்ல. ஒரு அக்காவின் அன்பும் அரவணைப்பும் ராஜாவுக்கு கிடைத்தது. அந்த சிறிய உலகத்தில் ராஜாவின் வருகையால் கோமதியின் மகிழ்ச்சி நீரூற்று போல் பெருகியது. இதையெல்லாம் தன் ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டிருந்த

லட்சுமியின் மகிழ்ச்சி, அவளுடைய கண்களிலும், முகத்திலும் பிரதிபலித்தது.

ராஜாவின் வருகைக்குப் பிறகு, கோபியின் சாயங்கால நேரங்கள் எல்லாமே ராஜாவுடன் விளையாடுவதில் சென்றன. கோமதிக்கு மட்டும் ராஜா தம்பி இல்லை. கோபிக்கும் தான். பள்ளிக்கூடம் முடிந்த பின் கோபி நேராக ராஜாவின் கழுத்துக் கயிற்றை தளர்த்திவிட்டு ராஜா, ரெடியா? என்று கேட்பான்.

ராஜா தன் துள்ளலான கால்களால் கோபியை துரத்தத் தொடங்குவான். கோபி பண்ணையில் இருக்கும் வைக்கல் போருக்குப் பின்னால் ஒளிந்து கொள்ள, ராஜா தன் குட்டித் தலையை அங்கும் இங்கும் முட்டி தேடிக் கண்டு பிடிப்பான். கோபி சிரித்துக்கொண்டே ராஜாவைத் தூக்கிக் கொள்ள முயல்வதும், பதிலுக்கு ராஜா அவன் சட்டையை தன் நாவால் வருடுவதும் அடிக்கடி நடக்கும் சம்பவம்.

இந்த விளையாட்டில் அவ்வப்போது கோமதியும் சேர்ந்து கொள்வாள். கோபி ஓடிச் சென்று கோமதியின் பின்னால் ஒளிந்து கொள்ள ராஜா புரியாமல் முழிப்பதும், பிறகு மூவரும் சேர்ந்து பண்ணை மண்ணில் புரண்டு விளையாடுவதும் ஒரு உற்சாகமான, அழகான காட்சி.

இந்த மகிழ்ச்சியில் மாதங்கள் உருண்டோடின.

* * * * *

ஒரு ஞாயிற்றுக் கிழமை சந்தோசமாய் கோமதியும் ராஜாவும் விளையாடிக்கொண்டிருந்தபோது, பண்ணைக்குள் ஒரு மினி லாரி வந்தது. அதிலிருந்து, இரண்டு நபர்கள் இறங்கினார்கள் அவர்கள் கையில் ஒரு கயிறுடன் ராஜாவை நோக்கி வந்தனர்.

லட்சுமி ஏதோ ஆபத்து என்பதை உணர்ந்து ‘உஷ்ஷ்…’ சென்று மூச்சை விட்டு தரையைக் காலால் பிராண்டினாள். மின்னல் வேகத்தில் அந்த இரு நபர்களின் கையிலிருந்த கயிறு ராஜாவின் கழுத்தில் விழுந்தது. இது ஏதோ ராஜாவிற்கு ஆபத்து என்று அறிந்து லட்சுமி ஒரு பெரிய ஓலமிட்டாள். அதற்குள் அந்த இருவரும் ராஜாவை இழுத்துச் சென்று அந்த மினி லாரியில் நொடிப் பொழுதில் ஏற்றிவிட்டார்கள்.

கோமதி தன் தம்பி ராஜாவை இழுத்து கொண்டு வண்டியில் ஏற்றுவதைப் பார்த்துப் பதறிப் போய் தன் தலையால் அந்த இருவரையும் முட்டித் தள்ள முயன்றாள். அதனால் எதுவும் நடக்காத்தால் சற்று முன் சென்று லாரியை மறித்து நின்றாள்.

தூரத்திலிருந்த கோபி ஏதோ நடக்கக் கூடாதது நடந்து கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து வேகமாக ஓடி வந்தான். ராஜா மினி லாரியில் இருப்பதைக் கண்டு பதறிப் போய் அவனும் வேகமாக அந்த வண்டியில் ஏறி ராஜாவைக் கட்டிக் கொண்டான். "வேண்டாம்... ராஜாவை எங்கேயும் கொண்டு போகாதீங்க! அவன் எங்க தம்பி - ப்ளீஸ் விட்டிருங்க, விட்டிருங்க! என்று கதறினான், கோபி.

அதற்குள் குமரன் வந்துவிட, ஒரு வித நிம்மதியோடு குமரனை ஏறிட்டான் கோபி. ஆனால் குமரனோ, "ஏய் கோபி வண்டியை விட்டு இறங்கு. உங்க அப்பாதான் இவங்களை வரச் சொல்லியிருக்காரு. கோமதியை கூட்டிக்கிட்டு அந்தண்டை போ " என்று அதட்ட அதிர்ந்து போனான் கோபி. இறங்க மறுத்த கோபியை வலுக்கட்டாயமாய் இழுத்து வண்டியிலிருந்து கீழே இறக்கிவிட்டான் குமரன்.

லட்சுமி அம்மா, கோமதி, கோபி இவர்களின் கண்ணீரையோ, கதறலையோ சற்றும் பொருட்படுத்தாமல், ராஜாவை ஏற்றிக் கொண்ட மினி லாரி வேகமெடுத்தது. ஒன்றும் புரியாத ராஜா பயத்தில் ‘அம்மா, அம்மா’ என்று லட்சுமி அம்மா, கோமதி, கோபி மூவரையும் மாறி மாறி தவிப்புடன் பார்த்து அலறினான். இதைக் கண்ட லட்சுமி தன் கட்டுக்களை அறுத்தெறிய முயன்று, கழுத்தில் கயிறு இறுகித் தவித்தாள். கோமதி லாரியின் பின்னாலேயே ஓடினாள். கோபி செய்வதறியாமல் உறைந்து நின்றான்.

கொஞ்சம் கொஞ்சமாய் அந்த மினிலாரி இவர்களின் கண்களிலிருந்து மறைந்து சென்றது.

ராஜாவை இப்படி வலுக்கட்டாயமாக எங்கே, ஏன், எதற்காக கூட்டி சென்றார்கள் என்று தெரியாமல் கோபி மனக்கவலையுடன் உறைந்து நின்றான்.

ராஜாவின் இழப்பினால் துக்கம் தாங்காமல் லட்சுமி ஒரு வாரமாகவே எதையும் சாப்பிடவில்லை. பசுமைப் பண்ணையில் இதைப்பற்றி எல்லாரும் பேசிக் கொண்டிருந்தார்கள். ராஜாவை வலுக்கட்டாயமாக அவன் அம்மா லட்சுமி மற்றும் அக்கா கோமதியிடமிருந்து பிரித்து கொண்டு போனதைப் பார்த்த கோபியும் சோகத்தில் ஆழ்ந்திருந்தான். அவனும் சரியாக சாப்பிடாமல் அடிக்கடி அவன் அம்மா காமாட்சியிடம் 'ஏம்மா, மனிதர்கள் இப்படி செய்வது சரியா? ராஜாவை இப்படி வலுக்கட்டாயமாய் எங்கே தான் கூட்டிச் சென்றனர்? என்று அடிக்கடி

கேட்டு நச்சரித்தான். காமாட்சி பதில் கூற முடியாமல், தெரியாமல் ஏதோ மழுப்பினாள்.

கோடை விடுமுறையால் கோபியின் பள்ளி ஒரு மாதம் விடுமுறை அறிவித்திருந்தது. படிப்பு சம்பந்தமான வேலைகள் எதுவும் இல்லாததால் கோபி ராஜாவைப் பற்றிய சிந்தனையிலேயே ஆழ்ந்திருந்தான்.

* * * * *

நாட்கள் ஓடின. கோபி எப்போதும் சோகத்தில் மூழ்கியவனாக இருந்தான். 'பசுமைப் பண்ணை' அவனுக்கு இப்போது மகிழ்ச்சி தரும் இடமாக இல்லை. ராஜாவின் சிந்தனையில் சரியாகச் சாப்பாடும் இறங்கவில்லை. சாப்பிடவே மனமில்லாமல் போய்விட்டது.

கோபியின் இந்த மாற்றத்தைக் கவனித்த அவனது அம்மா காமாட்சியும், அப்பா கதிர்வேலுவும் கவலைப்பட்டார்கள்.

"என்னங்க, பையன் ஒரு மாதிரியாவே இருக்கான். அந்த ராஜா கன்னு குட்டியைக் கொண்டு போனதுல இருந்து அவன் முகமும் சரியில்லை ஆளும் சரியில்லை. லீவுதானே… வேணும்னா போத்தனூருக்கு அவனோட அத்தை வீட்டுக்கு அனுப்பி வைக்கலாமா?" என்று காமாட்சி கேட்க, கதிர்வேலுவும் உடனடியாகச் சம்மதித்தார்.

"சரிதான்… அங்க போனா சேகர், செந்தாமரை கூட ஓடி ஆடி விளையாடுவான். மனசு மாறும். ஊர் சுத்தும்போது இந்த ஞாபகம் எல்லாம் மறந்திடும்," என்றார் கதிர்வேலு.

கோபிக்கும் அந்த யோசனை பிடித்துப் போனது. தன் அத்தை மகன் சேகரும், மகள் செந்தாமரையும் அவனுக்கு மிகவும் நெருக்கம். போத்தனூர் ரயில்வே ஒர்க்ஷாப்பில் பணிபுரியும் உமாபதி மாமாவையும் கோபிக்கு மிகவும் பிடிக்கும். அவருடன் உரையாடுவதை அவன் பெரிதும் ரசிப்பான். உலக விஷயங்கள் பலவற்றிலும் மிகுந்த ஞானம் கொண்ட உமாபதி மாமா ஒரு நடமாடும் கலைக்களஞ்சியம்.

சில நாட்களிலேயே கோபி கோயம்புத்தூர் அருகிலுள்ள போத்தனூருக்குப் பயணமானான்.

போத்தனூர் அவனுக்குப் புது உற்சாகத்தைக் கொடுத்தது. அத்தை வீட்டின் பின்னால் இருந்த பெரிய மைதானம், தென்னை மரங்கள் எனச் சூழல் மாறவே, கோபியின் மனதில் இருந்த பாரம் மெல்லக் குறையத்

தொடங்கியது. ஒரு நாள் மதிய வேளை, மொட்டை மாடியில் நின்றிருந்த சேகர், "டேய் கோபி, இன்னைக்கு செம காத்து வீசுதுடா. வாங்கடா பட்டம் விடலாம்!" என்று உற்சாகமாகக் கூவினான்.

செந்தாமரை ஓடிப் போய் காகிதத்தால் செய்த சிவப்பும் நீலமும் கலந்த அழகான பட்டத்தையும், நூல்கண்டையும் எடுத்து வந்தாள். சேகர் நூலை விட, கோபி பட்டத்தை ஏந்திப் பிடித்துக் கொண்டு ஓடினான்.

"விடுடா… விடுடா!" என்று சேகர் கத்த, கோபி பட்டத்தைத் தூக்கி எறிந்தான். வானில் ஒரு வண்ணத்துப்பூச்சியைப் போலத் தள்ளாடித் தள்ளாடிப் பறந்த அந்தப் பட்டம், மெல்ல மெல்ல உயர ஏறியது.

"அங்க பாருங்க….. எவ்வளவு உசரமா போகுது!" என்று செந்தாமரை கைதட்டி ரசித்தாள். வானத்து மேகங்களுக்கு நடுவே அந்தச் சிவப்புப் பட்டம் ஒரு சின்னப் புள்ளி போலத் தெரிந்தது. பட்டத்தின் வால் ஒரு பாம்பு போல் வளைந்து நெளிந்து கொண்டிருந்தது.

நூலை லேசாக இழுத்து இழுத்து விட, அது காற்றில் நீந்திச் சென்றது. ஆனால், திடீரென வீசிய ஒரு பலமான சுழற்காற்றில் சிக்கிய அந்தப் பட்டம், நிலைதடுமாறிப் பக்கத்தில் இருந்த ஒரு பெரிய புளிய மரத்தின் கிளைகளில் சிக்கிக் கொண்டது.

சேகர் நூலை இழுத்துப் பார்த்தான். "ஐயோ… கிழிஞ்சிருச்சுடா!" என்று வருத்தப்பட்டான். கிளைகளில் சிக்கியதில் பட்டத்தின் ஒரு பகுதி கிழிந்து தொங்கியது.

"விடுங்கண்ணே… நாம போயி வேற புதுப் பட்டம் வாங்கிட்டு வருவோம். அந்தப் பக்கம் பெரிய பெரிய கலர்ல பட்டம் விக்கிற கடை இருக்கு," என்றாள் செந்தாமரை.

‘சேகரும் நானும் போயிட்டு வர்றோம்’ என்று உற்சாகமாகக் கூறினான் கோபி.

கோபியும் சேகரும் பட்டங்கள் வாங்குவதற்காக அந்தச் சிறிய சந்துக்குள் நடந்தார்கள். போகும் வழியில் பழனியப்பன் கடையில் கமர்கட் வாங்கி அதை வாயில் அடக்கிக்கொண்டே சென்றார்கள். கமர்கட் இருவருக்கும் மிகவும் பிடித்த மிட்டாய். பாறாங்கல்லை விட உறுதியான கமர்கட்டை மிக நேரம் வாயில் ஊற வைத்து, அதை ருசித்து, கடித்துச் சாப்பிடுவதில் ஒரு தனி சுகம்.

சிறிது தூரம் சென்றதுமே, கோபியின் மூக்கை ஒரு கடுமையான நாற்றம் தாக்கியது. அது சாணம், காய்ந்த ரத்தம் மற்றும் அழுகிய இறைச்சி கலந்த ஒரு குமட்டல் தரும் வாசனை.

"என்னடா இது ஒரு மாதிரி வாடை?" என்று கோபி தன் மூக்கைக் கர்சீப்பால் பொத்திக் கொண்டான்.

"அதுவா... அது 'மாட்டுத் தொட்டி'. அங்கதான் மாடுகளை வெட்டுவாங்க. நாம அந்தப் பக்கமாத்தான் கிராஸ் பண்ணிப் போகணும்," என்றான் சேகர் எதார்த்தமாக.

அவர்கள் அந்த இடத்தை நெருங்கியபோது, கோபியின் கால்கள் நடுங்கத் தொடங்கின. அந்த இறைச்சிக் கூடத்தின் தரை முழுவதும் ரத்தமும் நீரும் கலந்து ஆறாக ஓடிக் கொண்டிருந்தது. கால்களை உயர்த்தி அந்த ரத்த ஓடைகளைத் தாண்டித் தாண்டி நடக்க வேண்டியிருந்தது. சுற்றிலும் ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன. அந்த இடமே ஒரு நரகத்தின் வாசல் போல இருந்தது.

கோபி உள்ளே எட்டிப் பார்த்தான். அங்கிருந்த காட்சிகள் அவனை உலுக்கின. பெரிய பெரிய பசு மாடுகளின் கால்கள் தூண்களோடு கட்டப்பட்டு, தலைகள் மேலே தூக்கிக் கட்டப்பட்டிருந்தன. ஒரு கசாப்புக்காரன் கூர்மையான கத்தியால் ஒரு பசுவின் கழுத்தை அறுக்க, அடுத்த நொடி பீய்ச்சி அடித்த ரத்தம் தரையில் தெறித்தது. அந்த மாடு போட்ட மரண ஓலம் கோபியின் காதுகளைத் துளைத்தது. அந்த மாட்டின் கண்களில் தெரிந்த கண்ணீரும் பயமும் அவனை உறைய வைத்தன.
சிறிது நேரம் கழித்துத் திரும்பி வரும்போது, அதே மாடு தோல் உரிக்கப்பட்டு, சதைகளும் எலும்புகளும் வெளியே தெரியக் கொக்கிகளில் தொங்கவிடப்பட்டிருந்தது.

"என்ன கொடுமைடா இது!" என்று கோபி அதிர்ச்சியோடு கேட்டான்.

அப்போது, அந்த இறைச்சிக் கூடத்தின் வாசலில் ஒரு வேன் வந்து நின்றது. அதிலிருந்து வரிசையாகப் பத்துப் பன்னிரண்டு சிறு கன்றுக்குட்டிகளை இறக்கினார்கள். அவை வரிசையாக உள்ளே இழுத்துச் செல்லப்பட்டன. திடீரென, கூட்டத்தில் இருந்த ஒரு கன்றுக்குட்டி, கோபியைப் பார்த்ததும் துள்ளிக்குதிக்க ஆரம்பித்தது.

"ம்மா... ம்மா... ம்மா..." என்று அது கத்திய சத்தம் கோபியின் நெஞ்சில் ஈட்டியாய்ப் பாய்ந்தது.

அவன் உற்றுப் பார்த்தான். அந்தக் கழுத்தில் இருந்த தழும்பு, அதன் நெற்றியில் இருந்த அந்த வெண்மையான சுருள் முடி... "ராஜா! இது நம்ம ராஜாடா!" என்று கத்திக் கொண்டே அந்த ரத்தச் சகதிக்குள் ஓடினான் கோபி.

"ஏய் தம்பி! யாரு நீ? உள்ள வராதே! வெளியே போ!" என்று ஒரு ஆள் கோபியைத் தடுத்தான்.

"இது என் ராஜா... இதைக் கொன்னுடாதீங்க... இது எங்க பண்ணையில இருந்தது!" என்று கோபி அழுதபடி ராஜாவைக் கட்டிக்கொண்டான். அந்தப் பிஞ்சு ராஜா, கோபியின் சட்டையைத் தன் நாவால் நக்கியபடி பயத்தில் நடுங்கியது.

"தம்பி, நாங்க காசு கொடுத்து வாங்கியிருக்கோம். இதை இப்ப வெட்டப்போறோம். பேசாம போயிடு," என்றான் அந்த ஆள் கடுமையாக.

"சேகர்... ஓடு... ஓடிப் போய் மாமாவைக் கூட்டிட்டு வாடா! சீக்கிரம்!" என்று கோபி கத்தினான்.

சிறிது நேரத்தில் உமாபதி மாமா பதற்றத்துடன் ஓடி வந்தார். "என்னடா விஷயம்? இந்த இடத்துக்கு ஏன் வந்தீங்க?" என்று கேட்டார்.

கோபி அழுகையினூடே நடந்ததைச் சொன்னான். "மாமா, இது நம்ம பண்ணை ராஜா. இவனை யாரோ வந்து இங்க வித்துட்டாங்க. இவனைக் காப்பாத்துங்க மாமா... ப்ளீஸ்!" என்று அவர் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

உமாபதி அங்கிருந்தவர்களிடம் பேசினார். "இது இந்தப் பையனோட செல்லக் கன்று. இதை எங்ககிட்டயே கொடுத்திடுங்க," என்றார்.

"நாலாயிரம் ரூபா கொடுத்தா இதைக் நீங்கள் கொண்டு போகலாம். இல்லன்னா இது பிரியாணிக்குத்தான் போகும்," என்றான் அந்த உரிமையாளன் கறாராக.

உமாபதிக்கு நாலாயிரம் ரூபாய் என்பது பெரிய தொகைதான். ஆனால் கோபியின் துடிப்பையும், அந்த உயிரின் தவிப்பையும் பார்த்த பிறகு அவரால் மறுக்க முடியவில்லை. தன் மணிப்பர்ஸை எடுத்து வீட்டு வாடகைக்காக வைத்திருந்த பணத்திலிருந்து நாலாயிரம் ரூபாயை எண்ணிக் கொடுத்தார்.

பணத்தைப் பெற்றுக்கொண்ட அந்த நபர், ராஜாவின் கழுத்தில் கட்டப்பட்டிருந்த அந்தத் தடிமனான கயிறை அவிழ்த்தார். கயிறு கழன்ற அடுத்த நொடி, மரண பயத்தில் உறைந்திருந்த ராஜா, நேராக ஓடி வந்து கோபியின் மார்பில் தன் தலையை முட்டி நின்றான்.

கோபியின் கண்களில் நீர் முட்டியது. அவன் ராஜாவின் தலையை வருடி, "பயப்படாதடா... நான் வந்துட்டேன்," என்று உருகினான்.

ராஜா கோபியின் கைகளைத் தன் நாவினால் நக்கினான். அந்த நாவினுடைய சொரசொரப்பு கோபிக்கு ஒரு பெரிய நன்றியுரையாகத் தெரிந்தது. அந்தச் சிறிய கன்றுக்குட்டியின் கண்களில் தெரிந்த நிம்மதியும், கோபியின் ஸ்பரிசத்தில் அது அடைந்த பாதுகாப்பும் அங்கிருந்த அனைவர்களின் கண்களையும் கசியச் செய்தன.

ராஜா விடுவிக்கப்பட்டான். அந்த நரகத்திலிருந்து தன் நண்பனை மீட்டெடுத்த திருப்தி ஒருபுறம் இருந்தாலும், கோபியின் மனதில் ஒரு பெரிய கேள்வி எழுந்தது. ஒரு வேளைத் தயிருக்காகவும், பாலுக்காகவும் நாம் வளர்க்கும் மாடுகள், கடைசியில் இப்படித்தான் ரத்தச் சகதியில் முடிய வேண்டுமா?

ராஜாவைக் கூட்டிக் கொண்டு அத்தை வீட்டுக்குத் திரும்பும் அந்த வழிநெடுகிலும் ஒரு மயான அமைதி நிலவியது. கோபியின் மனதிற்குள் அந்தக் கொலைக்கூடத்தின் ரத்த வாடையும், மாடுகளின் மரண ஓலமும் அலைகளாக அடித்துக் கொண்டிருந்தன.

அமைதியைக் கலைத்து, கோபி மெல்லிய குரலில் கேட்டான், "மாமா, பண்ணையில் மாடுகளை எவ்வளவு அன்பா வளர்க்குறாங்க... அப்புறம் எப்படி அங்கிருந்து இங்கக் கொண்டு வந்தாங்க? அவங்களுக்கு மனசு எப்படிக் கேக்கும்?"

உமாபதி மாமா ஒரு பெருமூச்சை விட்டுவிட்டுச் சொல்லத் தொடங்கினார்:

"கோபி, பண்ணை வைத்திருப்பவர்களுக்கு இது ஒரு தொழில், அவ்ளோதான். ஒரு பசு மாடு பால் கொடுக்கும் வரைதான் அவர்களுக்கு அது மகாலட்சுமி. பால் குறையத் தொடங்கினால், அது அவர்களுக்கு வெறும் 'சுமை' தான்"

"ஒரு மாடு பால் கொடுக்கணும்னா அது வருஷா வருஷம் கன்று ஈனனும். அப்படிப் பிறக்கிற ஆண் கன்றுகளுக்கு அங்க வேலையே இல்லை.

அதுதான் ராஜா மாதிரி இங்க வந்துருது. பெண் கன்றுகளைப் பால் கறக்க வளர்ப்பாங்க."

"அஞ்சு அல்லது ஆறு முறை இப்படிப் பால் கறந்த பிறகு, அந்த மாடு களைத்துப் போயிடும். அதற்குப் பிறகு தீவனம் போட்டு வளர்க்கப் பண்ணை முதலாளிகளுக்கு இஷ்டம் இருக்காது. அப்போதான் அவங்க கை கழுவிடுவாங்க. பால் வற்றிய அந்த  மாடுகளைப் வித்துடுவாங்க. அது கடைசியில போத்தனூர் மாதிரி இடங்களுக்கு வந்து சேருது. இது எல்லோருக்கும் ஓரளவு தெரிந்த விஷயம்தான் என்றாலும், இதைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. கவலைப்பட்டாலும் எதுவும் நடக்கப்போவது இல்லை.”

உமாபதி மாமா பேசப் பேச, கோபியின் கண்கள் கலங்கின. "அப்போ நாம குடிக்கிற ஒவ்வொரு சொட்டுப் பாலுக்குப் பின்னாலயும் இவ்வளவு பெரிய துரோகம் இருக்கா மாமா?" என்று அதிர்ச்சியோடு கேட்டான்.

"உண்மைதான் கோபி. நமக்குப் பால் கொடுக்கத் தன் வாழ்நாளையே தியாகம் பண்ற அந்த ஜீவன்களுக்கு நாம கடைசியா கொடுக்கிற பரிசு - கசாப்புக்கடை கத்திதான்," என்று மாமா கசப்பான உண்மையைச் சொன்னார்.

ராஜாவைக் கூட்டிக் கொண்டு அத்தை வீட்டுக்குத் திரும்பியபோது, கோபியின் மனம் மாறி இருந்தது.

அவனுக்குச் சில புதிய உண்மைகள் கண்ணுக்கு முன்னால் தெரிந்தன. பால் தொழிலின் பின்னால் இருக்கும் இவ்வளவு பெரிய வன்முறையும், ரத்தமும் அவனுக்குப் பெரும் பாடத்தைக் கற்பித்திருந்தன.

ராஜாவையும் மற்ற மாடுகளையும் ஒரு கொலைக் கூடத்தில் பார்த்தது அவனுக்குப் பெரிய அதிர்ச்சியை அளித்தது. இது நாள் வரை மாடுகளை அன்போடும் ஒரு குடும்ப உறுப்பினர் போல் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது போய், திரைக்குப் பின்னால் இருக்கும் நிதர்சனமான உண்மைகள் அவனுக்குத் தெரிய வந்தது.

இதைப் பார்த்த பிறகு அங்கேயே அவன் ஒரு முடிவுக்கு வந்தான் - இனி என் வாழ்க்கையில் ஒரு சொட்டுப் பாலைக்கூடத் தொடப் போவதில்லை என்று உறுதி பூண்டான்.

தன் குடும்பம் செய்யும் தொழிலில் இவ்வளவு இருண்ட பக்கம் இருப்பதை அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அந்தப் போத்தனூர்

பயணம், ஒரு சிறுவனாகச் சென்ற கோபியை, ஒரு முதிர்ந்த சிந்தனையாளனாக மாற்றியிருந்தது. போத்தனூரில் தங்கியிருந்த அந்தப் பத்து நாட்களில், கோபியின் உலகமே தலைகீழாக மாறியிருந்தது.

* * * * *

அன்று மாலை உமாபதி மாமாவுடன் வெளியே சென்றபோது, அதே இறைச்சிக் கூடத்தைக் கடக்க வேண்டியிருந்தது. வாசலில் ஒரு பெரிய லாரி நின்று கொண்டிருந்தது. தொழிலாளர்கள் சிலர் பெரிய பெரிய ஐஸ் கட்டிகளைப் போட்டு மாட்டு இறைச்சியை அடுக்கி, பக்கத்து மாநிலமான கேரளாவிற்கு அனுப்பத் தயாராகிக் கொண்டிருந்தனர்.

இன்னொரு பக்கம், வேறொரு லாரியில் மாடுகளின் தோல்கள் ரத்தமும் சதையுமாக, உதிர்ந்த முடிகளோடு மலைபோலக் குவிக்கப்பட்டிருந்தன. அதிலிருந்து வீசிய நெடி கோபியை முகம் சுளிக்க வைத்தது.

"மாமா, இந்தத் தோலையெல்லாம் என்ன பண்ணுவாங்க? இதையும் யாராவது சாப்பிடுவாங்களா?" என்று கோபி தெரியாமல் அருவருப்போடு கேட்டான். உமாபதி மாமா லேசாகச் சிரித்துவிட்டு, "இல்லடா கோபி, இதை யாரும் சாப்பிட மாட்டாங்க. ஆனா, நாம இதைப் போட்டுக்குவோம்," என்றார். கோபி புரியாமல் பார்த்தான். "நாம எப்படி மாட்டுத் தோலைப் போட்டுக்குவோம்?"

"கோபி, நாம காலுக்குப் போடுற ஷூ, கையில வச்சிருக்கற மணி பர்ஸ், இடுப்பு பெல்ட், சில சமயம் சோபா... இது எல்லாமே லெதர் தானே? அந்த லெதர்ங்கிறது வேற ஒன்னும் இல்ல, இந்த மாடுகளோட தோல் தான்".

“ஒரு வருஷத்துக்கு மட்டும் பத்து முதல் பன்னிரண்டு கோடி பசு மாடு, எருமை மாடு, ஆடு, செம்மறியாடுன்னு எல்லாத்தோட தோலையும் இப்படித்தான் உரிச்சு லெதரா மாத்துறாங்க," என்றார் உமாபதி மாமா.

கோபிக்கு உடம்பெல்லாம் சிலிர்த்தது. "அப்போ, நாம போடுற ஷூவுக்காக ஒரு உயிர் கொல்லப்படுதா மாமா?"

"ஆமாடா. ஆனா கொடுமை இதோட முடியல. இந்தத் தோலைச் சுத்தப்படுத்தி, பதப்படுத்தி லெதரா மாத்துற 'டேனரி' தொழிற்சாலைகள் இருக்குல்ல... அங்க பயன்படுத்துற கெமிக்கல்ஸ் ரொம்ப ஆபத்தானது. சுண்ணாம்பு, ஆசிட், சல்பைடுன்னு நச்சுப் பொருட்களைக் கலந்துதான் தோலைப் பதப்படுத்துவாங்க. அந்தப் படிவுகள் அப்புறம் அப்படியே

தண்ணியிலயும் நிலத்திலயும் கலந்து பெரும் மாசுபாட்டை உண்டாக்குது. நிலமே வீணாயிடும்."

கோபி தன் கால்களைப் பார்த்தான். அவன் ஒரு லெதர் செருப்பு தான் அணிந்திருந்தான். அவனுக்கு அது நெருப்பை மிதிப்பது போல இருந்தது. "மாமா, இதுக்கு மாற்றே இல்லையா?"

"ஏன் இல்ல? இப்பல்லாம் விலங்குகளோட தோல் இல்லாமலேயே 'சிந்தெடிக் லெதர்' அல்லது 'ஃபாக்ஸ் லெதர்' கிடைக்குது. அதைத் தவிர சணல் மாதிரி இயற்கையான பொருட்கள்ல செஞ்ச பொருட்களைப் பயன்படுத்தலாம். அது விலையும் குறைவு, சுற்றுச்சூழலுக்கும் நல்லது. எல்லாத்துக்கும் மேல, அதுல எந்த உயிரோட வலியும் இருக்காது," என்றார் உமாபதி மாமா.

கோபி அந்த லாரியில் இருந்த தோல்களைப் பார்த்தான். அதன் மீது அமர்ந்திருந்த ஈக்களும், வழிந்த ரத்தமும் அவனுக்கு ஒரு விஷயத்தைத் தெளிவாகச் சொன்னது. நாகரீகம் என்கிற பெயரில் மனிதன் அணிந்திருக்கும் பல ஆடம்பரங்கள், இன்னொரு உயிரயைப் பறித்துச் செய்யப்பட்டவைதான்.

அன்றிலிருந்து லெதர் பொருட்களைத் தவிர்ப்பது என்றும்அவன் மனதுக்குள் உறுதியெடுத்துக் கொண்டான்.

* * * * *

போத்தனூரிலிருந்து மதுரைக்குத் திரும்பும் ரயிலில், ஜன்னலோரம் அமர்ந்திருந்த கோபியின் கண்கள் வெளியே ஓடிக்கொண்டிருந்த பசுமையைப் பார்க்கவில்லை. அவன் மனம் கடந்த சில நாட்களில் கண்ட காட்சிகளை ஒரு கோர்வையாக இணைத்துப் பார்த்துக் கொண்டிருந்தது.

கசாப்புக் கடையில் தான் பார்த்த அந்த ரத்த ஓடைகளும், ராஜாவின் பயம் கலந்த மிரட்சியும் அவன் மனதை விட்டு அகலவே இல்லை. கண்களை மூடினால் அந்த மரண வாடை மீண்டும் மீண்டும் அவன் நாசிகளைத் துளைத்தது. அதுவரை 'பால்' என்பது வெள்ளை நிறத்தில் இருக்கும் ஒரு ஆரோக்கியமான உணவு என்று மட்டுமே அவன் நினைத்திருந்தான். ஆனால், இப்போது அது ஒரு கன்றுக்குட்டியின் கண்ணீரோடும், ஒரு பசுவின் வாழ்வோடும் வலியோடும் பின்னிபிணைக்கப்பட்டிருப்பதை அவன் உணர்ந்து கொண்டான்.

வீட்டிற்கு வந்தபோது, 'பசுமைப் பண்ணை' அவனுக்கு ஒரு சொர்க்கமாகத்

தெரியவில்லை. மாறாக, மாடுகள் போத்தனூரில் பார்த்த மாதிரி உள்ள கொலைக்கூடம் செல்லும்வரை தற்காலிகமாகச் சிறை வைக்கப்பட்டிருக்கும் ஒரு இடமாகவே தோன்றியது.

அவன் ஒரு முடிவுக்கு வந்திருந்தான். அந்த முடிவு அவனது குடும்பத்தின் மரபுக்கும், தொழிலுக்கும் முற்றிலும் எதிரானது. ஆனால், அவன் கண்ட ரத்த ஆறுகளும், ராஜாவின் தவிப்பும் அவனை அமைதியாக இருக்க விடவில்லை.

வீட்டிற்கு வந்த அன்று இரவு, உணவருந்த அமர்ந்தபோது காமாட்சி ஒரு டம்ளர் திக்கான பாலை கோபியின் முன்னால் வைத்தார். "இந்தாப்பா கோபி, நல்லா ஆத்துன பால்... குடி," என்றார் அன்புடன்.

கோபி அந்தப் பாலை அருவருப்போடு பார்த்தான். "எனக்கு பால் வேண்டாம்மா... இனிமே நான் பால் சாப்பிட மாட்டேன். இனிமே நான் பால், தயிர், நெய்ன்னு எந்தப் பால் பொருளையும் சாப்பிடப் போறதில்லை," என்றான் உறுதியாக.

சமையலறையிலிருந்து வெளியே வந்த கதிர்வேலு ஆச்சரியத்துடன் பார்த்தார். "என்னடா சொல்ற? உனக்குத்தான் பால்னா அவ்வளவு பிடிக்குமே! அத்தை வீட்டுல என்ன சொல்லிக் கொடுத்தாங்க? இல்ல சேகர், செந்தாமரை ஏதாவது எக்குத்தப்பா சொன்னாங்களா? பால் குடிக்கலைன்னா உடம்புல தெம்பு இருக்காதுடா. புரோட்டீனும், கால்சியமும் வளர்ற வயசுல உனக்கு ரொம்ப முக்கியம்," என்றார் ஒரு தந்தையின் அக்கறையோடு.

கோபி மெல்ல மூச்சை இழுத்துவிட்டுப் பேசத் தொடங்கினான். "அப்பா, நாம இவ்வளவு நாள் நினைச்சுகிட்டு இருந்த ஒரு விஷயம் தப்புப்பா. அசைவம் சாப்பிடுறவங்க மட்டும்தான் விலங்குகளைக் கொல்றாங்கன்னு நினைச்சோம். ஆனா, சைவ உணவுங்கிற பேர்ல நாம செஞ்சுகிட்டு இருக்கறது அதைவிடக் கொடுமை."

"என்னடா உளறுற?" என்றார் கதிர்வேலு.

"இல்லப்பா... அசைவம் சாப்பிடுறவங்க ஒரு விலங்கை ஒரே நிமிஷத்துல கொன்னுடுறாங்க. ஆனா, நாம பாலுக்காக அந்தப் பசுவை 'தவணை முறையில' கொல்றோம். அதுக்கு விருப்பமில்லாத செயற்கைக் கருத்தரிப்பு, அதிகப்பால் கறக்க ஊசி போடுறது, அதோட கன்றுக் குட்டியைப் பிரிச்சுப் பட்டினி போடுறது... கடைசியில அது பால்

கொடுக்காதப்ப இதே இறைச்சிக் கடைக்கு அனுப்பி வைக்கிறது. இதுவும் ஒரு வகை கொலைதானேப்பா?"

காமாட்சி குறுக்கிட்டார். "அதுக்காகப் பால் குடிக்காம இருந்தா எப்படி? வளர்ற குழந்தைகளுக்கு சத்து வேணுமே!"

"அம்மா, உலகத்துல எந்த உயிரினமாவது வேற ஒரு இனத்தோட பாலைக் குடிக்குதா? அதுவும் வளர்ந்து பெரியவனான அப்புறம் பால் குடிக்கிற ஒரே இனம் மனுஷன் மட்டும்தான். இது எவ்வளவு இயற்கைக்கும் அறிவியலுக்கும் எதிரானது?

நமக்கான சத்துக்கள் அனைத்தையும் இயற்கை செடிகளிலும், தானியங்களிலும் வைத்திருக்கின்றது. ஒரு மாட்டைச் சித்திரவதை செய்துதான் நாம் சத்தைப் பெற வேண்டும் என்கிற அவசியம் இல்லை.

கதிர்வேலு கோபப்பட்டார். "நாம பசுவை தெய்வமா கும்பிடுறோம்டா!"

"கும்பிட்டு என்ன பிரயோஜனம்ப்பா? பால் தொழில்தான் இறைச்சித் தொழிலுக்கு அஸ்திவாரமே. மனிதர்கள் வாங்குற ஒவ்வொரு சொட்டுப் பாலும், மாட்டிறைச்சித் தொழிலுக்கு அவங்க கொடுக்கிற மானியம் தான்.

நாம சைவம்னு சொல்லிக்கிட்டு மறைமுகமா மாட்டிறைச்சித் தொழிலைத் தான் வளர்க்கிறோம். மக்கள் பால் வாங்குறதை நிறுத்தினா, இறைச்சியோட விலை மூணு மடங்கு ஏறிடும். அப்போ யாரும் மாட்டை வெட்ட மாட்டாங்க.."

"அப்போ இனிமே நீ என்னதான் சாப்பிடப் போற?" என்று காமாட்சி கவலையோடு கேட்டார்.

"நான் தாவரங்கள்ல இருந்து கிடைக்கிற உணவை மட்டும் தான் சாப்பிடுவேன்.

'அஹிம்சை'ங்கிறது வெறும் சொல்லுல இல்ல, நம்ம தட்டுல இருக்குற சாப்பாட்டுலயும் இருக்கணும். எந்த உயிருக்கும் வலிக்காம கிடைக்கிற உணவுதான் எனக்கு வேணும்," என்றான் கோபி.

கதிர்வேலு மௌனமானார். தன் மகன் பேசுவதில் இருக்கும் தர்க்கமும், அந்த பிஞ்சு உள்ளத்தின் நேர்மையும் அவருக்குப் புரிந்தது. பசுமைப் பண்ணையின் உரிமையாளராகத் தன் தொழிலின் இருண்ட பக்கத்தை அவர் அன்று கோபியின் கண்கள் வழியாக முதன்முதலாகப் பார்த்தார்.

தகப்பனான சிவபெருமானுக்குப் பிரணவ மந்திரத்தின் பொருளைப் பாலமுருகன் உபதேசித்தது போல, தன் மகனே தனக்கு ஒரு மெய்ஞானத்தை போதிப்பது போல் கதிர்வேலு உணர்ந்தார். அந்தச் சிறுவனின் பேச்சில் தெரிந்த தெளிவு, ஒரு குருவின் போதனையாக அவர் மனதிற்குள் இறங்கியது.

கோபி அன்றிரவு நிம்மதியாக உறங்கினான். அவன் தட்டில் இப்போது ரத்தக் கறையோ, ஒரு தாயின் கண்ணீரோ இல்லை.

* * * * *

மறுநாள் சனிக்கிழமை. பள்ளி விடுமுறை என்பதால், கதிர்வேலுவின் வழக்கமான மருத்துவப் பரிசோதனைக்காக கோபியையும் அழைத்துக் கொண்டு கிளம்பினார்கள். டாக்டர் ஜெகதீஷின் கிளினிக் வாசலில் அமர்ந்திருந்தபோது கோபியின் மனதில் நேற்று இரவு நடந்த விவாதத்தின் எச்சங்கள் ஓடிக்கொண்டிருந்தன.

கதிர்வேலுவை பரிசோதித்த டாக்டர் ஜெகதீஷ் முகத்தில் ஒரு பெரிய திருப்தி. "ரொம்ப சந்தோஷம் கதிர்வேலு! உங்க நுரையீரல்ல இருந்த அந்த சத்தமே இப்ப இல்லை. முன்னாடி இருந்த அந்த மூச்சுத்திணறல் வீசிங் இப்போ தொண்ணூறுசதவீதம் குறைஞ்சிடுச்சு. பால் பொருட்களையும், தயிரையும் முழுசா நிறுத்தினதுதான் உங்களுக்கு இவ்வளவு பெரிய முன்னேற்றத்தைக் கொடுத்திருக்கு. இதையே தொடருங்க, வேற மருந்துகள் எதுவும் இப்போதைக்குத் தேவையில்லை," என்றார் உற்சாகமாக.

அப்பாவின் உடல்நிலை தேறியதைக் கண்டு கோபிக்கு மகிழ்ச்சியாக இருந்தாலும், அவனது சந்தேகம் இன்னும் தீரவில்லை. இதுதான் சரியான சமயம் என்று நினைத்து மெதுவாகக் கேட்டான், "டாக்டர்... எனக்கு ஒரு சந்தேகம். பால் குடிக்கலைன்னா உடம்புக்குத் தேவையான கால்சியமும், புரோட்டீனும் எப்படிக் கிடைக்கும்? எலும்பு பலவீனமாகிடும்னு சொல்றாங்களே, அது உண்மையா?"

டாக்டர் ஜெகதீஷ் புன்னகைத்தார். கோபியின் ஆர்வத்தைப் பார்த்த அவர், மிகத் தெளிவாக விளக்கத் தொடங்கினார். "கோபி, இது ஒரு பொதுவான தப்பான கருத்து. சொல்லப்போனா, பாலில் இருக்கும் அதிகப்படியான புரோட்டீன் நம் எலும்புகளை வலுப்படுத்துவதற்குப் பதிலா, அதை பலவீனமாக்கி 'ஆஸ்டியோபோரோசிஸ்' என்ற நோயைத்தான் உருவாக்கும்."

கோபி ஆச்சரியமாகப் பார்க்க, அவர் தொடர்ந்தார், "பால்ல இருக்குற புரோட்டீன் நம்ம உடம்புல அதிகப்படியான அமிலத்தை உருவாக்குது. அந்த அமிலத்தைச் சமன் செய்ய, நம்ம உடம்பு வேற வழியில்லாம எலும்புல இருக்குற கால்சியத்தை எடுத்துப் பயன்படுத்துது. இதனால எலும்புகள் தான் தேயுது. அதோட, பால்ல இருக்குற 'கேசின்' என்கிற புரோட்டீன் கட்டி வளர்ச்சிக்குக் காரணமா இருக்குதுன்னு ஆய்வுகள் சொல்லுது. கன்றுக்குட்டி வேகமா வளர்றதுக்காக இயற்கை படைச்ச அந்த ஹார்மோன்கள், மனுஷங்களுக்கு முகப்பரு, பெண்களுக்கு பி.சி.ஓ.டி மாதிரியான பிரச்சனைகளைக் கொடுக்குது."

"அப்போ கால்சியத்துக்கு நாம என்ன பண்றது டாக்டர்?" - இது காமாட்சியின் கேள்வி.

"அம்மா, பால்ல கால்சியம் இருக்குறது உண்மைதான். ஆனா அதுல இருக்குற அதிகப்படியான பாஸ்பரஸ், அந்த கால்சியத்தை நம்ம உடம்பு உறிஞ்ச விடாம தடுத்திடும். அதுக்கு பதிலா, தாவர உணவுகள்ல அபரிமிதமான கால்சியம் இருக்கு.

உதாரணத்துக்கு நூறு கிராம் எள்ளில் சுமார் 1,160 மி.கி கால்சியம் இருக்கு. இது பசுவின் பாலை விடப் பல மடங்கு அதிகம்! அதே மாதிரி, நூறு கிராம் கேழ்வரகு என்ற ராகியில் 344 மி.கி கால்சியமும், பாதாமில் 234 மி.கி கால்சியமும் கிடைக்குது. இது தவிர, நாம அன்றாடம் பயன்படுத்துற முருங்கைக்கீரை மற்றும் பசலைக்கீரையில் தலா 185 மி.கி கால்சியம் இருக்கு. இவை நமக்கு போதுமான சத்துக்கள்.

இன்னொரு முக்கியமான விஷயம் கோபி, மனுஷக் குழந்தைங்க ரொம்ப மெதுவா வளர்றவங்க. அதனால்தான் தாய்ப்பால்ல புரோட்டீன் கம்மியா இருக்கும். ஆனா கன்றுக்குட்டி சில மாசங்கள்லயே நூறு கிலோ எடை போடணும், அதுக்காக மாட்டுப்பால்ல புரோட்டீன் அதிகமா இருக்கு. அந்த அளவுக்கு அதிகமான புரோட்டீனை நம்ம உடம்பு ஏத்துக்க முடியாம, கழிவா மாத்தி கிட்னிக்கு பெரிய பாரத்தைத்தான் கொடுக்குது," என்றார் டாக்டர்.

அப்பாவின் மாற்றத்தையும், டாக்டரின் விளக்கத்தையும் கேட்ட கோபிக்குத் தன் முடிவு எவ்வளவு சரியானது என்பது புரிந்தது. "ரொம்ப நன்றி டாக்டர். இனிமே நான் பயமில்லாம தாவர உணவுகளைத் தொடருவேன்," என்றான் கோபி உறுதியுடன். கதிர்வேலுவும் காமாட்சியும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

இத்தனை காலமும், பசுவின் பால் என்பது ஆரோக்கியத்தின் அடையாளமாகப் போற்றப்பட்டது. ஆனால், இன்று அந்தப் பிம்பம் முற்றிலுமாக உடைந்து சிதறியிருந்தது. பசுவின் பால் இன்று ஆரோக்கியத்திற்கு எதிரானதாகவும், நோய்களுக்கு மூல காரணமாகவும் இருக்கும் கசப்பான உண்மை அவர்களுக்குத் தெளிவாகப் புலப்பட்டது.

உடல் நலனைப் பாதிக்கும் காரணி என்பதைத் தாண்டி, அந்தப் பாலின் பின்னால் ஒளிந்திருக்கும் வலியும் வேதனையும் கோபியின் தர்க்கத்தினால் வெளிச்சத்திற்கு வந்தன. இனி அந்த வீட்டில் சமரசமற்ற அன்பிற்கும், அஹிம்சைக்கும் அடையாளமான 'பச்சைக் கொடி' உயரே பறக்கத் தொடங்கியது. ரத்தமும் கண்ணீரும் கலந்த வெள்ளை நிறத்தை விட, கருணையும் உயிர்ப்பும் கொண்ட அந்தப் பச்சை நிறமே உண்மையான ஆரோக்கியம் என்பதை அவர்கள் இப்போது முழுமனதாக உணரத் தொடங்கினார்கள். அந்தப் பச்சை நிறம் என்பது வெறும் உணவல்ல; அது ஒரு புதிய விழிப்புணர்வு, ஒரு புதிய வாழ்வியல்.

* * * * *

காமாட்சி சிவன் கோவிலுக்குச் செல்லும்போது, கோபியும் சில சமயம் உடன் செல்வதுண்டு. இன்றும் தன் அம்மா காமாட்சியுடன் கோபி கோவிலுக்குக் கிளம்பினான்.

வெயில் தணிந்து இதமான காற்று வீசத் தொடங்கிய அந்த மாலைப் பொழுது மிகவும் ரம்மியமாக இருந்தது. காமாட்சி ஒரு கையில் பூத்தட்டும், மறு கையில் கோபியின் கையைப் பிடித்துக் கொண்டும் மெல்ல நடந்து சென்றார். கோவிலை நெருங்கும் போதே அந்தப் பகுதியெங்கும் ஒருவித தெய்வீக மணம் பரவியிருந்தது.

கோவிலின் ஒரு பகுதியில் அமைக்கப்பட்டிருந்த மேடையில், காவி உடை அணிந்த ஒரு முதியவர் - கோவிந்த கிரி சுவாமிகள் - கம்பீரமாக அமர்ந்திருந்தார். இவர் இந்து சாஸ்திரங்களில் கரை கண்டவர். கோபி அந்தப் பக்கமாக நடந்தபோது, சுவாமிகள் "பசுக்கள்" என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதைக் கேட்டான். சட்டென்று அம்மாவின் கையைப் பிடித்து இழுத்து, "அம்மா, அம்மா! இங்கே பாரு, பசு மாடுகளைப் பற்றி ஏதோ சொல்றாங்க. கொஞ்ச நேரம் நின்னு கேட்கலாமா?" என்று ஆவலாகக் கேட்டான். காமாட்சியும் புன்னகையோடு சம்மதித்தாள்.

சுவாமிகள் கணீர் என்ற குரலில் பேசத் தொடங்கினார்: "அன்பு மக்களே, நம் தர்மத்தில் 'அகிம்சை' என்பதே மிக உயர்ந்த கடமை. அதிலும் குறிப்பாக, ஒரு பசுவுக்கு இழைக்கப்படும் கொடுமை என்பது மிகப்பெரிய

பாவமாகக் கருதப்படுகிறது. ஏன் தெரியுமா? நம் புராணங்களின்படி, ஒரு பசுவின் உடலில் முப்பத்து முக்கோடி தேவர்களும் வாசம் செய்கிறார்கள். பசுவை வணங்குவது என்பது அனைத்து தெய்வங்களையும் ஒரே நேரத்தில் வணங்குவதற்குச் சமம்."

அவர் தொடர்ந்து, பவிஷ்ய புராணத்தை மேற்கோள் காட்டி விளக்கினார்: "பசுவின் முதுகில் பிரம்மாவும், கழுத்துப் பகுதியில் விஷ்ணுவும், வாய்ப் பகுதியில் சிவனும் உறைகிறார்கள். மற்ற தேவதைகள் அதன் உடலின் நடுப்பகுதியில் குடி கொண்டுள்ளனர். பசுக்கள் மங்கலத்தின் இருப்பிடம்."

இதைக் கேட்ட கோபிக்குத் தன் பண்ணையில் இருக்கும் லட்சுமியும் கோமதியும் நினைவுக்கு வந்தனர்.

கிருஷ்ணனுக்கு இன்னொரு பெயர் கோபாலன். 'கோ' என்றால் பசுக்கள் அல்லது உயிர்கள் என்று பொருள். 'பாலன்' என்றால் காப்பவன் அல்லது வளர்ப்பவன் என்று பொருள். “கோபாலன்” என்றால் பசுக்களை அல்லது உயிர்களைக் காப்பவர். பசுக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பவன், பசுக்களுக்கு மகிழ்ச்சியைத் தருபவன் என்றுதான் இதற்குப் பொருள்.

சுவாமிகளின் பேச்சு கோபியின் மனதிற்குள் பல கேள்விகளை எழுப்பியது. "அகிம்சையே தர்மம் என்றால், லட்சுமிக்குச் செயற்கை முறையில் கருத்தரிப்பு செய்தபோது அவள் பட்ட வலி அகிம்சையா?" என்று அவன் உள்ளம் துடித்தது.

சுவாமிகள் மேலும் ரிக் வேதத்தை மேற்கோள் காட்டிப் பேசத் தொடங்கினார்: "நமது வேதங்கள் பசுவை 'அக்ன்யா' என்று அழைக்கின்றன. அதன் பொருள் 'கொல்லப்படக்கூடாத விலங்கு' என்பது மட்டுமல்ல, 'துன்புறுத்தப்படக்கூடாத உயிர்' என்பதும் ஆகும்.

மகாபாரதத்தின் அனுசாசன பர்வத்தில், இறைச்சி உண்பது ஒரு மனிதனின் ஆயுளை எப்படிச் சிறுகச் சிறுகக் குறைக்கும் என்பது பற்றி மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு உயிரின் மரண பயமும், வலியும் அந்த ஊனில் கலந்திருக்கும். அதை நாம் உண்ணும்போது, அது நம் உடலையும் மனதையும் நோய்க்கூறுகளால் நிரப்பிவிடும்.

சொற்பொழிவு முடிந்து இருவரும் வீடு நோக்கி நடந்தனர். வழியில் ஒரு தேவாலயத்தைக் கடக்கும்போது, அங்கிருந்த ஒலிபெருக்கியில் பாதிரியாரின் குரல் மென்மையாகக் கேட்டது. அவர் பைபிள் வசனம் ஒன்றை வாசித்துக் கொண்டிருந்தார்: "இதோ, பூமி எங்கும் விதையைத் தருகிற சகல பூண்டுகளையும், விதையுள்ள கனிகளைத் தரும் சகல

விருட்சங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன்; அவைகள் உங்களுக்கு ஆகாரமாய் இருக்கக்கடவது என்றார் தேவன்."

அந்த வரிகள் கோபியின் காதுகளில் தித்திப்பாய் பாய்ந்தன. தாவர உணவுகளே மனிதர்களுக்குரியது என்பதை இயற்கை அன்னை எல்லா மதங்களின் வழியாகவும் சொல்கிறாளோ என்று அவன் வியந்தான்.

அவன் அம்மா காமாட்சியோ, "சீக்கிரம் நட கோபி, இருட்டிடுச்சு. வீட்டுல போய் பால் கறக்கணும், ராத்திரி வேலை நிறைய இருக்கு" என்று அவனை அவசரப்படுத்தினாள். ஆனால் கோபியின் கால்கள் நடந்தாலும், அவன் மனம் அந்தச் சொற்பொழிவுகளையும், தேவாலயத்து வசனங்களையும் அசைபோட்டுக் கொண்டிருந்தது. பசுக்களைத் தெய்வமாக வணங்குவதற்கும், அவற்றைப் பால் கறக்கும் இயந்திரமாக நடத்துவதற்கும் இடையே உள்ள முரண்பாடு அவன் பிஞ்சு மனதை வாட்டியது.

வீட்டு வாசலை அடைந்தபோது, தொழுவத்தில் இருந்து லட்சுமி அம்மாவின் மெல்லிய 'ம்மா' என்ற குரல் கேட்டது. அது வெறும் குரலாகத் தெரியவில்லை; ஒரு தாயின் ஏக்கமாகவும், மனித குலத்திடம் அவள் கேட்கும் நீதியாகவும் கோபிக்குத் தோன்றியது.

“அம்மா...” என்று மெதுவாக கோபி தொடங்கினான். “சாமி சொன்னது உண்மையா இருந்தா... எல்லா உயிர்களையும் காப்பது தான் தர்மம்னா... நாம லட்சுமியையும் கோமதி மற்ற மாடுகளை எப்படி நடத்தணும்?”

காமாட்சி சில நொடிகள் அமைதியாக இருந்தாள். அவளுக்கும் அந்தக் கேள்விக்கு எளிதான பதில் இல்லை.

“கோவிலில் சொல்லும் ‘கோவிந்தா’வைவிட, ஒரு உயிரைக் காப்பது தான் உண்மையான பக்தி.” என்ற எண்ணம் கோபியின் மனதில் ஓடியது.

* * * * *

கோவிலில் கோவிந்த கிரி சுவாமிகள் ஆற்றிய உரை கோபியின் மனதில் ஏதோ ஒரு குழப்பத்தை விதைத்திருந்தது.

“பசு தாய்… கோமாதா… புனிதம்… ” — இந்த வார்த்தைகள் அவன் காதில் இன்னும் ஒலித்துக்கொண்டே இருந்தன.

மறுநாள் அதிகாலை.

பசுமைப் பண்ணையில் பால் கறக்கும் வேலை தொடங்கியிருந்தது. மாடுகளின் கழுத்து மணிகள் மெதுவாக ஒலித்தன. குமரன் ஒரு பக்கம் பாத்திரங்களை கழுவிக்கொண்டிருந்தான். கதிர்வேலு லட்சுமியின் அருகில் அமர்ந்து பால் கறந்துகொண்டிருந்தார்.

கோபி அமைதியாக அருகில் வந்து உட்கார்ந்தான்.

“என்னடா, இன்னைக்கு இவ்வளவு சீக்கிரமா?” என்று சிரித்தார் கதிர்வேலு.

சிறிது நேரம் தயங்கியபடி இருந்த கோபி திடீரென்று கேட்டான்:

“அப்பா… நேத்து சாமி சொன்னாரே… பசுவுக்குள்ள தேவர்கள் இருக்காங்கன்னு… அது நிஜமா?”

கதிர்வேலு சிரித்தார்.

“அது நம்பிக்கைப்பா. பசுவை நம்ம வீட்டுல தாய்க்கு சமமா மதிப்பாங்க.”

கோபி லட்சுமியைப் பார்த்தான்.

அந்த நேரம், அருகில் கட்டப்பட்டிருந்த கோமதி தன் அம்மாவை நோக்கி “ம்மா… ம்மா…” என்று கத்திக்கொண்டிருந்தது.

லட்சுமியும் திரும்பித் திரும்ப அதை பார்த்துக்கொண்டே இருந்தது.

“அப்பா…” என்று மீண்டும் மெதுவாகக் கேட்டான் கோபி.

“அந்தக் கன்றை ஏன் இப்படி தள்ளி கட்டி வச்சிருக்கோம்?”

கதிர்வேலுவின் கை ஒரு நொடி நின்றது.

அருகில் இருந்த குமரன் உடனே பேச ஆரம்பித்தான்.

“தம்பி, கன்று முழுப் பாலையும் குடிச்சிட்டா நமக்கு என்ன மிஞ்சும்? கொஞ்சம் கட்டுப்படுத்தித் தான் வளர்க்கணும்.”

கோபி உடனே பதில் சொல்லவில்லை.

லட்சுமியின் மடியிலிருந்து பால் பாத்திரத்தில் விழும் சத்தத்தையே அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தான்.

சில நொடிகள் கழித்து மீண்டும் கேட்டான்:

“அப்பா… நாம லட்சுமியை ‘அம்மா’ ன்னு சொல்றோம் இல்ல?”

“ஆமா.”

“அப்போ… அதோட குழந்தைக்கு முன்னாடி நாம பால் எடுத்துக்கறது அதுக்குப் பிடிக்குமா?”

இந்த முறை கதிர்வேலுவிடம் உடனடி பதில் இல்லை.

குமரன் சிரித்தபடி, “அட தம்பி, மாடு இதெல்லாம் யோசிக்காது,” என்றான்.

கோபி உடனே கோமதியைப் பார்த்தான்.

அது இன்னும் தன் அம்மாவையே பார்த்துக்கொண்டிருந்தது.

“ஆனா… அது தேடுதே…” என்றான் மெதுவாக.

அந்த வார்த்தை கதிர்வேலுவின் மனதில் ஏதோ செய்து விட்டது.

அதே நேரத்தில் லட்சுமி சற்று அசைந்தது. கோபி அதன் காலில் நேற்று போட்ட ஊசியின் தடத்தை கவனித்தான்.

“அப்பா,” என்றான் கோபி மீண்டும்.

“நேத்து ஊசி போட்டப்போ லட்சுமி ரொம்ப கத்துச்சே… அதுக்கும் வலிக்கும்ல?”

இந்த முறை கதிர்வேலு தலை தூக்கிப் பார்த்தார்.

கோபியின் கண்களில் குற்றம் சாட்டுவது இல்லை.

உண்மையிலேயே புரிந்துகொள்ள வேண்டும் என்ற ஏக்கம் மட்டுமே இருந்தது.

அதுதான் அவருக்கு இன்னும் கஷ்டமாக இருந்தது.

"சில நேரம்… நாம பண்றது சரியா தப்பான்னு நமக்கே தெரியாம போயிடும் கோபி…" என்றார் மெதுவாக.

கோபி அந்தப் பதிலை முழுவதுமாகப் புரிந்துகொள்ளவில்லை.

ஆனால் அப்பாவின் குரலில் இருந்த சோர்வை அவனால் உணர முடிந்தது.

பால் கறந்து முடிந்ததும், அவன் நேராக லட்சுமியின் அருகில் சென்றான்.

அதன் நெற்றியை மெதுவாகத் தடவினான்.

லட்சுமி மெதுவாக அவன் தோளை நக்கியது.

அந்தக் கணத்தில், கோவிலில் கேட்ட எல்லா வார்த்தைகளையும் விட, அந்த மாட்டின் அமைதியான பார்வை அவனுக்குப் பெரிய கேள்வியை எழுப்பியது.

* * * * *

காலம் அமைதியாக நகர்ந்து கொண்டிருந்தது.

பசுமைப் பண்ணையில் எல்லாமே பழையபடியே இருந்தது போலத் தோன்றினாலும், உண்மையில் பல விஷயங்கள் மெதுவாக மாறிக்கொண்டிருந்தன.

லட்சுமி அம்மா இப்போது மிகவும் தளர்ந்துவிட்டாள்.

ஒருகாலத்தில் கொட்டகை முழுக்க ஒலித்த அவளது சத்தம் மங்கியிருந்தது. காலையில் எழுந்து நிற்கவே அவளுக்குச் சிரமமாக இருந்தது. அவளது கண்களில் எப்போதும் ஒரு சோர்வு தெரிந்தது.

கோமதி அடிக்கடி அவள் அருகிலேயே நின்றுகொண்டிருப்பாள்.

"அம்மா… உனக்கு உடம்பு சரியில்லையா?" என்று தன் மூக்கால் மெதுவாகத் தொட்டுக் கேட்பாள்.

லட்சுமி மெதுவாக அவளை நக்கிக்கொடுத்தது.

"ஒண்ணுமில்லைம்மா…" என்று சொல்ல முயன்றாலும், அவளது குரலில் பழைய உற்சாகம் இல்லை.

ஒரு மாலை.

சூரியன் மறைந்து கொண்டிருந்தான்.

கதிர்வேலுவும் குமரனும் கொட்டகையின் வெளியே மெதுவாகப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"இனி லட்சுமியால பால் கொடுக்க முடியாது குமரன்," என்றார் கதிர்வேலு சோர்வாக. "டாக்டர் ஜான் கூட சொன்னாரு… உடம்பு ரொம்ப பலவீனமாயிடுச்சுன்னு."

குமரன் சில நொடிகள் அமைதியாக இருந்தான்.

"அப்போ…?" என்று தயக்கத்தோடு கேட்டான்.

கதிர்வேலு பதில் சொல்லவில்லை.

அந்த அமைதியே கோமதிக்குப் பயத்தை உண்டாக்கியது.

அவள் தன் அம்மாவை இன்னும் நெருங்கி நின்றுகொண்டாள்.

சிறிது நேரம் கழித்து கதிர்வேலு மெதுவாகச் சொன்னார்:

"முன்னாடி இருந்தா… நானும் யோசிக்காம வித்திருப்பேன் குமரன்…"

அவர் பேசிக்கொண்டே நின்றுவிட்டார்.

அவரது கண்கள் லட்சுமியை நோக்கின.

அதே லட்சுமி.

பல வருடங்களாக இந்த வீட்டுக்காக பால் கொடுத்த மாடு.

கோபி சிறுவனாக இருந்தபோது அருகில் நின்று விளையாடிய மாடு.

கதிர்வேலு மூச்சுத்திணறலால் விழுந்த நாளில் கூட பதட்டமாகக் கத்திக்கொண்டிருந்த மாடு.

அந்த நினைவுகள் அனைத்தும் அவருக்குள் ஏதோ ஒன்றை உடைத்தன.

"வேணாம்…" என்றார் இறுதியாக.

"லட்சுமி எங்கேயும் போக மாட்டா."

அந்த வார்த்தைகள் கோமதிக்குப் புரியவில்லை.

ஆனால் லட்சுமி அமைதியாகக் கண்களை மூடியது.

அவளுக்குப் புரிந்தது போல.

அதற்குப் பிறகு நாட்கள் மெதுவாக நகர்ந்தன.

கதிர்வேலு பண்ணை வேலையை குறைத்திருந்தார். டாக்டர் ஜகதீஷ் சொன்னபடி உணவுப் பழக்கத்தையும் மாற்றியிருந்தார். வீட்டில் பால் குறைந்தது. தயிர் குறைந்தது. வெண்ணெய், நெய் எல்லாம் மெதுவாக மறைந்தன.

ஆனால் கொட்டகையில் முதல் முறையாக ஒரு புதிய விஷயம் தோன்றியது.

அமைதி.

முன்புபோல மாடுகளின் அலறல்கள் இல்லை.

அவசரமாக ஓடும் மனிதர்கள் இல்லை.

இரவில் லட்சுமி அமைதியாக படுத்திருப்பாள். கோமதி அவள் அருகிலேயே தூங்கும்.

சில நேரங்களில் கோபியும் வந்து அவள் அருகில் அமர்ந்துகொள்வான்.

"லட்சுமி அம்மா…" என்று மெதுவாகத் தலையை வருடுவான்.

லட்சுமி அவனைப் பார்த்துக் கண்களை மட்டும் அசைக்கும்.

அந்தக் கண்களில் இப்போது சோர்வு இருந்தது.

ஆனால் பயம் இல்லை.

ஒரு அதிகாலை.

வானம் இன்னும் முழுவதுமாக வெளுக்கவில்லை.

கோமதி வழக்கம்போல தன் அம்மாவைத் தேடி எழுந்தது.

லட்சுமி அசையாமல் படுத்திருந்தாள்.

கோமதி அவள் அருகில் ஓடிவந்தது.

மூக்கால் தொட்டது.

மெதுவாகக் கத்தியது.

மீண்டும் அவளை நக்கியது.

எந்த அசைவும் இல்லை.

அந்த நேரத்தில் கொட்டகைக்குள் வந்த கோபி நின்ற இடத்திலேயே உறைந்துபோனான்.

“அப்பா…” என்று நடுங்கிய குரலில் அழைத்தான்.

கதிர்வேலு உள்ளே வந்தார்.

லட்சுமியைப் பார்த்ததும் எதுவும் பேசவில்லை.

மெதுவாக அவள் அருகில் அமர்ந்தார்.

அவளது நெற்றியை வருடினார்.

“மன்னிச்சிடு…” என்று மட்டும் மெதுவாகச் சொன்னார்.

அவரது கண்களில் நீர் நிரம்பியது.

பல வருடங்களாக அவர் முதல் முறையாக ஒரு மாட்டைப் பார்த்து அழுதார்.

அன்று மாலை, பண்ணையின் பின்புற வேப்பமரத்தடியில் லட்சுமி அம்மா முழு மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டாள்.

கோமதி அந்த இடத்தைவிட்டு நகரவே இல்லை.

மண்ணுக்குள் மறைந்த தன் அம்மாவின் வாசனையைத் தேடிக்கொண்டே நின்றது.

கோபி அமைதியாக அவள் அருகில் வந்து நின்றான்.

அவன் கையில் ஒரு சிறிய மணி இருந்தது.

லட்சுமி கழுத்தில் கட்டியிருந்த பழைய மணி.

அதை மெதுவாக வேப்பமரக் கிளையில் கட்டினான்.

காற்று வீசும்போதெல்லாம் அது மெதுவாக ஒலிக்கத் தொடங்கியது.

கோமதி அந்தச் சத்தத்தைக் கேட்டபடி நீண்ட நேரம் அசையாமல் நின்றது.

அதன்பிறகு பண்ணையில் பல மாற்றங்கள் நடந்தன.

ஒரு மாடாக ஒன்றும் விற்கப்படவில்லை. வயதான மாடுகள் அருகிலிருந்த பராமரிப்பு மையங்களுக்கு அனுப்பப்பட்டன.

சிலவற்றை கிராமத்திலேயே மக்கள் சேர்ந்து பராமரிக்க ஏற்பாடு செய்தார் கதிர்வேலு.

பால் கறக்கும் இயந்திரங்கள் அகற்றப்பட்டன.

இரும்புச் சட்டங்கள் ஒரு மூலையில் தூசி படர்ந்தபடி கிடந்தன.

ஒரு நாள் காலை, குமரனும் கதிர்வேலுவும் அந்தப் பழைய இரும்புக் கூண்டை வெளியே எடுத்துக்கொண்டு வந்தார்கள்.

அதைப் பார்த்ததும் கோமதியின் உடம்பு முழுக்க நடுங்கியது.

அந்தக் கூண்டு....லட்சுமி அம்மா எத்தனை முறை அதற்குள் நின்றிருக்கிறாள். எத்தனை முறை வலியில் கத்தியிருக்கிறாள்.

கோமதி பயத்தில் பின்வாங்கியது.

அவளது கண்கள் கோபியைத் தேடின.

கோபி அமைதியாக நின்றிருந்தான்.

குமரன் மெதுவாக கோமதியின் அருகில் வந்தான்.

அவளது கழுத்துக் கயிற்றை அவிழ்த்தான்.

கோமதி கண்களை மூடிக்கொண்டது. ‘இப்போ என் முறையா…’

ஆனால்…

யாரும் அவளை இழுக்கவில்லை.

சில நொடிகள் கழித்து அவள் மெதுவாகக் கண்களைத் திறந்தது.

குமரனும் கதிர்வேலுவும் சேர்ந்து அந்த இரும்புக் கூண்டை வண்டியில் ஏற்றிக்கொண்டிருந்தார்கள்.

பின்னர் பால் கறக்கும் இயந்திரங்களும் ஏற்றப்பட்டன. காலியான பால் கேன்களும்.

கோமதி ஒன்றும் புரியாமல் நின்றது.

அப்போது கோபி அவளருகில் ஓடி வந்தான்.

அவளது கழுத்தைக் கட்டிக்கொண்டான்.

“பயப்படாதே கோமதி…” என்றான் மெதுவாக.

“இனி இங்க யாரிடமிருந்தும் பால் எடுக்கப் போறது இல்ல.”

கோமதி அவனைப் பார்த்தது.

“அப்பா பண்ணையையே மாத்திட்டாரு. இனி இங்க மாடுகளைக் கட்டிப் போட்டு பால் கறக்க மாட்டாங்க. நாம நிலக்கடலை, தேங்காய், விதைகள்.... அதுல இருந்து பால் தயாரிக்கப் போறோம்.”

சிறிது நேரம் நின்றுவிட்டு அவன் மெதுவாகச் சொன்னான்:

"லட்சுமி அம்மாவுக்கு நடந்தது… இனி யாருக்கும் நடக்கக் கூடாதுன்னு அப்பா சொன்னாரு."

கோமதி அமைதியாக நின்றது.

காற்று மெதுவாக வீசியது.

வேப்பமரத்தில் கட்டியிருந்த மணி ஒலித்தது.

கோமதி மெதுவாகத் திரும்பி அந்த மரத்தை நோக்கிப் பார்த்தது.

அங்கே இன்னும் அம்மாவின் நினைவு இருந்தது.

ஆனால் முதல் முறையாக…

அவளது மனதில் பயம் இல்லை.

அன்று மாலை, பல வருடங்களாகப் - ஊசி போடும் போது மாடுகள் போட்ட சத்தம், மாடுகளைப் பிரித்துக் கட்டாயப்படுத்தி வண்டியில் ஏற்றும் போது போட்ட சத்தம், பால் கறக்கும் சத்தம் - கேட்ட அந்தப் பண்ணையில், ஒரு புதிய அமைதி பிறந்திருந்தது.

அந்தப் பண்ணையின் ஒவ்வொரு மூலையிலும் எதிரொலித்த அந்த வேதனைக் குரல்கள் இப்போது அடங்கிவிட்டன. இத்தனை காலம் அந்த ஜீவன்களின் கண்ணீரையும் பயத்தையும் பார்த்துக் கொண்டிருந்த அந்தப் பழைய தூண்கள், இப்போது ஒரு நிம்மதிப் பெருமூச்சை விடுவது போலத் தோன்றியது. வன்முறை மறைந்து, அங்கு கருணை குடியேறியிருந்தது.

காலங்காலமாக அங்கு நிலவி வந்த அந்தப் பதற்றமும், மாடுகளின் வேதனைக் குரல்களும் இப்போது இல்லை. அதற்குப் பதிலாக, மௌனமும் ஒரு நிம்மதியான காற்றும் பண்ணை எங்கும் பரவியிருந்தது.

* * * * *

ரமேஷ், அலெக்ஸ், தீபன் மற்றும் கார்த்திக்

மாவரம் கிராமத்தின் அந்தப் பழைய ஆலமரத்தைக் கடந்தபோது தொடங்கிய கோமதியின் கதை, கொடைக்கானல் பயணம் முழுவதும் தொடர்ந்தது. மலையின் வளைவு நெளிவுகளுடன் கதையும் வளைந்து நெளிந்து நகர்ந்தது.

வழக்கமான கொடைக்கானல் பயணங்களில் இருக்கும் அந்த அரட்டை, பாட்டு, கேலி எதுவுமே இந்த முறை அந்த காரில் இல்லை. கோபி சொல்லச் சொல்ல, அவர்கள் ஒவ்வொருவர் கண்ணெதிரிலும் அந்தப் பசுமைப் பண்ணையும், துள்ளித் திரிந்த கோமதியும் ராஜாவும் நிழலாடினர்.

இப்பொழுது, கொடைக்கானலின் பனிமூட்டமான மலைச்சாலையில் கோபியின் கார் மெல்ல இறங்கிக் கொண்டிருந்தது. ஏறியபோது இருந்த ஆரவாரம் இப்போது அந்த காரில் இல்லை. கோமதி மற்றும் பசுமைப் பண்ணையின் கதையைக் கேட்டு முடித்த நண்பர்கள் நால்வரும் கனத்த இதயத்துடன் அமைதியாக அமர்ந்திருந்தனர். ஜன்னல் வழியே தெரியும் பசுமையான தேயிலைத் தோட்டங்கள் கூட இப்போது அவர்களுக்கு ஏதோ ஒரு வலியைச் சொல்வது போலவே இருந்தது.

மவுனத்தைக் கலைத்த ரமேஷ், "டேய் கோபி... கோமதியோட கதை என்னை நிஜமாவே உலுக்கிடுச்சுடா. மாவரம்ல அந்தப் பண்ணையையும், இப்போ அது இருந்த இடத்தையும் பார்த்தப்போ மனசுக்குள்ள ஏதோ ஒரு பாரம். நாம குடிச்ச ஒரு கிளாஸ் பால் பின்னாடி இவ்வளவு கண்ணீர் இருக்கா?" என்றான் குரல் தழுதழுக்க.

வண்டியை ஓட்டிக்கொண்டிருந்த கோபி, ஒரு நீண்ட பெருமூச்சுடன் பேசத் தொடங்கினான். அவனது குரல் இப்போது ஒரு மென்பொருள் பொறியாளரின் குரலாக இல்லாமல், அனுபவங்கள் கற்றுக்கொடுத்த ஒரு ஞானியின் குரலாக ஒலித்தது.

"உண்மைதான் ரமேஷ்... மாவரத்தில் தொடங்கிய இந்தப் பயணம் கோமதியின் கதையோடு மட்டும் முடிந்துவிடுவதில்லை. இது நம் ஒவ்வொருவரின் அன்றாட வாழ்வோடும், நாம் பருகும் ஒவ்வொரு சொட்டுப் பாலோடும் பிணைக்கப்பட்ட ஒரு கசப்பான உண்மை."

கோமதி ஒரு மகிழ்ச்சியான முடிவை எட்டியிருக்கலாம். ஆனால், உலகம் முழுவதும் லட்சக்கணக்கான 'லட்சுமி'கள் இன்றும் அதே இரும்புக் கூண்டுகளுக்குள்ளும், அடிமாட்டு வண்டிகளிலும் தவித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். மனிதர்களின் ஒரு சிறிய உணவு மாற்றமும், கருணையும் மட்டுமே அந்த ஊமை ஜீவன்களின் வாழ்வில் ஒளியேற்ற முடியும்."

“நம்மில் பலர் இன்றும் ஒரு பிம்பத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் — பசுக்கள் பச்சைப்புல் வெளியில் மகிழ்ச்சியாக மேய்ந்து, கன்றுகளுக்குப் பால் கொடுத்தது போக மிஞ்சியதை நமக்கு அன்போடு தருவதாக நாம் நம்புகிறோம். ஆனால், எதார்த்தம் அந்தப் பிம்பத்திற்கு முற்றிலும் நேர்மாறானது என்பதை என்னுடைய பண்ணையில் நான் கண்கூடாகப் பார்த்தேன்." என்றான் கோபி.

"ஆனா கோபி, நாம பசுவை 'கோமாதா'ன்னு கும்பிடுறோமே, அது ஒரு உண்மை இல்லையா? வெறும் மாயை தானா?" என்று கேட்டான் ரமேஷ்.

கோபி காரின் வேகத்தைக் குறைத்துவிட்டுத் தொடர்ந்தான்.

"அங்கதான் நாம தவறு செய்றோம் ரமேஷ். நம்மை நாமளே ஏமாத்திக்கிறோம். நமது பால் பண்ணைத் தொழில் என்பது இன்று ஒரு கருணைமிக்க விவசாயமாக இல்லை; அது ஒரு இயந்திரத்தனமான, வன்முறை நிறைந்த தொழிற்சாலையாக மாறிவிட்டது. பசுக்களை நாம் ‘கோமாதா’ என்றும், தெய்வத்தின் அம்சம் என்றும் போற்றுகிறோம். ஆனால், அதே ‘தாயிடம்’ நாம் நடந்து கொள்ளும் விதம் நம் மனிதத்தன்மையையே கேள்விக்குள்ளாக்குகிறது."

“அதிகப்படியான பால் உற்பத்திக்காக அவற்றுக்குத் தொடர்ந்து ஹார்மோன் ஊசிகள் செலுத்தப்படுகின்றன. அவற்றின் விருப்பமில்லாமல் செய்யப்படும் செயற்கைக் கருவூட்டல், இயற்கைக்கு மாறான தொழிற்சாலைத் தீவனங்கள் எனப் பசுக்களின் வாழ்நாள் முழுவதும் வலியால் நிரப்பப்படுகிறது.

இதில் ஆகப்பெரும் அவலம் என்னவென்றால், ஆண் கன்றுகளின் நிலைதான். பால் கொடுக்க இயலாத ஆண் கன்றுகள் இந்த நவீனச் சமூகத்திற்கு ‘தேவையற்ற பொருளாக’ கருதப்படுகின்றன. பிறந்த சில நாட்களிலேயே அவை அவற்றின் தாயிடமிருந்து பிரிக்கப்பட்டு, இறைச்சிக் கூடங்களுக்கு அனுப்பப்படுகின்றன."

கோபி தொடர்ந்தான், "பால் பண்ணைத் தொழிலில் ஏழு முதல் ஒன்பது முறை பால் கறக்கப்பட்ட பிறகு, உடல் நலிந்த பசுக்களும் இறுதியில் அதே ரத்தச் சகதி நிறைந்த இறைச்சிக் கூடங்களில்தான் தஞ்சமடைகின்றன. சொல்லப்போனால், மாமிசத் தொழிலுக்கான தொண்ணூறுசதவீத மானியத்தைப் பால் தொழிலே வழங்குகிறது. பாலுக்காக நாம் கொடுக்கும் விலை, மறைமுகமாக ஒரு உயிரின் மரணத்திற்கு நாம் செய்யும் முதலீடாகும்.“

“இந்தக் கதையில நான் சொன்ன பல காட்சிகள், நான் சின்ன வயசுல மாவரத்திலும் மற்றும் கோவைக்கு அருகில் உள்ள போத்தனூர் மாட்டு இறைச்சிக் கூடத்திற்குப் பக்கத்திலும் பார்த்த நேரடி அனுபவங்கள். பசுக்களும் கன்றுகளும் எவ்வித வலியுடன் மரணத்தை எதிர்கொள்கின்றன என்பதைத் என் சொந்தக் கண்களால் பார்த்தவன் நான். அந்தத் துயரம்தான் என்னை இன்னைக்கு இப்படிப் பேச வைக்குது."

அலெக்ஸும், கார்த்திக்கும் இந்த கேள்விகளையும், கோபி சொன்ன பதில்களையும் தீவிர சிந்தனையுடன் கேட்டுக்கொண்டிருந்தனர்.

"அப்போ இதுக்குத் தீர்வே இல்லையாடா?" என்று மெல்லப் கேட்டான் தீபன்.

"தீர்வு நம்மகிட்டதான் இருக்கு," என்றான் கோபி உறுதியாக. "நாம் உண்மையிலேயே பசுக்களின் நலனில் அக்கறை கொண்டவர்கள் என்றால், நாம் குடிக்கும் பால் அந்த உயிரினங்களின் கண்ணீரில் விளைந்தது என்பதை உணர வேண்டிய தருணம் இது.

நமது ருசிக்காகவும், தேவையான சத்துக்கள் என்று நாம் தவறாக நினைத்துக் கொண்டு பாலை மீண்டும் மீண்டும் எடுத்து கோடிக்கணக்கான உயிர்களைச் சித்திரவதைக்கு உள்ளாக்குவது தர்மமாகுமா?

“இது வெறும் ஜீவகாருண்யம் மட்டும் இல்ல, சூழலியல் பாதிப்பும் கூட. ஒரு லிட்டர் பால் உற்பத்தி செய்ய அறுநூறு லிட்டருக்கும் அதிகமான தண்ணீர் தேவைப்படுது.”

“தனிநபராகவும், ஒரு சமூகமாகவும் நாம் என்ன செய்யப் போகிறோம் என்பதுதான் கேள்வி. அந்த ‘காமதேனுக்களுக்கு’ நாம் தரும் மரியாதை என்பது அவற்றைக் தெய்வமாக வழிபடுவதில் இல்லை; அவற்றின் அடிப்படை உரிமைகளையும் வாழ்வையும் பறிக்காமல் இருப்பதில்தான் உள்ளது. பாலுக்கு மாற்றாகத் தாவர வழியில் கிடைக்கும் பால் மற்றும் எவ்வளவோ ஆரோக்கியமான உணவுகள் இன்று நம்மிடம் உள்ளன. மாற்றத்தை நம்மிடமிருந்து தொடங்குவோம்." என்றான் கோபி.

நீண்ட பயணத்திற்குப் பின், கார் சென்னையின் விளக்கு வெளிச்சங்களுக்குள் நுழைந்தது. ஆனால், அந்த நால்வரின் மனதிற்குள் ஒரு புதிய விடியல் பிறக்கத் தொடங்கியிருந்தது.

* * * * *

கோமதியின் கதையைச் சொல்லி முடித்திருந்த கோபி, ஒரு நீண்ட பெருமூச்சுடன் ஸ்டீயரிங்கைத் திருப்பினான். காரில் ஒரு கனத்த மௌனம் நிலவியது. நண்பர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குள் ஒரு புதிய மனிதனைத் தேடிக்கொண்டிருந்த அந்த உணர்ச்சிகரமான தருணத்தை, கோபியின் சட்டைப் பையில் இருந்த அந்த 'ஐபோன்' ஒலித்து மௌனத்தைக் கலைத்தது.

நிசப்தத்தைக் கிழித்த அந்த ரிங்டோன் சத்தத்தைக் கேட்டு, காரில் இருந்தவர்கள் ஒரு நிமிடம் திடுக்கிட்டனர். கோபி திரையைப் பார்த்தான். அவன் முகம் சட்டென மாறியது. அது அவனது மேலதிகாரி.

"சொல்லுங்க சார்," என்றான் கோபி ப்ளூடூத் ஸ்பீக்கரில்.

மறுமுனையில் பாஸின் குரல் இடி முழக்கமாய் ஒலித்தது. "கோபி! எங்க இருக்கீங்க? ஜூம் கால்ல இன்னும் உங்களைக் காணோம்? கிளையன்ட் ஆஸ்திரேலியாவிலிருந்து லைன்ல இருக்காங்க. அஞ்சு நிமிஷமா உங்களுக்காகத் தான் வெயிட் பண்றோம்!"

கோபி திகைத்துப் போனான். "சார்... இன்னைக்கு ஞாயிற்றுக்கிழமை சார்! அதுவும் லாங் வீக்கெண்ட் . நான் இப்போதான் கொடைக்கானல்ல இருந்து சென்னைக்குக் கிளம்பி வந்துட்டு இருக்கேன். கனெக்ஷன் கூட சரியா கிடைக்கல சார்."

ஆனால் பாஸ் எதையும் கேட்பதாக இல்லை. "கோபி, கிளையன்ட்டுக்கு இன்னைக்கு சண்டே-வா இல்ல மண்டே-வான்னு தெரியாது. அவங்களுக்கு 'டெலிவரி' தான் முக்கியம். நீங்க எங்க இருந்தா என்ன? காரை ஓரமா நிறுத்திட்டு உடனே லாகின் பண்ணுங்க. இன்னும் ரெண்டு நிமிஷத்துல உங்க அப்டேட் வேணும். தட்ஸ் ஆல்!" என்று சொல்லிவிட்டு இணைப்பைத் துண்டித்தார்.

கோபி விரக்தியுடன் நண்பர்களைப் பார்த்தான். "பார்த்தீங்களா... இதுதான் ஐடி வாழ்க்கை. நாம மாவரத்தைப் பத்தியும் கோமதியைப் பத்தியும் இவ்வளவு எமோஷனலா பேசிட்டு வரோம். ஆனா இந்த வேர்ல்டுக்கு நம்ம எமோஷன்ஸை விட 'புராஜெக்ட் அப்டேட்' தான் முக்கியம்!"

வேறு வழியின்றி, காரை ஒரு மரத்தடியில் ஓரமாக நிறுத்தினான் கோபி. அந்த மரத்தின் அடியிலேயே அமர்ந்து கொண்டு, மொபைலில் ஜூம் ஆப்பைத் திறந்தான்.

"ஹலோ சார், கேன் யூ ஹியர் மீ?" என்று கோபி கேட்க, அவன் பாஸ் கடுப்புடன், "வாட் கோபி, இவ்வளவு லேட்? கிளையன்ட் ஆல்ரெடி வெயிட்டிங்!" என்றார்.

கோபி தன் பின்னால் இருந்த ஒரு பெரிய ஆலமரத்தையும், அதிலிருந்து தொங்கிய விழுதுகளையும் பார்த்தான். சில நிமிடங்களுக்கு முன்னர்தான் மாவரம் கிராமத்து ஆலமரத்தைப் பற்றியும், கோமதியைப் பற்றியும் உருக்கமாகப் பேசிக் கொண்டிருந்தான். இப்போது அதே போன்ற ஒரு மரத்தடியில் அமர்ந்து கொண்டு 'புராஜெக்ட் டெலிவரி' பற்றிப் பேச வேண்டியிருக்கிறது.

வீடியோவை ஆன் செய்ததும், மொபைல் திரையில் அவனது பாஸும், கிளையன்ட்டும் கோட்-சூட் அணிந்து ஏசி அறையில் அமர்ந்திருப்பது தெரிந்தது. கோபியின் பின்னால் ஒரு குரங்கு மரத்தில் தாவிக்கொண்டிருந்தது.

அவன் நண்பர்கள் காரின் வெளியே நின்று கொண்டு, கோபி ஒரு மரத்தடியில் அமர்ந்து மொபைலைப் பார்த்து சீரியஸாகப் பேசிக் கொண்டிருப்பதை வேடிக்கை பார்த்தனர்.

சரியாக அந்தத் தருணத்தில், பின்னணியில் ஒரு குரங்கு கத்தும் சத்தமும், தூரத்தில் ஒரு லாரி ஹார்ன் அடிக்கும் சத்தமும் கேட்க, "வாட் இஸ் தட் நாய்ஸ்?" என்று கிளையன்ட் சந்தேகமாகக் கேட்டார்.

"சாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ் ... நெட்வொர்க் கொஞ்சம் ஸ்லோவா இருக்கு," என்று கோபி சமாளிக்க முயன்றான். நல்லவேளையாக கிளையன்ட் அதை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. அடுத்த சில நிமிடங்களில், மீட்டிங் சூடுபிடித்து நன்றாக முன்னேறியது. புராஜெக்ட் டெலிவரி, டெட்லைன் என விவாதம் விறுவிறுப்பாகச் சென்றது. கோபி தன் வேலையில் காட்டிய அந்தத் தெளிவும் வேகமும், அவன் ஒரு தேர்ந்த 'புராஜெக்ட் மேனேஜர்' என்பதை அங்கிருந்த நண்பர்களுக்கு நிரூபித்தது.

காரின் ஜன்னல் ஓரம் நின்றிருந்த ரமேஷ், கோபிக்கு உதவி செய்வதாக நினைத்துக்கொண்டு, "டேய் கோபி, இந்தாடா தண்ணி பாட்டில்... ரொம்ப நேரமா பேசிட்டு இருந்தல, தொண்டை காய்ஞ்சிருக்கும்," என்று உரக்கச் சொல்ல, அது அப்படியே ஜூம் மீட்டிங்கில் ஒலித்தது.

கிளையன்ட் குழப்பத்துடன், "ஈஸ் தட் அ வாட்டர்-பிரேக் நோட்டிபிகேஷன்?" என்று கேட்க, கோபி தன் நண்பனை ஒரு

கொலைவெறிப் பார்வை பார்த்தபடி, "எஸ் சார், மை டீம் இஸ் வெரி ஹெல்த் கான்ஷியஸ்," என்று சமாளித்தான்.

கோமதியின் கதையைக் கேட்டுக் கலங்கிய நண்பர்கள், இப்போது கோபியின் ஐடி கஷ்டத்தைப் பார்த்துச் சிரிப்பதா இல்லை அழுவதா என்று தெரியாமல் காரின் வெளியே நின்று ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

* * * * *

ஒரு மாதத்திற்குப் பிறகு, ஞாயிற்றுக்கிழமை மாலை நேரத்து பரபரப்பில் அந்த சூப்பர் மார்க்கெட் திணறிக்கொண்டிருந்தது. கார்த்திக் கையில் ஒரு கூடையுடன், ஒவ்வொரு அடுக்காகத் தீவிரமாக எதையோ தேடிக்கொண்டிருந்தான். அவன் கண்கள் அலமாரிகளில் இருந்த லேபிள்களை மிகக் கவனமாகப் படித்துக்கொண்டிருந்தன.

"டேய் கார்த்திக்! என்னப்பா இங்க?" - பின்னால் இருந்து ஒரு குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தால், அவர்களது அலுவலகத்தில் வேலை செய்யும் மற்றொரு சக ஊழியரான வினோத் நின்று கொண்டிருந்தான்.

"ஓ! வினோத், வாப்பா... சும்மா வீட்டுக்குத் தேவையான சில பொருட்கள் வாங்க வந்தேன்," என்றான் கார்த்திக், மீண்டும் தன் தேடலைத் தொடர்ந்தபடி.

வினோத் அவன் கூடையைப் பார்த்தான். அதில் காய்கறிகளும் பழங்களும் மட்டுமே இருந்தன. "என்னப்பா, இன்னும் மெயின் ஐட்டமே வாங்கல? இதோ இந்த லாஸ்ட் ரோ-ல தான் பால், தயிர், பனீர் எல்லாம் இருக்கு. சீக்கிரம் எடு, ஸ்டாக் தீரப்போகுது," என்றான் வினோத் உதவியாக.

கார்த்திக் மெல்ல சிரித்துவிட்டு, "இல்ல வினோத்... நான் வேற தேடிட்டு இருக்கேன். இந்த கடையில 'தேங்காய்ப் பால்' அப்புறம் 'நிலக்கடலைத் தயிர்' எங்கயாவது பார்த்தியா? கொஞ்ச நேரமா தேடுறேன், கிடைக்கல," என்றான்.

வினோத் குழப்பத்துடன் கார்த்திக்கைப் பார்த்தான். "என்னது? தேங்காய்ப் பாலா? நிலக்கடலைத் தயிரா? ஏன்டா... நல்ல பசும்பாலும், ஆவின் தயிரும் இங்கயே பிரெஷ்ஷா கிடைக்கும்போது, எதுக்கு இந்த வேண்டாத வேலை? உடம்புக்கு ஏதாவது முடியலையா? இல்ல புதுசா ஏதாவது டயட் ஆரம்பிச்சிருக்கியா?" என்று கிண்டலாகக் கேட்டான்.

கார்த்திக் அந்த அலமாரியில் இருந்த ஒரு சோயா-பால் பாக்கெட்டை எடுத்து அதன் பின்னால் இருந்த பொருட்களின் – இன்கிரிடியன்ட்ஸ் - விவரங்களைப் -படித்துவிட்டு மீண்டும் உள்ளே வைத்தான். வினோத்தின் கேள்விக்கு அவன் உடனே பதில் சொல்லவில்லை.

அவன் மனக்கண்ணில் சில மாதங்களுக்கு முன்னால் மாவரம் கிராமத்தில், கொடைக்கானல் சுற்றுலா போகும்போது கோபி சொன்னஅந்த 'கோமதியின் கதை' நிழலாடியது. ஊசி போட்டு கறக்கப்படும் பால், தாயிடமிருந்து பிரிக்கப்பட்டு கதறும் ராஜா கன்றுக்குட்டி, லட்சுமி பசுவின் அந்த மௌனமான கண்ணீர்... எல்லாம் அவன் காதுக்குள் ரீங்காரமிட்டன.

வினோத் விடாமல் கேட்டான், "சொல்லுப்பா... எதுக்கு இந்தத் தேடல்? வீட்ல விசேஷமா?"

வினோத்தின் தோளில் தட்டிவிட்டு மென்மையாகச் சொன்னான். "பரவாயில்லை வினோத், நீ உன் ஷாப்பிங்கைப் பாரு. நான் ஏன் இதையெல்லாம் தேடுறேன்னு இப்போ உனக்குச் சொன்னா புரியாது. சில விஷயங்களை நாம தெரிஞ்சுக்கிற வரைக்கும் தான் அது சாதாரண விஷயம்... ஆனா ஒருமுறை உண்மை தெரிஞ்சுட்டா, அதுக்கப்புறம் நம்மால பழையபடி இருக்க முடியாது. நீ கிளம்பு, நான் பாத்துக்கிறேன்."

கார்த்திக் நகர்ந்து செல்ல, வினோத் புரியாமல் அவனைப் பார்த்தபடி நின்றான்.

கார்த்திக் கூடையைத் தூக்கிக்கொண்டு அடுத்த வரிசைக்கு நகர்ந்தான்.

தூரத்தில் ‘மில்க் அண்ட் டெய்ரி’ என்று போடப்பட்டிருந்த குளிரூட்டப்பட்ட பெட்டியைப் பார்த்த கார்த்திக், ஒரு கணம் கண்கள் கலங்கி, பின் உறுதியோடு தன் பார்வையைத் திருப்பிக்கொண்டு நடந்தான்.

* * * * *

நீங்கள் இதுவரை படித்த இந்தப் உணர்ச்சிகரமான பக்கங்கள் வரிகள், வெறும் கற்பனையோ இமேஜினேஷனோ இல்லை. இவை பாலும், தோலும், ரத்தமும் சதையும் கலந்த நிஜங்கள். போத்தனூர்யின் இறைச்சிக் கூடத்திற்கு மிக அருகிலேயே தனது இளமைக் காலத்தின் பன்னிரண்டு ஆண்டுகளைக் கழித்த ஒருவனின் நேரடி சாட்சியமே இந்தக் கதை. அதனால், கோபியின் போத்தனூர் அனுபவங்கள் வெறும் கற்பனையில்

பிறந்த கதை என்று நிராகரித்து விட வேண்டாம். அவை நேருக்கு நேர், தினமும் பார்க்கப்பட்ட உண்மையான ரத்தம் நிறைந்த மன வேதனை தரும் காட்சிகள்.

ஆனா நமக்கு பால் ரொம்ப முக்கியம் இல்லையா? கால்சியம், புரோட்டீன் இதெல்லாம் எங்கிருந்து கிடைக்கும் என்பதற்குப் பல டாக்டர்களே பதில் சொல்லத் தொடங்கிவிட்டார்கள். குழந்தை நல மருத்துவராகச் சென்னையில் பணிபுரியும் டாக்டர் ஜெகதீசன் தன்னுடைய 'மெல்லக் கொல்லும் பால்' என்ற நூலில் பால் ஒரு தேவையற்ற உணவு மற்றும் நோய்களை உருவாக்கும் உணவு என்பதைத் தெள்ளத் தெளிவாக விளக்கியிருக்கிறார். இந்தக் கதையினில் வரும் டாக்டர் ஜெகதீஷ் இவரே!

ஒவ்வொரு பால் பாக்கெட்டிலும் ஒரு பசு மாடு மகிழ்ச்சியாய் இருப்பது போல் நாம் பார்க்கிறோம். ஆனால் அந்த மகிழ்ச்சியாய் இருக்கும் மாடுகள் நிஜத்தில் எங்கும் இல்லை; அது வெறும் பால் பாக்கெட் விளம்பரம் மட்டுமே.

நாம் காலையிலும் மாலையிலும் வாங்கும் அந்த பாக்கெட் பாலுக்குப் பின்னால் இருக்கும் கொடூரமான உண்மைகளைத் தெரிந்துகொள்ள நம் மனம் விரும்புவதில்லை. ஏனென்றால் நாம் காபிக்கும், டீக்கும், பாலுக்கும், தயிருக்கும் அடிமை ஆகிவிட்டோம். அவை நம் வாழ்வில் இரண்டற, பிரிக்க முடியாமல் பின்னிப் பிணைந்து விட்டது. இந்தச் சிக்கலை எடுப்பது எனக்கும், உங்களுக்கும், எல்லோருக்கும் கடினம், ஆனால் இந்த உண்மையை அறிந்தால் அவை எளிதானவையே.

ஒவ்வொரு பசுவும் அதன் விருப்பத்திற்கு மாறாக, இரும்புச் சட்டங்களில் பிணைக்கப்பட்டு, ஆர்டிபிஷியல் இன்செமினேஷன் அல்லது செயற்கைக் கருத்தரிப்பு செய்யப்படுகிறது. இந்தத் துறையில் இந்த சட்டங்களுக்குப் பெயர் ரேப் ராக். ஆம், தெய்வமாக நாம் வணங்கும் ஒரு ஜீவன், அதன் அனுமதியின்றி சித்திரவதை செய்யப்படுவதே இன்று பால் உற்பத்தியின் அடிப்படை ப்ராசஸ். நாம் இதை அறிவோம்.

கன்று குட்டி பிறந்த சில நிமிடங்களிலேயே தாயிடமிருந்து பிரிக்கப்படுகிறது. பால் கறக்கும் இயந்திரங்கள் பசுவின் மடியிலிருந்து கடைசிச் சொட்டுப் பால் வரை உறிஞ்சி எடுக்கின்றன. அது ஒரு உயிர் என்பதை மறந்து, அதனை ஒரு பால் சுரக்கும் இயந்திரமாகவே நாம் மாற்றி இருக்கிறோம் இன்று.

இதில் ராஜாவைப் போன்ற ஆண் கன்று குட்டிகளின் நிலை இன்னும் பரிதாபமானது. பால் தர முடியாத இந்த ஆண் ஜீவன்கள்

கைவிடப்படுகின்றன அல்லது இறைச்சிக்காகக் கொல்லப்படுகின்றன. இந்தக் கதையில் ஒரு ராஜா காப்பாற்றப்பட்டாலும், நூற்றுக்கணக்கான ராஜாக்கள் தினசரி போத்தனூரில் பார்த்த மாட்டுத் தொழுவம் மாதிரி உள்ள இடங்களில் கொல்லப்படுகின்றனர்.

ஒரு பசுவின் இயற்கை ஆயுட்காலம் பதினெட்டு முதல் இருபது ஆண்டுகள். ஆனால், தொடர்ந்து, திரும்ப, திரும்ப கன்று ஈன வைக்கப்படுவதால், அதன் உடல் நலிந்து, மெலிந்து வெறும் ஆறு அல்லது எட்டு ஆண்டுகளிலேயே அதன் உற்பத்தித் திறன் முடிகிறது. அதன் பிறகு, வாழ்நாள் முழுவதும் திரும்பத் திரும்ப கருவுற்று கன்று ஈன்று பால் கொடுத்த அந்தத் தாய்க்கு, நாம் கொடுக்கும் பரிசு என்ன தெரியுமா? விற்பனை, வதை, ரத்தம் சிந்தும் கொடூர மரணம்!

பசுக்களைத் தெய்வமாக வணங்குவதாகப் பெருமைப்படும் ஒரு நாட்டில் தான், அந்த இனம் மிகப்பெரிய அநீதிக்கு உள்ளாக்கப்படுகிறது.

கோபியைப் போல, நாமும் இந்த உண்மைகளை உணர்ந்து, தெரிந்துகொண்டு, நம் லட்சுமிகளையும், கோமதிகளையும், கோமாதாக்களையும், காமதேனுக்களையும், நந்தினிகளையும் காப்பாற்ற முன்வருவோமா? நம் ராஜக்களையும், வேலன்களையும், காளைகளையும் காப்பாற்ற முன்வருவோமா? நானும், நீங்களும் பதில் சொல்லுவோம். காலமும் பதில் சொல்லட்டும்.

* * * * *